# POLITICAL SCIENCE
# TEST - 3
# Part - 3

| | | |
|---|---|---|
| 11th Civics | Unit 10 | பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை |
| | Unit 11 | தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம் |
| | Unit 12 | உள்ளாட்சி அரசாங்கங்கள் |
| | Unit1 3 | சமூக நீதி |
| | Unit 14 | தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி |
| | Unit 15 | தமிழக அரசியல் சிந்தனைகள் |

# $11^{TH}$அரசியல் அறிவியல்
# Vol – II
## அலகு 10 - பொதுக்கருத்து மற்றும் கட்சி முறை

**அறிமுகம்:**

இந்த அலகு உலகின் பல்வேறு நாடுகளில் பின்பற்றப்படும் கட்சி முறைகளின் பொருள் மற்றும் அதன் பரிணாம வளர்ச்சியினை பற்றி கவனம் செலுத்துகிறது. நவீன மக்களாட்சியில் கட்சி முறைகளின் தோற்றத்தை ஆராய்வதுடன், அரசியல் கட்சிகளின் இயல்பு, பண்புகள், வகைகள் மற்றும் குறிப்பாக மக்களாட்சியில் அதன் செயல்பாடுகளை விளக்க முயல்கிறது. இந்த பொது மின்னணியில் இருந்து குறிப்பாக தமிழ்நாட்டை கவனத்தில் கொண்டு, தேசிய மற்றும் மாநில அளவில் உள்ள கட்சி முறைகளின் பரிணாம வளர்ச்சியை பற்றி கவனம் செலுத்துகிறது. மேலும் இந்த அலகில் பொதுக்கருத்தின் பொருள், அதன் முக்கியத்துவம் மற்றும் ஓர் மக்களாட்சியின் திறன்மிக்க செயல்பாட்டில் அதன் பங்கினை பற்றி விளக்குகிறது.

**பொதுக்கருத்தினை வரையறுத்தல்:**

பொதுக்கருத்து ஓர் உளவியல் மற்றும் சமூகத்தில் உள்ள அனைவரின் நம்பிக்கைக்கும், இசைவான தனிநபரின் நடத்தை சார்ந்த சமூக செயல்முறையாகும். சுருக்கமாக, இது மக்களின் கூட்டு பார்வை.

அவர்களுடைய அணுகுமுறை மற்றம் கருத்துக்கள் ஆகும்.

இது அரசாங்கம், அரசியல் குறித்த முன்னுரிமைகள் சார்ந்த மக்களின் கூட்டு விருப்பமாகும். மக்களாட்சி என்பது அனைவரின் ஒன்றிணைந்த தனிகருத்துகளும், பொதுக்கருத்துகளும், தனி நபர்க் கருத்துகளை விட முக்கியமத்துவம் வாய்ந்தது என்ற கூற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒன்றிணைந்த குழுக்கள், அரசாங்க தலைவர்கள், ஊடக உயர்குடியினர் ஆகியோர் பொதுக்கருத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவும், கட்டுப்படுத்தவும் முடியும் என்று வேறு சிலர் கூறுகின்றனர்.

பொதுமக்களின் கருத்துகளின் மீத ஊடகங்களின் தாக்கம் உள்ளது. உண்மையில், மக்களாட்சி அதன் அதிகாரத்துவத்தை மக்களிடமிருந்து பெறுகின்றது. பொதுக்கருத்து என்பது ஒரு தனிநபரின் கருத்து அல்ல. அந்நபர் மிகவும் மதிக்கப்படும் நபராகவும் இருக்கலாம். இது ஒரு தனிப்பட்ட கருத்தும் அல்ல. அவர் எத்தகைய நிபுணர்த்துவத்தைப் பெற்றிருப்பினும். பொதுக்கருத்து என்பது ஒரு பொது விவகாரத்தில் ஒன்றோ அல்லது பல பிரிவு மக்களோ ஒருங்கிணைந்த, ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும். இது உண்மையில் பொதுக்கருத்தாகும்.

**பொதுக்கருத்தின் பங்கு:**

மக்களாட்சி வெற்றிகரமாக செயல்படுவதற்கு பொதுக்கருத்து என்பது ஓர் அத்தியாவசிய கூறாகும். அங்கே குடிமக்களின்

**பொதுக்கருத்து:**
மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான மது தண்டவதேயின் கட்டுரையை கவனமாக படித்து கேள்விகளுக்க பதிலளிக்க.

**தேசத்துடனான காந்தியின் உரையாடல்:**

மகாத்மா காந்திக்க தண்டியாத்திரை என்பது வன்முறையற்ற ஒரு போராட்ட ஆயுதம் மட்டும் அல்ல. அது செல்லும் வழியிலுள்ள மக்களுடன் பேசுவதற்கும், தொடர்பு கொள்வதற்குமான ஒருவழி முறையாக இருந்தது.
லாகூரில் ரவரி ஆற்றின் கரையில் 1929 ஆம் ஆண்டு டிசம்பர் 31ல் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் 44-வது மாநாட்டில் முழு சுதந்திரத்திற்கான கோரிக்கை விடுக்கப்பட்டு சுதந்திரத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு தலைமை தாங்கினார். மாநாட்டில் மகாத்மா காந்தி தீர்மானத்தை நிறைவேற்றும்பொழுது மறக்க முடியாத ஒரு சொற்பொழிவாற்றினார்.

காந்தி வெறுமனே அந்த உரையை வழங்குவதுடன் இல்லாமல், மார்ச் 12, 1930 அன்று சபர்மதி ஆசிரமத்திலிருந்து புகழ்பெற்ற தண்டி யாத்திரையை துவக்கினார். ஏப்ரல் 6, 1930 அன்று குஜராத்தின் கடலோர கிராமமான தண்டியில் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் உச்ச நிலையை அடைந்தது.

காந்திக்கு தண்டி யாத்திரை மீதும், உப்பு சத்தியாகிரகத்தின் மீதும் ஒரு தெளிவான எண்ணமும், செயல்திட்டமும் இருந்தது. அவர் அந்த யாத்திரை கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்பதற்காக அதிக எண்ணிக்கையையும் விரும்பவில்லை. அதேசமயம் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாத சிறிய எண்ணிக்கையையும் ஆதரிக்கவில்லை. இதனால் வல்லபாய் பட்டேலின் மாபெரும் எண்ணிக்கையிலான பேரணி டில்லியை நோக்கி அணிவகுக்கும் பரிந்துரையை நிராகரித்தார். அதே சமயம் இணை அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற நேருவின் அன்பான கருத்தையும் அவர் ஏற்கவில்லை. மாறாக 78 அர்பணிப்ப நிறைந்த ஒழுக்கமான சத்தியாகிரகிகளுடன் சபர்மதியிலிருந்து தண்டி கிராமத்திற்கு உப்பு சத்தியாகிரகத்தை நடத்துவதற்கான யாத்திரையை முன்மொழிந்தார்.

காந்தி சத்தியாகிரகத்தின் சின்னமாக உப்பைத் தேர்ந்தெடுத்தார். ஏனென்றால் அது நாட்டின் உணவு நுகர்வில் மிகவும் பொதுவான அளவில் இருந்தது. செல்வந்தர்களுக்கு உப்பு சுவைக்கு தேவைப்பட்டது. பரம ஏழை உப்பைத் தண்ணீரில் கலந்து கொள்வதன் மூலம் அவர்களது உலர்ந்த ரொட்டியை அந்த உப்புநீர் கலவையில் நனைத்து உணவாக்கிக் கொள்ள முடியும். இது செலவந்தர்களின் சுவையான காரக்குழம்பிற்கு மாற்றாக ஏழைகளுக்கு இருந்தது.

தண்டியாத்திரையின் போது சில உற்சாகமிகு அபிமானிகள் காந்திக்கும் அவரது சக சத்தியாகிரககிகளுக்கும் அதிக எண்ணிக்கையில் பழம், பால் போன்றவைகளை கொண்டு வந்தனர். இருப்பினும் காந்தி தங்கள் யாத்திரையில் ஏழைகளுக்காக போராடுவதற்கான உன்னதமான நோக்கில் ஈடுபட்டுள்ளவர்கள் இத்தகைய ஆரம்பர விருந்தோம்பலில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக்கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில் அற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். காந்தி தண்டியாத்திரையை அநீதிக்கு எதிரான வன்முறையற்ற ஒரு போராட்ட ஆயுதமாக மட்டுமல்லாமல், அணிவகுப்பு வழியிலான மக்களுடன் உரையாடலுக்கும் தொடர்புக்குமான வழியாகவும் பார்த்தார். தண்டிக்கு செல்லும் வழியில், காந்தி மற்றும் அவருடன் வந்த சத்தியாகிரகிகள் பல்வேறு கிராமங்களில் இரவில் ஓய்வெடுத்தனர். சத்தியாகிரகிகள், கிராமங்களில் வசிப்பவர்கள் உடன் வந்த பத்திரிக்கையாளர்கள், ஆகியோருடன் சத்தியாகிரகத்தின் பின்னணி மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல பிரச்சனைகள் பற்றி பேசுவதற்கு இந்த இடைப்பட்ட காலத்தை அவர் பயன்படுத்தினார். அவர் இந்த தண்டியாத்திரையை விழிப்புணர்வு மேற்கொள்ளும் முறையாக பார்த்தார். யாத்திரை நடந்த 25 நாட்களில் மக்களுடன் இந்த வகையான உரையாடலை நிகழ்த்திக் கொண்டிருந்தார். யாத்திரையினால் ஈர்க்கப்பட்ட பத்திரிகையாளர்கள் ஒவ்வொரு நாளும் விரிவான அறிக்கையை அனுப்பினர். இவை பத்திரிகைகள் மற்றும் இதழ்களில் வெளியிடப்பட்டன. இவ்வாறு தண்டி யாத்திரையில் காந்தி பேசியது தேசத்துடனான உரையாடலாக மாறியது.

கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்படுகிறது. மக்களின் கருத்துகளைப் புறக்கணித்து எந்த ஒரு அரசாங்கமும் நிலைத்திருக்க முடியாது.

**ஓர் உண்மையான பொதுக்கருத்தை உருவாக்குவதற்குத் தடையாக இருப்பவை:**

மக்களின் கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளின் உண்மையான பிரதிபலிப்பாக பொதுக்கருத்து இருக்க வேண்டும். இருப்பினும் உண்மையான பொதுக்கருத்திற்கு சில தடைகள் உள்ளன.

**சுயநல விருப்பங்கள் (தேசத்தை விட மேலானது எனது நலன்):**

மக்கள் தங்களின் சுயநலத்தினை முன்னுறுத்தி தங்கள் நாட்டினுடைய விவகாரங்களைக் காட்டிலும் தனிப்பட்ட விவகாரங்களில் முன்னேற்றத்தை காண்பதற்கு நகரச் செய்கிறது. ஒற்றுமை, அர்ப்பணிப்பு, ஒருமைப்பாடு மற்றும் தேசத்தின் முன்னேற்றம் தொடர்பான முக்கிய பிரச்சனைகளை மக்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

**எழுத்தறிவின்மை**: கல்வியறிவு உடைய பொறுப்புள்ள பொது மக்கள், பயமோ அல்லது தயவோ இல்லாமல் தங்கள் உரிமையைக் கையாள்வதன் மூலம் நல்ல குடிமக்களை உருவாக்குகின்றனர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வியறிவற்ற மக்கள் பெரும்பாலும் கட்சித் தொண்டர்களால் தவறாக

வழிநடத்தப்பட்டு உணர்வுகள், ஆதாயங்கள் மற்றும் வாக்குவன்மை (பேச்சாற்றல்) ஆகியவற்றால் ஏமாற்றப்படுகிறார்கள். ஓர் தரமான பொதுக்கருத்து என்பது அறிவும் கருத்துச் சுதந்திரம் இருக்கும் சூழலில் தான் உருவாக முடியும்.

வறுமை: எந்தவொரு நாட்டிலும் ஏழைகள் அரசியல் தலைவர்களின் பொய்யான வாக்குறுதியால் எளிதில் கவரப்பட்டு, தங்களது வாக்குகளை அவர்களுக்கு அளித்துவிடுகின்றனர். வறுமையை ஒழிப்பதன் மூலம் மட்டுமே ஓர் தரமான குறிக்கோளுடைய பொதுக்கருத்து என்பது சாத்தியமாகும்.

**இனவாத மற்றும் சாதி அடிப்படையிலான பாகுபாடு:**
சாதி, சமயம் மற்றும் மதம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாட்டைத் தூண்டும் விவாதங்கள் மக்களிடையே பிளவுகளை உருவாக்குகின்றன. அவை பெரும்பாலும் அரசியல் கட்சிகளால் தங்களின் நன்மைக்காக கையாளப்படுகின்றன. நாட்டில் பயனுள்ள வகையில் செயலாற்றிக் கொண்டிருக்கும் மக்களாட்சியை சமூக நல்லிணக்கமின்மை சீரழிக்கின்றது.

**பேச்சு மற்றும் ஊடக சுதந்திரம்:**

நடுநிலையான, குறிக்கோள்மிக்க மற்றும் சுதந்திரமிக்க ஊடகமும், தனிமனித பேச்சுரிமைக்கு மதிப்பளிக்கின்ற சட்டமன்றமும் ஆரோக்கியமான கருத்துக்களை உருவாக்குவதில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்களின் சுதந்திரத்தை மதித்து செய்தி அறிக்கைகளை பொறுப்புடன் வெளியிடுகின்ற ஊடகங்கள் பொதுமக்களின் கருத்தை முதிர்வுடன் உருவாக்குவதற்கான முக்கியமான அடிப்படை ஆகும்.

**அரசியல் கட்சிகளின் வரையறை:**

அரசியல் கட்சிகள் மக்களாட்சி முறை அமைப்புக்கு இன்றியமையாத கருவியாகுமட். அவைகள் திட்டவட்டமான லட்சியங்கள் மற்றும் செயல்திட்டத்துடன் உருவாக்கப்படுகின்றன. அவை பொது மக்களிடம், சமுதாயம் மற்றும் அரசுக்கு உள்ள பிரச்சனைகளைப் பற்றி விழிப்பூட்டுவதுடன் மாற்றுத் திட்டங்களையும் பிரிந்துரைக்கின்றன. பரப்புரையின் மூலம் மக்கள் அரசியல் பிரச்சினைகளை அறியும்படி செய்வதுடன் தங்களின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களுக்கான ஆதரவையும் பெறுகின்றன.

சட்டமன்றங்களில் வாக்காளர்களின் பிரதிநிதிகளாக ஒருங்கிணைக்கப்பட்ட கருத்துகளை எடுத்துரைக்கின்றனர். நாடாளுமன்ற மக்களாட்சியில் சட்டமன்றத்தில் பெரும்பான்மை இடங்களை வென்ற கட்சி அல்லது கட்சிகளின் கூட்டணி அமைச்சரவையை உருவாக்குகிறது. (எ.கா) இங்கிலாந்து, இந்தியா, குடியரசுத்தலைவர் முறை மக்களாட்சி நாடுகளில் தலைமை நிர்வாகிகள் (அதிபர்) கட்சி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் (எ.கா. அமெரிக்கா, பிரான்ஸ்), எந்தவொரு முறைமையிலும் அரசியல் கட்சிகள் அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையில் பாலமாக செயல்படுகின்றனர். மக்களாட்சியில் பொதுக்கருத்துக்கள் அரசியல் கட்சிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகளின் பட்டியல் பின்வருமாறு உள்ளன.**

- கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடும்
- கட்சிகள் வேறுபட்ட கொள்கைகளையும் திட்டங்களையும் முன்வைக்கும்.
- கட்சிகள் நாட்டிற்கான சட்டங்களை உருவாக்குகின்றன.
- கட்சிகள் அரசாங்கத்தை அமைத்து செயல்படுகின்றன.
- எதிர்க்கட்சிகளாகவும் கட்சிகள் பங்கு வகிக்கின்றன.
- கட்சிகள் பொதுக்கருத்துகளை வடிவமைக்கின்றன.
- அரசாங்கத்தின் நலத் திட்டங்களை மக்கள் பெறுவதற்கு கட்சிகள் உதவுகின்றன.

ஒரு மாதத்திற்கு செய்தித்தாள்களைப் படித்து, அரசியல் கட்சிகளின் பல்வேறு செயல்பாடுகள் தொடர்பான செய்திகளை சேகரிக்கவும்.

பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு இடையே தொடர்ச்சியான போட்டி உள்ளதுடன் இந்த போட்டி மக்களாட்சியினை முதிர்ந்த செயல்பாட்டை உறுதி செய்கிறது.

**அரசியல் கட்சிகளின் பணிகள்:**
ஒரு மக்களாட்சியில் அரசியல் கட்சிகள், அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஒரு ஒருங்கிணைந்த இணைப்பாக செயல்படுகின்றன.

அரசியல் கட்சிகள் மக்களை அரசியல் முன்முயற்சிகள் மற்றும் பொது அனுபவங்களை நோக்கி நகர்த்தும் அடித்தளமாக செயல்படுகின்றன. அரசியல் கட்சிகள் வாக்குகளை அணிதிரட்டும் நோக்கத்துடன் மக்களின் அரசியல் சிந்தனை மற்றும் கருத்துக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அரசியல் பொருளாதார மற்றும் சமூக செயல்பாட்டிற்கான ஓர் தளத்தை வழங்குவதன் மூலம் எதிர்கால மாநில மற்றும் தேசிய தலைமைகளுக்கு பயிற்சிக் களமாக செயல்படுகின்றன. நீண்ட காலமாக அவர்கள் கட்சிக்குள்ளேயும், எதிர்க்கட்சிகளிலிருந்தும் கடுமையான விவாதம் மற்றும் வினா எழுப்புவதன் மூலம் தங்களின் நடவடிக்கைகளுக்குத் கட்சித்தலைவர்கள் பொறுப்புணர்வுடன் இருக்கிறார்கள். இவ்வாறு மக்களுக்கு பலதரப்பட்ட வேட்பாளர்களையும், கொள்கைகளையும், தேசத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கான அணுகுமுறைகளையும் கட்சிகள் வழங்கியுள்ளன.

மக்களாட்சியில் அவர்களுடைய நம்பிக்கையானது மாற்றம் மற்றும் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான அறிவை வலுவூட்டுகின்றது. இதன்மூலம் மக்களில் பெரும்பான்மையினர் அவர்களின் ஆட்சி வழிவகையில் தாங்கள் விரும்பும் ஓர் மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர்.

**கட்சி முறை:**

கட்சி முறை என்பது அரசாங்கங்களை நடத்துவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் உதவுகிறத. மேலும் அவை மக்களாட்சியின் திறன் வாய்ந்த செயல்பாட்டிற்கும் தேவையானதாக இருக்கின்றன. கட்சிமுறை என்பது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான கட்டுப்பாடுகள் மற்றும் அதிகாரச் சமநிலையை வழங்கும் முறையாகும். பொது மக்களிடையே ஆதரவைக் பெறுவதன் முலம் கட்சிக்குள்ளேயே தலைமைத்துவத்திற்கும். கலந்துரையாடலுக்கும் ஓர் கட்டமைப்பினை அந்தந்த கட்சிகளின் குறிக்கோள் மற்றும் செயல்திட்டப்படி வழங்குவதன் மூலம் அது நிலையான மற்றும் நல் ஆட்சிக்கு உதவும்.

| |
|---|
| ஓர் அரசியல் கட்சி என்பது மக்களின் ஒன்றிணைந்த ஒரு குழுவாக தேர்தலில் போட்டியிட்டு அரசாங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. அவர்கள் சமுதாயத்திற்கான கூட்டு நலனை ஊக்குவிப்பதற்கான சில கொள்கைகளையும், திட்டங்களையும் ஒப்புக்கொள்கிறார்கள். (சின்னங்கள் அல்லது பல்வேறு அரசியல் கட்சிகளின் கொடி) ஓர் அரசியல் கட்சியின் மூன்று கூறுகள் - தலைவர் - செயல் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் |

**கட்சி முறைகளின் வகைகள்:**

பல்வேறு வகையான கட்சி முறைகள் உலகெங்கிலும் உள்ள பல்வேறு பகுதிகளிலும் நடைமுறையில் உள்ள குறிப்பிட்ட கூறுகளை பொறுத்து பரிணாமவளர்ச்சியல் உருவாகியுள்ளன. ஓர் மக்களாட்சியின் தரமானது எப்படி அரசாங்கம் அதன் மக்களை பிரதிநிதித்துவம் செய்கிறது. எப்படி அரசாங்கம் அதன் மக்களுக்கு பொறுப்புடன் இருக்கிறது. எப்படி மனித உரிமைகள் மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் சமூக நிலையிலும், வாய்ப்புக்களிலும் சமத்துவத்தை உறுதி செய்வதுடன், அரசியல் பங்கேற்பில் மக்களுக்கு சமமான வாய்ப்புகளையும் ஏற்படுத்துகிறது. பல விதமான கட்சி முறைகள் இந்த சிக்கல்களை பல்வேறு வழிகளில் அணுகுவதன் மூலமாக பின்பற்றப்படும் மக்களாட்சியின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது.

**ஒரு கட்சி முறை:**

ஒரு கட்சி முறையில் ஓர் அரசியல் கட்சி அரசாங்கத்தை உருவாக்கும் உரிமையை பெறுகிறது. இது எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத அரசமைப்பிலிருந்து பெரும்பாலும் பெறப்படுகிறது. ஒரு கட்சி முறையின் கீழ் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குறைவான பங்கேற்பு மற்றும் பலவீனமான பொறுப்புகடைமை உள்ளது. (எ.கா) சிங்கப்பூர், (வடகொரியா), கொரிய தொழிலாளர் கட்சி, வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி (வியட்நாம்), கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சி (கியூபா), கம்யூனிஸ்ட் கட்சி (சீனா). ஒரு கட்சி முறையானது மக்களாட்சியிலான வெளிப்பாடுகளுக்கு போதுமான வாய்ப்புகளை வழங்காததுடன் மாற்றத்திற்கான பரவலான வரையெல்லையையும் வழங்கவில்லை. உதாரணத்திற்கு 1920-களில் தேசியவாத இராணுவத்தை ஆதரித்து பாசிச இயக்கங்கள் ஹிட்லரின் தலைமையில் ஜெர்மனியிலும், முசோலினியின் கீழ் இந்தாலியிலும், ஜெனரல் பிராங்கோவின் கீழ் ஸ்பெயினிலும் அதிகாரத்தை கைப்பற்றியதுடன் அரசியல் கட்சிகள் உருவாவதைத் தடைசெய்தன.

**இரு கட்சி முறை:**

இரு கட்சி முறையில், இரண்டு அரசியல் கட்சிகள் வேறுபட்ட நலன்களுடன், பெரும்பான்மையை பெற்று அரசாங்கத்தை அமைப்பதற்கான சம வாய்ப்பைக் கொண்டுள்ளன. இருகட்சி முறையில் பெரும்பான்மை பெறும் கட்சி ஆளும் கட்சியாகவும் சிறுபான்மை கட்சி, எதிர்க்காட்சியாகவும் உருவாக்குகின்றன. இரு கட்சி முறையில் அரசியல் தலைவர்களிடம் மிக அதிக பொறுப்புணர்வும், அதிக அரசியல் பங்கேற்பும் உள்ளது. எதிர் கட்சிகள் நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் முலமாக தங்களை நீக்கும் அச்சுறுத்தல் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக இருப்பதனால் ஆட்சியில் இருப்பவர்கள் அதிக அளவிலான பொறுப்பான நடத்தை மற்றும் செயல்பாட்டினை மேற்கொள்கின்றனர்.

அரசியல் சூழ்நிலை பெரிதும் துருவப்படுத்தப்படுவதால், ஓர் கட்சி அதிகாரத்தை இழந்தபின் தேசிய நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய கடுமையான மாற்றங்கள் ஏற்படலாம். இருகட்சி முறையின் எடுத்துக்காட்டாக அமெரிக்கா (மக்காட்சிவாதிகள் / குடியரசுவாதிகள்) மற்றும் இங்கிலாந்து – (பழமைவாதிகள் மற்றும் தாராளவாதிகள்).

எவ்வாறாயினும், எந்தவொரு நாட்டிலும், கட்சிகளின் எண்ணிக்கையில் எந்த அரசமைப்ப சார்ந்த கட்டுப்பாடும் இல்லை. அரசமைப்ப நடைமுறைகள் மற்றும் மக்களின் அரசியல் முதிர்ச்சியே இரு கட்சி முறையின் தோற்றத்திற்கு வழிவகுக்கிறது.

**பல கட்சி முறை:**

பல கட்சி முறையில், பல அரசியல் கட்சிகள் இருப்பதுடன் பெரும்பான்மை பெற்ற கட்சி அல்லது பெரும்பான்மை பெறாத ஒரே நோக்கமுடைய பல கட்சிகளுடனான கூட்டணியின் மூலமாகவும் மக்கள் ஆரதவை வென்றெடுத்து அரசாங்கத்தை உருவாக்குகின்றன. இந்த முறையில் அரசியல் வென்றெடுத்து அரசாங்கத்தை உருவாக்குகின்றன. இந்த முறையில் அரசியல் தலைவர்கள் தொடர்ந்து தங்கள் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களால் உற்றுநோக்கப்படுவதுடன் அரசியல் சமநிலையையும் நிலை நாட்டுகின்றனர். வென்றெடுத்து அரசாங்கத்தை உருவாக்குகின்றன. இந்த முறையில் அரசியல் தலைவர்கள் தொடர்ந்து தங்கள் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களால் உற்றுநோக்கப்படுவதுடன் அரசியல் சமநிலையையும் நிலை நாட்டுகின்றனர். அவர்கள் மக்களுக்கு அதிக பொறுப்பு உள்ளவர்களாகின்றனர். பல கட்சிமுறை வாக்காளர்களுக்கு அரசியல் பங்கேற்பில் பல்வேறு வழிகளையும், பெரிய அளவிலான தேசிய மேம்பாட்டிற்குரிய அரசியல் மாற்றங்களைக் கொண்டு வரும் திறமையையும் வழங்குகிறது.

பிரான்ஸ் மற்றும் இத்தாலியில் உள்ள விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை பல கட்சி முறையிலும் கூட்டணி அமைச்சரவைகளிலும் முடிவடைகிறது. கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, சுவீடன் ஆகிய நாடுகள் பல கட்சி முறையீலான நாடுகளின் எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு:**

மக்களாட்சியின் தரம் மற்றும் செயல்திறனை உறுதி செய்கின்ற விதமாக அரசியல் கட்சிகளின் இருப்பு இருக்கின்றன. அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற கூட்டாட்சிகளில் உள்ள பன்முக

பண்பாடு மற்றும் பன்மை சமூகங்களில் அமைதி ஒற்றுமை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை சமூக – பொருளாதார மேம்பாட்டிற்காக பராமரிப்பது அவசியம் ஆகின்றது. ஒரு கட்சி முறையில் விரைந்து முடிவெடுக்கவும், ஒத்திசைவு நடவடிக்கைகளுக்கு அதிக நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருக்கும் போது இந்த முடிவுகள் பரந்துபட்ட மக்களின் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்தாது. இதனால் அரசாங்கத்திற்கு எதிரான அதிக எதிர்ப்பையும் பேதங்களையும் அது உருவாக்கும்.

கட்சியின் கட்மைப்பு மற்றும் தலைமையின் இயல்பு காரணமாக இரு கட்சி முறைமையில், பொதுவாக பொது கொள்கைகளிலும்,முடிவுகளிலும், ஒத்துழைப்புக்கு மாறாக அரசியல் துருவப்படுத்தப்படுகிறது. பலகட்சி முறையில் கூட்டணி கட்சிகளிடையே கவனமாக கருத்தில் கொண்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அதன் செயல்திறன் உள்ளது. மேலும் விவாதங்களினால் பரஸ்பர அடிப்படையிலான ஒருமித்த கருத்தை அடைவதன் மூலமும் பெரும்பாலும் பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன. எனவே அரசியல் கட்சிகள் மக்களுடைய உரிமைகளையும், சுதந்திரங்களையும் காப்பாற்ற வேண்டியது முக்கியமான ஒரு மக்களாட்சியின் உந்து சக்திகள் ஆகும். பயனுள்ள குடியுரிமை பயிற்சி மற்றும் அதிக குடிமக்கள் பங்கேற்பு மூலம் மக்களாட்சி நாடுகளில் உள்ள இளைஞர்கள் அரசியல் கட்சிகளின் பெரிய பங்கினை வகிக்க முடியும். இதனால் உலக நாடுகளில் முதிர்ச்சியடைந்த மற்றும் பரந்த மக்களாட்சி மயமாக்கலை வளர்க்க முடியும்.

**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு:**

- அரசியல் கட்சிகள் என்றால் என்ன?
- அரசியல் கட்சியின் பொதுப்பதவிகளுக்காக வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து தேர்தலில் நிறுத்துகின்றன.
- அவை கட்சியின் பெயரில் அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒரு தரப்படுத்த முயற்சி செய்கின்றன.
- பல அரசியல் அறிஞர்கள் கட்சிகள் மக்களாட்சிக்கு அவசியம் என்று நம்புகிறார்கள்.
- அரசியல் கட்சி என்பது மக்களது இறையாண்மை மற்றும் பெரும்பான்மை ஆட்சியின் பிரதான கருவியாக ஒரு சிலரால் கருதப்படுகிறது.
- அரசியல் கட்சிகள் ஒழுங்காக வேலை செய்யும் பொழுது, மக்களின் இறையாண்மைக்கான அவசியமான கருவிகளாக அவை இருக்கலாம்.

**நவீன கட்சி முறை**
**அங்கிலாந்தில் கட்சி முறை**

இங்கிலாந்தில் முடியாட்சியின் நிலை மற்றும் அதன் பங்கினை பற்றிய பிரச்சனைகள், கருத்துக்கள் துருவப்படுத்தப்படுவது இரண்டு கட்சிகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது.
அவையாவன:

1. டோரீஸ் அல்லது பழமைவாதிகள்
2. விக்ஸ் அல்லது தாராளவாதிகள்

30 ஆம் நூற்றாண்டில் தொழிலாளர் கட்சி தாராளவாதிகளை விட பெரிய சக்தியாக மாறியது.

**ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கட்சி முறை:**

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நிறுவனத் தலைவர், அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றுக்கு இடையேயான பிரிவினைவாத

**இருகட்சி முறை:**

- உலகம் முழுவதும் அரிதானது ஆகும்.
- தேசிய மற்றும் உள்ளாட்சி அளவில் சமமான நிலையில் உள்ளது.
- தேர்தல் அமைப்பு (முறைமை)

- வெற்றி பெற்றவர் அனைத்தையும் எடுத்துக் கொள்வர்.
- வீணாக்கப்பட்ட வாக்கு
- முன்னுரிமை அடிப்படையிலான அமைப்பு
- தேர்தலுக்கு முன் பரந்த கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன.
- வாக்காளர்களின் கருத்து
- மூன்றாவது கட்சியினருக்கு வாக்குச் சீட்டில் இடம்பெறுவது கடினமாக உள்ளது.

மோதல்களைத் துடைத்தெறிய விரும்பினர். இரப்பினும் அமெரிக்க சுதந்திரத்திற்குப் பின்னர், ஜார்ஜ் வாஷிங்டனின் பதவிக்காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட அமெரிக்க தேசத்தில் முதலில் உருவான கட்சிகளில் வலுவான தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கும் கூட்டாட்சிக் கட்சியும், மாநில தன்னாட்சி உரிமையை ஆதரிக்கும் கட்சியாக குடியரசுக் கட்சியும் இருந்தன. 1828-ல் மக்களாட்சியிலான குடியரசுக் கட்சி என்ற பெயர் மக்களாட்சிக் கட்சியாக மாற்றப்பட்டது. இது அரசின் உரிமைகளை வென்றது. 1854-ல் குடியரசுக் கட்சி கொத்தடிமை முறைக்கு எதிராக தனது போராட்டக் களத்தை அமைத்துக் கொண்டதுடன் அமெரிக்க குடியரசுத் தலைவராக ஆபிரகாம் லிங்கன் பதவிவகித்ததால் அதிக முன்னுரிமையைப் பெற்றது. அமெரிக்காவில் இரு கட்சி முறை என தீர்வு காணப்பட்டதிலிருந்து, குடியரசு கட்சி மற்றும் மக்களாட்சிக் கட்சிகள் அமெரிக்க அரசியல் களத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. இருப்பினும் மூன்றாவது கட்சி வேட்பாளர்கள் அவ்வப்போது வெளிப்பட்டு மறைந்தனர்.

**ஐரோப்பாவில் கட்சி முறை:**
பிரெஞ்சு புரட்சிக்குப் பின்னர் (1789), ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி சக்திகள் பலம் பெற்று அரசியல் கட்சிகள் தோன்றின. ஐரோப்பிய கண்டத்தில் அரசியல் கட்சிகள், பழமைவாதிகள், தாராளவாதிகள் மற்றும் கிறிஸ்துவ மக்களாட்சிவாதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். 19 ஆம் நூற்றாண்டில் சமதர்ம இயக்கங்கள் பிரபலமடைந்து சமூக மக்களாட்சி அல்லது தொழிலாளர் கட்சிகள் உருவாயின. அவை பிரபலமடைந்து தொழிற்சங்க ஆதரவைப் பெற்றன. சோவியத் ரஷ்யாவில், போல்ஷிவிக் கட்சி 1917-ல் நடந்த பொதுவுடைமைப் புரட்சியினை நடத்தி சோவியத் யூனியன் என்ற பிரபலமான சோவியத் சோசலிச குடியரசுகளை உருவாக்கியது. COMINTERN (கம்யூனிஸ்ட் இன்டர்நேஷனல்) அமைப்பு பிற நாடுகளில் பொதுவுடைமைக் கட்சிகளை ஆதரிப்பதன் மூலம் உலக பொது உடமைப் புரட்சியை ஊக்குவிக்கும் பணியைக் மேற்கொள்ள நிறுவப்பட்டது. பனிப்போர் முடிவுக்கு பின் பொதுவுடைமைக் கட்சி ரஷ்யாவில் அதன் புகழை இழந்தது. புரட்சியை ஊக்குவிக்கும் பணியைக் மேற்கொள்ள நிறுவப்பட்டது. பனிப்போர் முடிவுக்கு பின் பொதுவுடைமைக் கட்சி ரஷ்யாவில் அதன் புகழை இழந்தது. இருப்பினும், சில பொது உடமைக் கட்சிகள் இன்னும் மக்களாட்சி அரசுகளுக்குள் அரசாங்கக் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துகின்றன. பொதுவுடைமைக் கட்சிகள் இன்றும் தொடர்ந்து சீனா மற்றும் வட கொரியாவில் எதேச்சதிகார அரசாங்கங்களை கட்டுப்படுத்துகின்றன.

மக்களாட்சி அரசியல் முறைமைகள் தங்கள் குடிமக்களின் அடிப்படையான சமூக – பொருளாதார விழுமியங்களை பிரதிபலிப்பதாகவும், பெரும்பாலும் பரிவும்

எதிர்செயலுமாக இருக்கின்றன. எப்போதும் மதிப்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்வதுடன் அவை அரசியல் கட்சிகளின் மாறுபட்ட நோக்கங்கள் மூலம் மக்களின் அரசியல் கருத்துக்களில் பிரதிபலிக்கின்றன. 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தாக்கத்தை ஏற்படுத்திய பாதிக்கும் சமூக பொருளாதார காரணிகள் தேசியவாத மற்றும் குறுகிய மனப்பான்மை கொண்ட கட்சிகளின் எழுச்சி மூலம் பிரதிபலிக்கப்பட்டன. அவை புலம்பெயர்ந்தோருக்கு எதிராக அவர்களின் உணர்வுகளுக்காக குரல் கொடுத்தல் மற்றும் அகதிகளின் வருகை என்பதனை ஐரோப்பிய கலாச்சாரம், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தலாக பார்த்தனர்.

**தென்னாப்பிரிக்காவின் கட்சி முறை:**

ஆப்பிரிக்க நாடுகளில், அரசியல் கட்சிகள் முதலில் காலனித்துவத்துக்கு எதிராக போராடுவதற்காக உருவாக்கப்பட்டது. காலனித்துவத்திலிருந்து விடுதலை அடைந்த ஆப்பிரிக்க நாடுகளில், அரசியல் கட்சிகள் இராணுவவாதத்திற்கு எதிராக கடுமையாக போராடுகின்றன.

**தென்னாப்பிரிக்காவின் அரசமைப்பு:**

- 18 வயதில் அனைவருக்கும் வாக்குரிமை
- பொதுவான வாக்காளர் பட்டியல்
- வழக்கமான தேர்தல்
- பொறுப்புணர்வு, பதிலுடைத்தல் மற்றும் வெளிப்படையான அரசாங்கத்தை உறுதிப்படுத்த பல கட்சி முறை மக்களாட்சி அவசியம்

**இந்தியாவில் கட்சி முறை:**

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான சுதந்திர போராட்டத்தினாலும், தேசியவாதத்தின் எழுச்சியினாலும் இந்தியாவில் கட்சி முறைகள் வெளிப்பட்டன. இந்திய அரசியல் இன்று பல கட்சி முறையை கொண்டதாக இருப்பினும் இந்திய வரலாற்றில் நீண்ட காலமாக, ஒரே கட்சி அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. இந்திய தேசிய காங்கிரசு (INC) 1885 ஆம் ஆண்டில் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.O. Hume) என்பவரால் நிறுவப்பட்டது.

இது சட்டமன்ற மற்றும் அரசியல் பிரிவுகளில் இந்தியர்களின் அரசியல் பங்கேற்பிற்கான அடித்தளமாக இருந்தது. இது படிப்படியாக பல்வேறு நிலைகளில் அரசியல் சீர்திருத்தங்களைக் கோரியது. ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1921 – 23) பின்னர், இந்திய தேசிய காங்கிரசு (INC) முழுமையான அரசியல் சுதந்திரத்தை கோரியது.

20-ஆம் நூற்றாண்டில், வகுப்புவாதத்தை செயல்திட்டமாக கொண்ட கட்சிகள், அதாவது 1906 ஆம் ஆண்டு இந்தியாவில் முஸ்லிம் லீக் மற்றும் 1916-இல் இந்து மகாசபை போன்ற கட்சிகள் உருவாகின. சென்னை மாகாணத்தில், தென்னிந்திய சுதந்திரவாதச் கூட்டமைப்பு (நீதிக்கட்சி) பிராமணரல்லாதோரின் (திராவிடர்கள்) நலன்களை பிரதிபலிக்க உருவாக்கப்பட்டது. எனினும் இந்திய தேசிய காங்கிரசில் நகர்ப்புற, உயர்குடி சாதியினர், பெரும்பாலும் மேற்கத்திய கல்வி கற்றவர்களை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ஆங்கிலேய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு தளத்தை வழங்கியது. படிப்படியாக இந்திய தேசிய காங்கிரசு இந்தியாவின் அரசியல் கட்சியின் முறையின் வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. 1905-இல் வங்கப் பிரிவினைக்குப் பிறகு, இந்திய தேசிய காங்கிரசில் மிதவாதிகள் (மனுக்களின் கொள்கை) மற்றும் தீவிரவாதிகள் (ஆக்கிரமிப்பு உத்தி) என பிரிவினை எற்பட்டது.

1906 ஆம் ஆண்டில் முஸ்லிம் லீக்கின் உருவாக்கம் முரண்பாடான அரசியல் பேரம் பேசும் வெளிப்படையான காலமாக உருவானதோடு, இந்திய கட்சி முறையின் உண்மையான தொடக்கத்தை பிரதிபலித்தது.

அரசியல் அரங்கில் மகாத்மா காந்தியின் வருகையை தொடர்ந்து, அவரின் அகிம்சையின் மீதான தார்மீக – நெறிமுறைக் கவனமுடன் கூடிய, அரசியல் லட்சியங்கள் மற்றும் வழி முறைகளில் இந்திய தேசிய காங்கிரசு (INC) என்பது அனைத்து பிரிவுகளையும் சேர்ந்த ஏழை விவசாயிகள் மற்றும் பின்தங்கிய பிரிவினர்களையும், பிரதிநிதித்துவப்படுத்தியது சித்தரஞ்சன் தாஸ் 1922-இல் தொடங்கிய சுயராஜ்ய கட்சி, 1934-இல் ஆச்சார்யா நரேந்திர தேவ் தொடங்கிய காங்கிரசு சோசலிஸிட் கட்சி மற்றும் 1920-இல் எம்.என். ராயின் (M.N. Roy) முயற்சியால் தொடங்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகள் இதர முக்கிய அரசியல் கட்சிகள் ஆகும். அரசியல் பரப்புரைகளில் ஈடுபடும் பல அரசியல் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடாமல் இருந்தன. இத்தகையவை அழுத்த குழுக்களாகச் செயல்பட்டன.

1977-ஆம் ஆண்டு வரை பொதுவுடைமை கட்சி, சோசலிஸ்ட் கட்சிகள் மற்றும் வலதுசாரி ஜனசங்கம் ஆகியவை தேசிய அளவில் குறிப்பிடத்தக்க எதிர்கட்சிகளாக இருந்தன. 1977 வரை, எந்த ஒரு கட்சியும் தேசிய அளவில் இந்திய தேசிய காங்கிரசுக்கு மாற்றாக வர இயலவில்லை. எனவே, ஜெயப்பிரகாஷ் நாராயணனின் தலைமையின் கீழ் பல தேசிய கட்சிகள், ஓர் பெரிய தேசிய அளவிலான மாற்றுக் கட்சியை உருவாக்க இணைந்தன. 1977-ஆம் ஆண்டில் ஜனதா கட்சி மத்தியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. 1980-க்குப் பிறகு, இந்த கட்சிகள் ஒன்றியிருக்கும்

திறனையும், ஒற்றுமையையும் இழந்து விட்டன. பாரதீய ஜனதா கட்சி என்ற புதிய பெயருடன் ஜனசங்கம் புத்துயிர் பெற்றது. இதற்கிடையில் கன்ஷிராமின் பகுஜன் மாஜ் கட்சி சமூக நீதியை பிரதான திட்டமாக கொண்ட ஒரு தேசியக் கட்சியாக உருவாகியது. கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் திரிபுரா போன்ற சில மாநிலங்களில் பொதுவுடைமை கட்சி (மார்க்சிஸ்ட்) மிகவும் சக்திவாய்ந்ததாக ஆனது.

1990-களில் இந்திய அரசியல் கூட்டணி அரசாங்கங்களுக்கான காலமாக இருந்தது. இந்திய அரசியல் முறைமை என்பது சமகால இந்தியாவில் காணப்பட்ட பலதரப்பட்ட பண்பாட்டு சமூக உறவு, பன்முகத்தன்மை, அதிக போட்டித்திறனோடு அதிக அளவில் மக்களாட்சி மயமாக்கப்பட்ட பிரதிநிதித்துவம் பெற்றது. பழைய கட்சிகள் வழக்கற்று செயலற்றதாகவும் மாறிவிட்டன. மேலும் புதிய கட்சிகள் மாறிவரும் சவால்களை எதிர்கொள்ள முயற்சித்தன.

1990-களில் இருந்து கூட்டாட்சி அரசியல் முறையை நாம் காண்பதுடன் பிராந்தியக் கட்சிகள் பெரிய செல்வாக்கைப் பெற்றுள்ளதையும் மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு எதிராக பிரதேச உணர்வுகளை பிரதிநிதிப்படுத்துவதையும் நாம் காண்கிறோம். தற்போதைய காலத்தில், பிராந்திய அளவிலான கூட்டணிகள் கூட்டாட்சி அரசியலுக்கு ஆதரவாகப் குரல் கொடுக்கும் போக்கு இருப்பதைக் காணலாம். இதற்கு காரணமாக அரசியலில் பிரதேசமயமாக்கலும், குறிப்பிட்ட பகுதிகளில் அதிக ஆதரவைக் கொண்டிருக்கும் கட்சிகளும் உள்ளன.

**மண்டலக் கட்சிகள்:**

பஞ்சாப்பில் சிரோமணி அகாலி தளம், உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதிக் கட்சி, ஆந்திர பிரதேசத்தில் தெலுங்கு தேசம் கட்சி, பீகாரில் ராஷ்டிரிய ஜனதா தளம், மேற்கு வங்காளத்தில் அகில இந்திய திரிணாமூல் காங்கிரசு, தெலுங்கானாவில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, அசாமில் அசாம் கண பரிசத், மகாராஷ்டிராவில் சிவசேனா, ஜம்மு காஷ்மீரில் தேசிய மாநாட்டுக்கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி, தமிழகத்தில் திராவிட முன்னேற்ற கழகம் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை முக்கிய பிராந்தியக் கட்சிகளாக உள்ளன.

வாக்காளர்களிடையே அரசியல் விழிப்புணர்வு அதிகரிக்கையில், பிரதேச, சமூக மற்றும் மத அடையாளங்களுடன் அதிக அணி திரட்டலும் உள்ளது. அரசியல் குழுக்களின் அமைப்பில் பார்க்கும்போது ஒரு பிராந்தியத்திற்கும் இன்னொன்றிற்கும் இடையில் உள்ள அரசியல் மற்றும் சமூக குழுக்களின் பண்புகள் போன்றவற்றில் பரந்த வேறுபாடு உள்ளது.

| 2009 தேர்தலில் நாடாளுமன்றத்தில் இடங்களை பெற்ற கட்சிகள் | 2014 தேர்தலில் நாடாளுமன்றத்தில் இடங்களை பெற்ற கட்சிகள் |
|---|---|
| இந்திய தேசிய காங்கிரசு | பாரதிய ஜனதா கட்சி |
| பாரதிய ஜனதா கட்சி | இந்திய தேசிய காங்கிரசு |
| இந்திய பொதுவுடைமை கட்சி (மார்க்சிஸ்ட்) | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் |
| சமாஜ்வாதி கட்சி | அகில இந்திய திரிணாமுல் காங்கிரசு |
| பகுஜன் சமாஜ் கட்சி | பிஜூ ஜனதா தளம் |
| திராவிட முன்னேற்றக் கழகம் | சிவசேனா |
| சிவசேனா | தெலுங்கு தேசம் கட்சி |
| ராஷ்டிரிய ஜனதாதளம் | தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி |
| அகில இந்திய திரிணாமுல் காங்கிரசு | யுவஜன ஸ்ரமிக ருது காங்கிரசு கட்சி |
| அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | தேசியவாத காங்கிரசு கட்சி |

**தமிழ்நாட்டில் கட்சி முறை:**

தமிழ்நாட்டில், பெரும்பாலான இந்திய மாநிலங்களைப் போலவே தொடக்கத்தில் சுதந்திர போராட்ட காலத்தில் காங்கிரசு கட்சி ஆதிக்கம் செலுத்தியது. இருப்பினும் சாதி அடுக்குமுறையில் சிக்கல்கள் மற்றும் அதிகரிக்கும் வடக்கு, தெற்கு பிரிவினையின் எழுச்சி ஆகியவை மாநிலத்தில்

காங்கிரசினுடைய புகழைக் குலைத்தன. திராவிரட இயக்கம் பெரியார். ஈ.வே. ராமசாமியின் கீழ் தமிழ்நாட்டில் புத்துயிர் பெற்ற திராவிட உரிமைகள் சுயமரியாதை, கண்ணியம் ஆகியற்றின் வலியுறுத்தல் மற்றும் வடக்கு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, பிராமணர் ஆதிக்கத்திறன் எதிரான சமூக கொண்டு ஆகியவற்றினால் பிரபலமடைந்தது.

தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு முறையானது சுதந்திர இந்தியாவின் அரசியலில் மாநில கட்சிகளின் ஒப்புயர்வற்ற நிலைக்கு முன் மாதிரியாக உள்ளது. இந்த மேம்பாட்டிற்கு மிகவும் தெளிவான சமூக – பொருளாதார, பண்பாடு மற்றும் வரலாற்று காரணங்கள் உள்ளன. காலனித்துவ காலம் மூலம் பகுத்தறிவு மற்றும் சமூக நீதி இயக்கங்களின் நீண்ட வரலாறு மற்றும் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து திராவிட சிந்தனையை அணி திரட்டுதல் போன்றவை தமிழக அரசியலின் தலைமையையும், மாநில அரசியலில் அரசியல் கட்சி முறையின் எதிர்காலத்தையும் தீர்மானித்தது எனலாம்.

**மக்களாட்சியில் அரசியல் கட்சிகளின் பங்கு:**

ஓர் மக்களாட்சியின் திறன்மிக்க செயல்பாட்டிற்கு, முரண்பாடான விருப்பங்களைப் பிரதிபலிப்பு செய்யும் அரசியல் கட்சிகளின் இருப்பது கட்டாயமாகும். பல்வேறு விருப்பங்களையும், கொள்கைகளையும் பிரிந்துரைக்கையில் பெரும்பாலான அரசியல் கட்சிகள், வலதுசாரி (பழமைவாதம், பாரம்பரியம் மற்றும் முதலாளித்துவம்) அல்லது இடதுசாரி சிந்தனையை (சமத்துவ – சார்பு, தாராளவாதம் மற்றும் தொழிலாளர் நலனை) பின்பற்றுகின்றன. மக்களாட்சிக்கான லட்சியத்தை அடைவதற்கு அரசியல் கட்சிகள் அவசியமானவை என்பது உண்மையே என்றாலும், மக்களாட்சி கோட்பாடற்ற, தனிப்பட்ட கட்சிகளின் வளர்ச்சி மற்றும் சர்வாதிகார தலைமையின் கீழ் தனிப்பட்ட கட்சிகளின் எழுச்சி என்பது மக்களாட்சிக்கு ஒரு முக்கியமான சவால் ஆகும். இந்தியா போன்ற பல பன்முக பண்பாடு, மொழி, மத மற்றும் பொருளாதார வேற்றுமை கொண்ட நாடுகளில், நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் மக்களின் பல்வேறுபட்ட நலன்களை அரசியல் கட்சிகள் மட்டுமே பிரதிபலிக்கின்றன. இத்தகைய முதிர்ச்சியடைந்த, மதச்சார்பற்ற நிலைப்பாட்டை மேற்கொள்வது இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளுக்குப் பொருத்தமானது. இல்லையெனில், இந்தியாவின் மதிப்புயர்வான ஒற்றுமை மற்றும் நிலைத்தன்மையை பாதுகாக்க முடியாது. நாட்டின் நலனிற்காக பொறுப்புணர்வு மற்றும் கொள்கை ரீதியான கட்சிகள், மக்களாட்சி அமைப்புகளின் நிலைதன்மைக்காக தங்கள் கடமையையும், செயல்பாட்டையும் கையாளுவதில் முதிர்ச்சி மற்றும் பொறுப்புணர்வை காட்டுகின்றன.

**மக்களாட்சியில் எதிர்கட்சிகளின் பங்கு:**

கட்சி முறை மற்றும் மக்களாட்சி ஆகியவற்றிற்கு இடையிலான உறவு, மக்களாட்சியில் எதிர்காட்சிகளின் பங்கு பற்றிய விவாதம் இல்லாமல் முழுமையடையாது. நாட்டில் ஓர் சக்தி வாய்ந்த எதிர்கட்சி அல்லது கட்சிகள் இல்லாமல் மக்களாட்சிக்கு எந்த அர்த்தமும் இல்லை. மக்களாட்சியின் தன்மை ஆளும் கட்சியின் வலிமையினால் மட்டுமே நிர்ணயிக்கப்படுவது அல்ல. எதிர்க்கட்சியின் பங்கு மற்றும் அதன் செயல்பாட்டிலும் உள்ளது.

உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் அசைமச்சர் பதவிக்கான தகுதியையும், சலுகைகளையும் பெறுகிறார். ஓர் பலவீனமான எதிர்க்கட்சி பொறுப்புணர்வற்ற அரசாங்கத்திற்கு அல்லது பெரும்பான்மையின் கொடுங்கோண்மைக்கு வழிவிடுகிறது.

அழுத்தக்குழுக்கள் அல்லது தன்னலக்குழுக்கள் ஆகியவை முக்கியப் பிரச்சனைகள் மற்றும் நிகழ்வுகளில் ஓர் முக்கியப் பங்க வகிக்கின்றன. இவை பொதுவான அரசியல் மற்றும் சமூக நலன்களைக் கொண்ட குழுக்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவை வெளியிலிருந்து வரும் முடிவுகளின் மீது செல்வாக்கு செலுத்துகின்றன. அழுத்தக் குழுக்கள் குறிப்பிட்ட நலன்களுக்காக தன்னார்வ உறுப்பினர்கள் மூலம் ஆதரவு திரட்டுகின்றன அரசியல் கட்சிகள் போலன்றி, அழுத்தக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதில்லை.

அழுத்தக்குழுக்கள் அல்லது தன்னலக்குழுக்கள் ஆகியவை முக்கியப் பிரச்சனைகள் மற்றும் நிகழ்வுகளில் ஓர் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவை பொதுவான அரசியல் மற்றும் சமூக நலன்களைக் கொண்ட குழுக்களாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவை வெளியிலிருந்து வரும்

முடிவுகளின் மீது செல்வாக்கு அழுத்தக்குழுக்கள் பல பொதுக் கொள்கை சிக்கல்களால் பல்வேறு வழிமுறைகளை பின்பற்றி அரசாங்கத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே அவை அழுத்தக் குழுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. தொழில் சார்ந்த அழுத்தக் குழுக்கள் என்பவை வணிக நலன்களை, தொழிற் சங்கங்கள், விவசாயிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், மருத்துவர்கள், பண்பாட்டு குழுக்கள் மற்றும் நிறுவன குழுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம். மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கிடையிலான தொடர்பு மற்றும் தொடர்புக்கான ஆதாரமாக செயல்படுவதன் மூலம் இந்திய அரசியல் முறைமையில் அழுத்தக் குழுக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவர்கள் பொதுமக்களின் சமூக, பொருளாதார சிக்கல்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு, அரசாங்கத்தின் நிர்வாகக் கொள்கைகள் மீது செல்வாக்கு செலுத்துகிறார்கள்.

**தேர்தலியல்:**
தேர்தல் பற்றிய ஆய்வு மற்றும் புள்ளிவிவர பகுப்பாய்வே தேர்தலியல் ஆகும். பொது கருத்துக் கணிப்புகள், தேர்தலியலில் ஓர் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்புகள், தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் மற்றும் தேர்தல் முடிவுகள் ஆகியவை இதில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கருத்துக்கணிப்புகள் மற்றும் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் ஆகியவை தேர்தல்களில் வாக்காளர் விருப்பத்தின் முக்கிய குறியீடாக இருக்கின்றன.

இரண்டுக்கும் இடையோன பிரதான வேறுபாடு, வாக்காளர் வாக்களிக்கும் முன் நடத்தப்படும் கருத்துக்கணிப்பு மற்றும் வாக்குப்பதிவு நடைபெறுகையில் வாக்காளர் வாக்களித்த பின் வாக்குச்சாவடிக்கு வெளியே நடத்தப்படும் கருத்துக்கணிப்பு என்பதாகும். தேர்தலுக்குப் பின் வெளிவரும் கருத்துக்கணிப்பு முடிவுகள் தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்புகளை விட நம்பகமானதாகக் கருதப்படுகிறது.

கருத்துக்கணிப்புகளின் முடிவு உண்மையில் தேர்தல் முடிவுகளை ஒத்திருக்கலாம் அல்லது தவறாகலாம். இருப்பினும், அவை உறுதியற்ற யாருக்கு வாக்களிப்பது என்பதனை தீர்மானிக்காத வாக்காளர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருப்பதுடன் அனைத்து கட்சிகளுக்கும் வாக்களிப்பு நடைமுறைகளிள் சமநிலையை உருவாக்குவதற்கு முக்கியமானதாக இருக்கிறது.

**அரசியல் கட்சி:** தன் உறுப்பினர்களை, பொது அலுவலகத்திற்கு தேர்ந்தெடுப்பதன் மூலம் அரசியல் அதிகாரத்தை பெறும் ஓர் அமைப்பு.

**ஒரு கட்சி முறை:** அரசமைப்பை அடிப்படையாக கொண்டு அரசாங்கம் அமைக்கும் உரிமையை பெற்ற ஓர் அரசியல் கட்சி அல்லது அரசியல் அதிகாரத்தின் மீது தனிப்பட்ட கட்டுப்பாடைக் கொண்டிருக்கும் ஒரே ஒரு அரசியல் கட்சி.

**இரு கட்சி முறை:** இந்த அமைப்பில் இரண்டு கட்சிகள் மட்டுமே அரசியலில் இருக்கும். இவற்றுள் ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் இருக்கும். இந்த முறையில் பெறும்பான்மையை பெறுவதற்கு மிகுந்த வாய்ப்பு உள்ளது. மற்ற கட்சிகள் மிக சிறிய கட்சிகளாகவோ அல்லது நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் இயங்கும் கட்சிகளாகவோ இருக்கும்.

**பலகட்சி முறை:** பல அரசியல் கட்சிகள் அரசாங்க பதவிகளை தனித்தனியாகவோ அல்லது கூட்டணியிலோ கட்டுப்படுத்தும் திறனைக் கொண்டுள்ள ஒரு அமைப்பு.

**வாக்குச்சீட்டு:** வேட்பாளின் பெயர், சின்னம், போன்ற விவகரங்களைக் கொண்ட துண்டுச் சீட்டு.

**இடைத்தேர்தல்:** இரண்டு சட்டமன்ற பொதுத்தேர்தல்களுக்கிடையே ஒரு சட்டமன்ற தொகுதி காலியானாலோ அந்த சட்டமன்ற உறுப்பினர் ராஜினாமா செய்தாலோ, வேறு கட்சிக்கு மாறுவதினால் பதவி நீக்கம் செய்யப்பட்டாலோ அல்லது இறந்து விட்டாலோ அந்த தொகுதியில் நடைபெறும் தேர்தல் இடைத்தேர்தல் எனப்படும். 2010-ம் ஆண்டிலிருந்து இதுவரை 21 இடைத்தேர்தல்கள் நடந்துள்ளன.

**தேர்தல்:** தகுதி வாய்ந்த நபர்களை ஆட்சி அதிகாரத்திற்கு வாக்கெடுப்பின்

மூலம் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறை.

**தேர்தல் ஆணையம்:**

தேர்தல் ஆணையம் தன்னாட்சி பெற்ற ஒரு அமைப்பு மாநில சட்டப்பேரவைகள், மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தவும், மேற்பார்வையிடவும் உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு

**வாக்குச் சீட்டு பெட்டி**: வாக்குச் சாவடியில் உள்ள வாக்குப் பெட்டியில் அல்லது வாக்களிப்புத் தாள் வாக்காளரால் குறியிட்டு முடிக்கப்பட்ட பிறகு செருகப்படும். வாக்குப்பதிவு துவங்குவதற்கு முன் வாக்குப் பெட்டகம் முத்திரையிடப்பட்டு, எண்ணிக்கை துவங்கும் வரை திறக்கப்படாது.

**கூட்டணி அரசாங்கம்:** தேர்தல் முடிவுகளில் எந்த ஒரு கட்சிக்கும் அறுதிபெரும்பான்மை கிடைக்கவில்லையெனில் ஒன்றிக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒன்றினைந்து அமைக்கும் அரசாகும்.

**தேர்தலியல் :** தேர்தல் அதன் முடிவுகள், அத தொர்பான புள்ளி விவரங்கள் பற்றிய படிப்பு.

**தேர்தல் முறைமை**: தேர்தல்களைப் பற்றிய அனைத்து விதிகளுக்கான பொது பெயர். அதாவது வாக்களிப்பு முறை, எல்லைகள், வாக்காளர்களின் பதிவு, வேட்பாளர், பிரச்சார செலவு, ஒளிபரப்பு முதலியன.

**பெரும்பான்மை அரசாங்கம் :** சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத்தில் ஐம்பது சதவிகித இடங்களுக்கு மேல்கொண்டு அமைக்கும் அரசாங்கம்.

**மக்களாட்சி:** மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சியாகும்.

---

## 11th அரசியல் அறிவியல்
## அலகு– 11

**தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம்**

**வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவத்தின் பொருள் மற்றும் தன்மை**
**வாக்குரிமை மற்றும் தேர்தல் என்றால் என்ன?**

இது பொதுத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான ஒரு உரிமையாகும். "வாக்குரிமை" எனும் சொல், "சுதந்திரம்" என்று பொருள் படக்கூடிய "பிராங்க்" என்ற ஆங்கிலோ – பிரெஞ்சு கலவைச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.

| |
|---|
| இந்திய அரசமைப்பின் பகுதி XV, உறுப்புகள் 324 – 329 தேர்தலைப் பற்றியதாகும். |

தேர்தல் என்பது தங்களின் சார்பாக யாரேனும் ஒருவரை அரசியல் தலைவராகவோ அல்லது பிரதிநிதியாகவோ அரசாங்கத்தில் பங்குபெற தேர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கும் நடைமுறையாகும்.

பிரதிநிதித்துவம் என்பது பிறருக்காக பேசும் நடவடிக்கை அல்லது பிறருக்காக செயல்படுதல் அல்லது பிரதிநிதித்துவம் பெறும் நிலையாகும்.

| |
|---|
| மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என இந்திய அரசமைப்பின் உறுப்பு 326 விளக்குகிறது. |

**கற்றலின் நோக்கங்கள்:**

- தேர்தல் மற்றும் பிரதிநிதித்துவம் பற்றி மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தல்.
- "தேர்தலியல்" என்னும் சொல்லை விளக்குதல்.
- தேர்தலில் பல்வேறு முறைகளை மாணவர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்தல்.
- இந்திய தேர்தல் ஆணையத்தைப் பற்றி விழிப்புணர்வு பெறுதல்.
- கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் முக்கியத்துவத்தினை அறிதல்.
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்களின் தேவையை பற்றி அறிவுறுத்துதல்.
- அரசியலில் இளைஞர்களின் பங்கை வெளிக்கொணர்தல்

இந்திய அரசமைப்பில் "தேர்தல்கள்" என்னும் தலைப்பிலான பகுதி XV மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் இதில் உள்ள அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இதை அரசமைப்பின் ஓர் பகுதியாக இணைத்தனர். இம்முக்கிய காரணத்தினால் தான் "தேர்தல்" என்னும் கருப்பொருளுக்கு நமது நாட்டில் அரசமைப்பிலான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னரே "தேர்தல்கள்" என்பவை பண்டைய ஏதென்ஸ். ரோமாபுரி ஆகியவற்றிலும் போப் ஆண்டவர் மற்றும் ரோமானியப் பேரரசர்கள் தேர்வு ஆகியவற்றிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்கால தேர்தல்களின் தோற்றம் என்பது 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் படிப்படியாக எழுச்சி கண்ட பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் மூலமாகவும், பின்னர் வட அமெரிக்காவிலும் தோன்றியது. பிரதிநிதித்துவ மக்களாட்சியில் தேர்தல்கள் மிகவும் முக்கியமானவையாகும். உங்களது குரல் ஓங்கி ஒலிப்பதற்கு தேர்தலில் வாக்களிப்பதே சிறந்த வழியாகும். சட்டங்களின் மூலமாக அரசியல் கட்சிகள் மக்களை வாக்களிக்க விடாமல் செய்யும் போது தேர்தல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன என்பது உண்மையாகும். தேர்தல்கள் மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவை அரசாங்கத்தை உருவாக்குவதன் அடிப்படையாகும்.

**மக்களாட்சியின் வாக்காளர் முறைமை:**

ஓர் மக்களாட்சியின் வாக்காளர் முறைமையின் மிகவும் அடிப்படையான இயல்புகளைப் பற்றி நாம் கற்றுக்கொள்வோம். ஓர் மக்களாட்சியின் வாக்காளர் முறைமை என்பது பின்வருமாறு உள்ளதாகும்.

**தேர்தல்கள் ஏன் நமக்கு தேவைப்படுகின்றன?**

தேர்தல்கள் இல்லாத ஓர் மக்களாட்சியை நாம் கற்பனை செய்து பார்ப்போம். தேர்தல்களே இல்லாத மக்களாட்சி என்பது ஒருவேளை சாத்தியமாவதற்கு மக்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் ஒன்று கூடி அனைத்து முடிவுகளையும் எடுக்க வேண்டும். ஓர் மிகப்பெரிய சமூகத்தில் இது சாத்தியமாகாது. மேலும் அனைத்து விவகாரங்களிலும் முடிவெடுப்பதற்கான நேரமும், அறிவுத்திறனும் அனைவருக்கும் இருப்பது சாத்தியமில்லை. இப்பிரச்சனைகளை மக்கள் தீர்ப்பதாக நாம் கருதுவோம் எனில் அங்கு தேர்தல்கள் தேவைப்படாது. அதனை நாம் மக்களாட்சி என அழைக்கலாமா?

மக்கள் தங்களின் பிரதிநிதிகளை விரும்புகின்றனரா? இல்லையா? என நாம் எவ்வாறு அறிந்து கொள்ளலாம்? மக்களின் விருப்பங்களுக்குத் தகுந்தவாறு பிரதிநிதிகள் ஆட்சி செய்கிறார்களா என்பதனை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தலாம்? மக்கள் விரும்பாத பிரதிநிதிகள் பதவியில் இருக்கிறார்களா என்பதனை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தலாம்? இதற்காக குறிப்பிட்ட இடைவெளிகளில் மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், விருப்பப்படி அவர்களை மாற்றுவதற்கும் தகுந்த வழிமுறைகள் தேவைப்படுகின்றன. அதுவே தேர்தலாகும் ஆகவே தற்காலத்தில் எவ்வகையான பிரதிநிதித்துவ அரசாங்கத்திற்கும் தேர்தல் அடிப்படையானதாகும். ஆகையால் பெரும்பாலான மக்களாட்சிகளில் மக்கள் தங்களின் பிரதிநிதிகள் மூலமாகவே ஆட்சி செய்கின்றனர்.

**ஓர் தேர்தலில் வாக்காளர் பல்வேறு தேர்வுகளை மேற்கொள்கிறார். அவையாவன:**

- தங்களுக்கான சட்டங்களை உருவாக்குபவரை தேர்வு செய்வர்.

- அரசாங்கத்தை அமைத்து பெரும்பான்மை முடிவுகளை எடுப்போரைத் தேர்வு செய்வர்.
- அரசாங்கம் மற்றும் சட்டமியற்றுதலில் வழிகாட்டக் கூடிய கொள்கைகளைக் கொண்ட கட்சியைத் தேர்வு செய்வர்.

**எது தேர்தலை மக்களாட்சியிலானதாக ஆக்குகிறது?**

- அனைவருக்கும் தேர்வு செய்யும் வாய்ப்பு இருக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு வாக்கு மற்றும் ஒவ்வொரு வாக்கிற்கும் சமமமான மதிப்பு என்பது இதன் பொருளாகும்.
- அரசியல் கட்சிகளால் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள் சுதந்திரமாகத் தேர்தலில் போட்டியிடுவதுடன் வாக்காளர்களுக்குத் தகுந்தவாறு உண்மையான தேர்வுகளுக்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- அத்தேர்வுகள் தகுந்த இடைவெளிகளில் வழங்கப்பட வேண்டும். ஒருசில ஆண்டுகளுக்கு ஒருமுறை தகுந்த இடைவெளியில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.
- மக்களால் விரும்பப்படும் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- மக்கள் தங்களின் விருப்பங்களுக்குத் தகுந்தவாறு தேர்ந்தெடுக்கும் வகையில் சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

தேர்தல் என்பது ஓர் முறையான முடிவாக்கக நடைமுறையாகும். அதில் மக்கள் பொதுப்பதவி வகிப்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்தலின் மூலமாக சட்டமன்றங்களில் உள்ள பதவிகள் மட்டுமல்லாமல் ஆட்சித்துறை, நீத்துறை மற்றும் வட்டார, உள்ளாட்சி அரசாங்கங்களில் உள்ள பதவிகளும் நிரப்பப்படுகின்றன.

| |
|---|
| தேர்தல்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் மற்றும் முடிவுகளை கற்றறியும் கல்வியே தேர்தலியல் ஆகும். |

**பிரதிநிதித்துவத்தின் வகைகள் /தொகுதிகளுக்கான இடஒதுக்கீடு:**

**தேர்தல் முறைமை – பன்மைத்துவம் / பெரும்பான்மை முறைமைகள்:**

பன்மைத்துவம் / பெரும்பான்மை முறைமைகளின் கொள்கைகள் மிகவும் எளிமையானவையாகும். மக்கள் வாக்களித்தபிறகு வாக்குகள் எண்ணப்பட்டு அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் அல்லது கட்சிகள் வெற்றி பெற்றவையாக அவிக்கப்படுகின்றன. இருப்பினும் இதன் நடைமுறைகள் மாறுபடுகின்றனது. ஆகையால் ஐந்து வகையான பன்மைத்துவ / பெரும்பான்மை முறைமைகளை அடையாளப்படுத்தலாம்.

1. முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP)
2. தொகுதி வாக்கு (BV)
3. கட்சித் தொகுதி வாக்கு (PBV)
4. மாற்று வாக்கு (AV)
5. இரு சுற்று முறை (TRS)

**முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP):**

முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் என்பது பன்மைத்துவம் / பெரும்பான்மை முறையின் எளிமையான வடிவமாகும். இது ஓர் உறுப்பினர் தொகுதிகள் மற்றும் வேட்பாளரை மையப்படுத்துவதுடன் வாக்களித்தலும் பயன்படுத்தப்படுகிறது. எப்.பி.டி.பி. முறைகள் அடிப்படையில் இங்கிலாந்தில் காணப்பட்டன. அது தவிர இங்கிலாந்தின் வரலாற்று அடிப்படையிலான ஆதிக்கத்தில் இருந்த நாடுகளிலும் காணப்படுகின்றன. இங்கிலாந்து தவிர அமெரிக்கா, கரீபிய நாடுகள், வங்கதேசம், மியான்மர், இந்தியா, மலேசியா, நேபாளம் மற்றும் தெற்கு பசிபிக் பகுதியில் உள்ள சில நாடுகளிலும் இம்முறை காணப்படுகிறது.

FPTP (எப்.பி.டி.பி) என்பது பன்மைவாத / பெரும்பான்மைவாத வாக்காளர் முறையில் எளிமையான வடிவமாகும். இதில் ஒரு வேட்பாளர் செல்லத் தகுந்த வாக்குகளில் பிற வேட்பாளர்களை விட அதிக வாக்குகளை பெற்றிருந்தாலே வெற்றி பெற்றவர் ஆவார். அறுதிப் பெரும்பான்மை பெற வேண்டிய அவசியமில்லை. இந்த முறை ஒரு உறுப்பின் தொகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் வாக்காளர்கள் கட்சிக்காக அல்லாமல் வேட்பாளருக்காக வாக்களிக்கின்றோம்.

**தொகுதி வாக்கு (BV)**

தொகுதி வாக்கு என்பது அரசியல் கட்சிகளே இல்லாத அல்லது பலவீனமாக உள்ள நாடுகளில் காணப்படுவதாகும். கேமன் தீவுகள், பாக்லாந்து தீவுகள், கர்ன்சே, குவைத், லாவோஸ், லெபனான், மாலத்தீவுகள், பாலஸ்தீனம், சிரிய அரபுக் குடியரசு ஆகியவை தொகுதிவாக்கு முறையிலான வாக்காளர் முறைமைகளைப் பின்பற்றுகின்றன.

தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் திறனை வாக்காளர்கள் தக்கவைத்துக் கொள்வதால் தொகுதிவாக்கு முறை பாராட்டப்படுகிறது. அத்துடன் தகுந்த முறையில் நில அமைப்பின் அமைக்கப்பட்ட மாவட்டங்களும் அனுமதிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் எப்.பி.டி.பியுடன் ஒப்பிடுகையில் அரசியல் கட்சிகளின் பங்கு அதிகரிப்பதுடன் அதிக இணக்கம் மற்றும் அமைப்பு ரீதியான கட்சிகளை வலுப்படுத்துவதாக உள்ளது.
அதிக இணக்கம் மற்றும் அமைப்பு ரீதியான கட்சிகளை வலுப்படுத்துவதாக உள்ளது.

தொகுதி வாக்கு என்பது ஓர் பன்மைத்துவ / பெரும்பான்மை முறைமையில் பல் உறுப்பினர் மாவட்டங்களில் பயன்படுத்தப்படுவதாகும். இதில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களுக்குத் தகுந்த வாக்குகள் வாக்காளர்களுக்கு இருக்கும். அதிகபட்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெறுகிறார். பொதுவாக கட்சிகளைக் காட்டிலும் வேட்பாளருக்காக மக்கள் வாக்களித்தாலும் பெரும்பாலான முறைமைகளில் மக்கள் தங்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு வாக்களிக்கின்றனர்.

**கட்சித் தொகுதி வாக்கு (PBV)**

பி.பி.வி. என்பது பயன்படுத்துவதற்கு எளிதானதாகும். இது வலுவான கட்சி வேட்பாளர்களில் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் கலவையாக அமைந்துள்ளது. இது சமநிலையிலான இன அடிப்படை பிரதிநிதித்துவத்திற்கும் உதவுகிறது. டிஜிபௌடி, சிங்கப்பூர், செனகல், துனீசியா போன்ற நாடுகள் பி.பி.வி. முறையைப் பயன்படுத்துகின்றன.

**மாற்று வாக்கு (AV):**

இம்முறையில் வாக்காளர்கள் தங்களின் முதல் விருப்பத்தேர்வை விட வேட்பாளர்களுக்கு இடையே முன்னுரிமை அளிக்கின்றனர். இதனால் இது “முன்னுரிமை வாக்கு“ எனவும் அழைக்கப்படுகிறது. மாற்றுவாக்கு முறை ஆஸ்திரேலியா, பிஜி, பாப்புவா கினியா ஆகிய நாடுகளில் பின்பற்றப்படுகிறது. பல வேட்பாளர்கள் மொத்தமாகப் பெற்ற வாக்குகளை மாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த விருப்பமும் இணைக்கப்பட்டு பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது.

இருசுற்று முறை என்பது ஓர் பன்மைத்துவ / பெரும்பான்மை முறையாகும். இதில் முதல் சுற்றில் எக்கட்சி அல்லது வேட்பாளருக்கும் அறுதிப்பெரும்பான்மை (50 சதவீதத்திற்கு மேல் ஒரு சதவீதமேனும் பெற்றிருத்தல்) பெறாத நிலையில் இரண்டாவது சுற்று தேர்தல் நடைபெறும். இரு சுற்று முறை எப்போது பெரும்பான்மை, பன்மைத்துவ வடிவம் எடுக்குமெனில், ஒருவேளை இரண்டாம் சுற்றில் இரண்டு வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடும் நிலையில் அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில் அவர்கள் அறுதிப்பெரும்பான்மை பெற்றிருந்தாலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

**இரு சுற்று முறை (டி.ஆர்.எஸ்):**

இரு சுற்று முறையின் முக்கிய இயல்பே அதன் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஒரே தேர்தலாக அல்லாமல் ஒரு வாரம் அல்லது பதினைந்து நாட்கள் இடைவெளியில் இரு சுற்றுகளாக நடைபெறுகிறது. இது தேசிய சட்டமன்ற உறுப்பினர் தேர்விற்கும், குடியரசுத் தலைவருக்கான நேரடி தேர்தலுக்கும் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. இம்முறை மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ, கபோன், மாலி மௌரிடானியா, ஹைதி,ஈரான், வியட்நாம், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகளில் பின்பற்றப்படுகிறது.

**சிறுபான்மையினர் பிரதிநிதித்துவத்தின் பல்வேறு முறைகள்:**
**அரசியலில் போட்டி இருப்பது நன்மையானதா?**

தேர்தல்கள் என்பவை அரசியல் போட்டி தொடர்பானவையாகும். இப்போட்டி பல்வேறு வடிவங்களை எடுக்கிறது. இதில் அரசியல் கட்சிகளுக்கு இடையேயான போட்டி மிகவும் வெளிப்படையான வடிவமாகும். தொகுதி அளவில் பல்வேறு வேட்பாளர்களுக்கு இடையேயான போட்டி எனும் அளவில் உள்ளது. போட்டிகள் இல்லையெனில் தேர்தல்கள் அர்த்தமற்றவையாகின்றன. தேர்தலில் ஏற்படும் போட்டியால் ஒவ்வொரு பகுதியிலும் ஒற்றுமையின்மை மற்றும் பிரிவினைவாத உணர்வுகள் தோன்றினாலும், சீரான தேர்தல் போட்டிகள் அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது. மக்கள் எழுப்ப விரும்பும் பிரச்சனைகளைத் தாங்கள் எழுப்பினால், தாங்கள் பிரபலமடைவதுடன் வரக்கூடிய தேர்தலில் தங்களின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகும் என்பதை அரசியல் தலைவர்கள் அறிவர். இருப்பினும் தங்களது பணியின் மூலமாக வாக்காளர்களை திருப்திபடுத்தவில்லையெனில் மீண்டும் அவர்களால் வெற்றிபெற இயலாது.

**நமது தேர்தல் முறை என்ன?**

இந்திய தேர்தல்கள் மக்களாட்சி முறையிலானது என நாம் கூறலாமா? இக்கேள்விக்கு பதில் கூறுவதற்கு நாம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்காலமும் முடிவுக்கு வருகிறது. பின்னர் மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவை கலைக்கப்படுகிறது. அனைத்து தொகுதிகளுக்கும் ஒரே நேரத்திலோ, அதாவது ஒரே நாளிலோ அல்லது ஒரு சில நாட்களிலோ தேர்தல் நடைபெறுகிறது. இதுவே பொதுத்தேர்தல் எனப்படுகிறது. சில நேரங்களில் ஒரு தொகுதியில் உள்ள உறுப்பினரின் மரணம் அல்லது பதவி விலகலால் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப தேர்தல் நடைபெறுகிறது. இது இடைத்தேர்தல் என அழைக்கப்படுகிறது.

**தேர்தலுக்கான தொகுதிகள்:**

நீங்கள் தமிழக மக்கள் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இதனை எவ்வாறு செய்கிறார்கள் என நீங்கள் வியந்திருக்கலாம். தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மக்கள் ஒவ்வொருவரும் வாக்களித்து தேர்ந்தெடுக்கிறார்களா நமது நாட்டில் இடம் சார்ந்த பிரதிநிதித்துவ முறையை நாம் பின்பற்றுகிறோம். தேர்தலுக்காக நம் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளை நாம் தேர்தலுக்கான தொகுதிகள் என அழைக்கிறோம். ஓர் பகுதிகளில் வசிக்கும் மக்கள் வாக்களித்து தங்களுக்காக ஓர் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

மக்களவைத் தேர்தலுக்காக நமது நாடு 543 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி நாடாளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு வாக்கிற்கும் சமதிப்பு என்பது மக்களாட்சியிலான தேர்தலின் இயல்புகளில் ஒன்றாகும். இதனால் தான் ஒவ்வொரு தொகுதியும் கிட்டத்தட்ட சமமான மக்கள் தொகை உள்ளதாக இருக்க வேண்டும் என அரசமைப்பு கூறுகிறது. அதேபோல ஒவ்வொரு மாநிலமும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி சட்டப்பேரவை உறுப்பினர் அல்லது எம்.எல்ஏ. (M.L.A) என அழைக்கப்படுகின்றார். அதே கொள்கை பஞ்சாயத்து மற்றும் நகர்புற உள்ளாட்சி தேர்தல்களில் பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு கிராமம் அல்லது நகரமும் தொகுதிகளைப் போன்று வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வார்டும் கிராமம் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு ஓர்

உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கிறது. சில சமயங்களில் இத்தொகுதிகள் ஓர் இடமாகக் கருதப்பட்டு, ஒவ்வொரு தொகுதியும் அவையில் ஓர் இடத்தின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

**தனித்தொகுதி:**

ஓர் குடிமகனுக்கு தனது பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்கும், தான் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் உள்ள உரிமையை அரசமைப்பு வழங்குகிறது. வெளிப்படையான தேர்தல் போட்டியில் சில நலிந்த பிரிவினருக்கு மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு வாய்ப்புகள் சிறப்பாக அமைவதில்லை. அவர்களுக்கு பிறருக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வளங்கள், கல்வியறிவு மற்றும் போட்டியிடுவதற்குத் தேவையான தொடர்புகள் இருப்பதில்லை. இவ்வாறு இருப்பின் நமது மக்கள் தொகையில் குறிப்பிடத்தகுந்த பிரிவினருக்கு நமது நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் அனைவருக்கும் இடமில்லாத நிலை ஏற்படுகிறது. இது நமது மக்களாட்சியை பிரதிநிதித்துவம் வழங்காததாகவும்,குறைந்த மக்களாட்சித் தன்மையுடையதாகவும் மாற்றுகிது.

மேற்கூறியவற்றால் நமது அரசமைப்பினை உருவாக்கியவர்கள் நலிந்த பிரிவினருக்கு சிறப்பு அமைப்பாக தனித்தொகுதிகளைப் பற்றி சிந்தித்தனர். சில தொகுதிகள் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வகை இட ஒதுக்கீடு முறை பின்னர் பிற நலிந்த பிரிவினருக்கும் மாவட்ட மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**வரையறை:**

மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைக்கான தொகுதிகள் வரையறுக்கப்படுகின்றன. தொகுதிகளை வரையறை செய்யும் போது அதன் புவியமைப்பு, இயற்கையான இயல்புகள், நிர்வாக அமைப்புகளின் எல்லைகள், தகவல் தொடர்பு மற்றும் பொதுமக்களின் வசதி ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**தொகுதி வரையறை சட்டங்கள்**

முதல் வரையறை ஆணையச் சட்டம், 1952. இரண்டாவது வரையறை ஆணையச் சட்டம், 1963.

மூன்றாவது வரையறை சட்டம், 19073.
நான்காவது வரையறை சட்டம், 2002.

**வாக்காளர் பட்டியல்:**

தொகுதிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கையாக யார் வாக்களிக்கலாம். யாரெல்லாம் வாக்களிக்க முடியாது என்பதனை முடிவு செய்ய வேண்டும். இம்முடிவினை யாரேனும் எடுப்பதற்கு கடைசி நாள் வரை காத்திருக்க இயலாது. ஆகவே மக்களாட்சி தேர்தலில் தகுதிவாய்ந்த வாக்காளர்களின் பட்டியல் தேர்தலுக்கு நெடுநாள் முன்னரே தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இதுவே அதிகாரப்பூர்வமாக “வாக்காளர் பட்டியல்“ என அழைக்கப்படுகிறது.

| |
|---|
| பஞ்சாயத்துகளைப் போன்று மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் இருக்க வேண்டாமா? |

எவ்வகையான வேறுபாடுகளையும் தாண்டி தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான சமவாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களாட்சியிலான தேர்தலின் முதல் நிபந்தனையாகும். நமத நாட்டில் பதினெட்டு வயது நிரம்பிய குடிமக்கள் அனைவரும் தேர்தலில் வாக்களிக்கலாம். ஒருவரின் சாதி, மதம் மற்றும் பாலின பாகுபாடின்றி அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை உள்ளது.

அனைத்து குடிமக்களின் பெயர்களையும் கேட்டுப் பெறுவது, அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது ஓர் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இடம் பெயர்ந்தோர் மற்றும் இறந்த வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படுகின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வாக்காளர் பட்டியல் திருத்தியமைக்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (EPIC) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர்கள் இதனை தாங்கள் வாக்களிக்கச் செல்லும் போது எடுத்துச் செல்ல வேண்டும். இருப்பினும் வாக்காளர் அடையாள அட்டை என்பது கட்டாய ஆவணமல்ல. இதனைத் தவிர ஆதார் அட்டை, குடிமை வழங்கல் அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றின் அசல் சான்று ஆகியவற்றினை வாக்களிப்பதற்கான ஆவணமாக காட்டலாம்.

**இந்தியாவில் தேர்தல் நடைமுறை:**

- தொகுதிகளை மறுவரையறை செய்தல்
- தேர்தல் அறிவிப்பு
- வேட்பு மனுவினை தாக்கல் செய்தல் மற்றும் திரும்பப் பெறுதலைப் பற்றிய தேர்தல். ஆணைத்தின் அறிவிப்பு
- போட்டியிட விரும்பும் வேட்பாளர் வேட்புமனு தாக்கல் செய்தல்
- வேட்பு மனுக்களை சரிபார்த்து ஏற்றல் அல்லது நிராகரித்தல்
- தேர்தல் பரப்புரை
- வாக்களித்தல் நடைமுறை
- வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவுகளை அறிவித்தல்

**வேட்பாளர்கள் நியமனம்:**
ஓர் மக்களாட்சி அடிப்படையிலான தேர்தலில் உண்மையான விருப்பத் தேர்வை மேற்கொள்ள மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். எவரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவ்விதத் தடையும் இல்லாத சூழலில் இது நிகழும். இதனையே நமது அமைப்பும் வழங்குகிறது. வாக்காளராக இருப்பதற்காக தகுதியுடைய எவரும் தேர்தலில் வேட்பாளராகலாம். தேர்தலில் 'வேட்பாளராகலாம். தேர்தலில் வாக்களிப்பதற்கான குறைந்தபட்ச வயது பதினெட்டு எனில், வேட்பாளராவதற்கான குறைந்தபட்ச வயது இருபத்து ஐந்து என்பதே இதிலுள்ள ஒரே வித்தியாசமாகும்.அரசியல் கட்சிகள் வேட்பாளரை நியமிக்கும் போது அவர் கட்சியின் சின்னம் மற்றும் ஆதரவினைப் பெறுகிறார். கட்சியின் வேட்பாளர் நியமனத்தினை "கட்சியின் நியமனச்சீட்டு" என அழைக்கின்றனர்.

வேட்பு மனு தாக்கல் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் பிணைத்தொகையாகக் குறிப்பிட்ட தொகையினை செலுத்த வேண்டும். உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி கீழ்க்கண்ட முழு விவரங்களைக் கொண்ட சட்டப்பூர்வ பிரகடனத்தினை ஒவ்வொரு வேட்பாளரும் மேற்கொள்ள வேண்டும்.

- வேட்பாளருக்கு எதிராக நிலுவையில் உள்ள கடுமையான குற்றவியல் வழக்குகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் விவரங்களைத் தருதல்.
- வேட்பாளர்கள் தங்களுடைய அல்லது தங்களது குடும்பத்தாருடைய சொத்துக்கள் மற்றும் கடன்கள் பற்றிய விளக்கங்கள் தருதல்.
- வேட்பாளரின் கல்வித் தகுதிகள்.

இத்தகவல்கள் மக்களுக்கு வெளிப்படையாக அறிவிக்கப்பட வேண்டும். இவ்வாறு வேட்பாளர்களால் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் வாக்காளர்கள் தங்களின் முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

**தேர்தல் பரப்புரை:3**

தேர்தலின் முக்கிய நோக்கமே மக்கள் தங்களுக்கு விருப்பமான பிரதிநிதிகள், அரசாங்கம் மற்றும் கொள்கைகளை தேர்த்தெடுப்பதற்கான வாய்ப்பளிப்பதாகும். ஆகவே யார் சிறந்த பிரதிநிதியாக இருப்பர், எக்கட்சி சிறந்த அரசாங்கத்தை அமைக்கும் அல்லது எது சிறந்த கொள்கை

ஆகியவற்றினைப் பற்றிய சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விவாதம் அவசியமாகும். இதுவே தேர்தல் பரப்புரையின் போது நிகழ்கிறது.

நமது நாட்டில் இத்தகைய பரப்புரைகள் இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் நடக்கும் நாள் வரை இரு வாரகாலத்திற்கு நடைபெறுகிறது. இக்கால கட்டத்தில் வேட்பாளர்கள் வாக்காளர்களிடம் சென்று வாக்கு சேகரித்தல், அரசியல் தலைவர்கள் தேர்தல் பொதுக்கூட்டங்களில் உரையாற்றுதல் மற்றும் அரசியல் கட்சிகள் தங்களின் ஆதரவாளர்களைத் திரட்டுதல் ஆகியவை நிகழும். இக்கால கட்டத்தில் தான் நாளேடுகள், சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் தேர்தல் தொடர்பான செய்திகள் மற்றும் விவாதங்கள் இடம் பெறுகின்றன. தேர்தல் பரப்புரை என்பது இந்த இரு வாரங்களுடன் நிறைவு பெறுவதில்லை. அரசியல் கட்சிகள் தேர்தல்கள் நடைபெறுவதற்கு பல மாதங்களுக்கு முன்பிருந்தே தங்களை தயார் செய்கின்றன.

தேர்தல் பரப்புரையின் போது அரசியல் கட்சிகள் முக்கியப் பிரச்சனைகளின் மீது பொது மக்களின் கவனத்தைத் திருப்புகின்றன. அவர்கள் மக்களிடம் அப்பிரச்சனைகளைப் பற்றி பேசுவதன் மூலம் அவர்களை ஈர்த்து அதனடிப்படையில் தங்கள் கட்சிக்கு வாக்களிக்குமாறு செய்வர். ஓர் மக்களாட்சியில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் விரும்பும் வகையில் தேர்தல் பரப்புரையை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும். இருப்பினும் சில நேரங்களில் ஒவ்வொரு அரசியல் கட்சியும், வேட்பாளரும் போட்டியிடுவதற்க ஏற்ற நியாயமான மற்றும் சமமான வாய்ப்பினை உறுதி செய்யும் வகையில் பரப்புரைகளை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்.

நமது தேர்தல் சட்டங்களின் படி ஓர் கட்சி அல்லது வேட்பாளர் கீழ்க்கண்டவற்றினை செய்ய முடியாது

- வாக்காளர்களுக்கு கையூட்டு அளித்தல் அல்லது அச்சுறுத்துதல்
- சாதி மற்றும் மதத்தின் பெயரால் வாக்களிக்கும்படி வேண்டுதல்
- தேர்தல் பரப்புரைகளுக்கு அரசாங்கத்தின் வளங்களை பயன்படுத்துதல்.

இவ்வாறு ஒருவேளை அவர்கள் செய்யும்போது, அவர்கள் தேர்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னரும் நீதிமன்றம் அத்தேர்தலை நிராகரித்து உத்தரவிடலாம். சட்டங்களுடன் மேலும் கூடுதலாக, நமது நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் தேர்தல் பரப்புரைகளுக்கான நன்னடத்தை விதிமுறைகளை ஏற்றுக் கொண்டுள்ளன.

அதன்படி கீழ்க்கண்டவற்றினை ஓர் கட்சி அல்லது வேட்பாளர் செய்ய முடியாது.

- தேர்தல் பரப்புரைக்காக மதவழிபாட்டுத் தலங்களைப் பயன்படுத்துதல்.

- தேர்தலுக்காக அரசு வாகனங்கள், விமானங்கள் மற்றும் அரசு அலுவலர்களைப் பயன்படுத்துதல்.

- தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர் அமைச்சர்கள் எவ்வகைத் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுதல், முக்கிய கொள்கை முடிவுகளை எடுத்தல், பொது சேவை வசதிகளுக்கான வாக்குறுதி அறிவித்தல் போன்றவற்றினை செய்ய கூடாது.

**சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல்கள்:**

சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தல் நடைமுறையை உறுதிப்படுத்துவதே ஓர் அரசியல் முறைமையின் உண்மையான சோதனையாகும். நாம் மக்களாட்சியை நடைமுறைப்படுத்த விரும்பினால் அதற்கு தேர்தல் முறையானது நடுநிலையாகவும், வெளிப்படையானதாகவும் இருத்தல் முக்கியமானதாகும். வாக்காளர்களின் விருப்பங்கள் தேர்தல் முடிவுகளின் மூலம் சட்டபூர்வமாக வெளிப்படுவதற்குத் தேர்தல் முஜற அனுமதிக்க வேண்டும், இந்தியாவில் நடைபெறம் தேர்தல்கள் அடிப்படையில் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுகின்றன. தேர்தலில் வெற்றிபெறும் கட்சி ஆட்சி அமைக்கிறது. இதற்கு எதிர்க்கட்சிகளை விட இக்கட்சியினை மக்கள் தேர்ந்தெடுத்ததே அதற்குக் காரணமாகும். ஒவ்வொரு தொகுதியிலும் இது உண்மையாக இருக்காது. ஒரு சில

வேட்பாளர்கள் பண பலம் மற்றும் நியாயமற்ற வழிமுறைகளின் மூலமாக வெற்றி பெறுகின்றனர். இருப்பினும் பொதுமக்களின் விருப்பத்தை பிரதிபலிப்பதாகவே ஒட்டுமொத்த பொதுத்தேர்தல் முடிவுகள் இதுவரை இருந்துள்ளன. இருப்பினும் மேலும் ஆழமான வினாக்கள் எழுப்பப்படின், அக்கட்சி வேறு மாதிரியாக உள்ளது. உண்மையான அறிவுத்திறன் அடிப்படையில் மக்களின் முன்னுரிமைகள் உள்ளனவா? வாக்காளர்கள் உண்மையாகவே தேர்த்தெடுக்கும் வாய்ப்புகளைப் பெறுகின்றனரா? தேர்தல் என்பது உண்மையில் அனைவருக்கும் சமமான களமாக உள்ளதா? ஓர் சாதாரண குடிமகன் தேர்தலில் தான் வெற்றி பெறுவோம் என நம்பலாமா?

**இவ்வகையான வினாக்கள் இந்திய தேர்தல்களில் உள்ள குறைபாடுகளையும், சவால்களையும் நமது கவனத்திற்கு கொண்டு வருகின்றன. அவையாவன:**

- அதிக பணபலமுள்ள வேட்பாளர்கள் மற்றும் கட்சிகள் தங்களின் வெற்றியைப் பற்றி உறுதியற்ற நிலையில் இருப்பினும் சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சைகளை விட மிகப்பெரிய மற்றும் நியாயமற்ற சாதகமான நிலையில் இருப்பர்.
- குற்றப்பின்னணி கொண்ட வேட்பாளர்கள் தேர்தல் போட்டியில் பிறரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பெரிய கட்சிகளின் சார்பாகப் போட்டியிடும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.
- சில குடும்பங்கள் அரசில் கட்சிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால் அக்கட்சியின் சார்பாகப் போட்டியிடும் வாயப்புகள் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

இந்தியாவின் முதலாவது பொதுத் தேர்தல்கள் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவை.

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் 1951 – 52ம் ஆண்டில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்று முதலாவது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது. மொத்தமுள்ள 489 மக்களவை இடங்களில் காங்கிரஸ் கட்சி 364 இடங்களில் வெற்றி பெற்றது. இது மொத்த வாக்குப்பதிவில் 45 சதவீதமாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாமிடம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். இத்தேர்தலில் 67.6 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றது. 54 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. ஏறத்தாழ நான்கு மாதங்கள் தேர்தல் நடைபெற்றது. அக்டோபர் 25, 1951, முதல் பிப்ரவரி 21, 1952 வரை இத்தேர்தல்கள் நடந்தன. 26 இந்திய மாநிலங்கள் மற்றும் 401 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

- சாதாரண குடிமக்களுக்குத் தேர்தல்கள் குறைவான வாய்ப்புகளையே வழங்குகிறது. ஏனெனில் பெரும்பான்மையான கட்சிகள் ஏறத்தாழ ஒரே மாதிரியான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டுள்ளன.
- பெரிய கட்சிகளை ஒப்பிடுகையில் சிறிய கட்சிகளும், சுயேட்சை வேட்பாளர்களும் பெரும் பின்னடைவைச் சந்திக்கின்றனர்.

இத்தகைய சவால்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் பல வலுவான மக்களாட்சிகளிலும் காணப்படுகின்றன. இவ்வாறான ஆழமான பிரச்சனைகள் பற்றி மக்களாட்சியின் மீது நம்பிக்கையுள்ளவர்கள் கவனம் செலுத்துகின்றனர். இதனால் தான் குடிமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்கள் நமது தேர்தல் முறைமையில் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ள கோரிக்கை வைக்கின்றன. ஓர் மக்களாட்சியில், தேர்தல் நடைமுறை என்பது யுக்தி அடிப்படையில் பங்காற்றுகிறது. ஓர் சாதாரண மனிதனுக்கு தனது பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்குச் சென்று தனது சுதந்திரம் மற்றும் சொத்துக்களை கட்டுப்படுத்தக்கூடிய வகையிலான சட்டங்களை இயற்றுவரைப் பற்றிய முழுமையான தகவல்களை அறிந்து கொள்ளும் அடிப்படையான உரிமை உள்ளது.

மக்களாட்சியில் தகவல்களைப் பெறும் உரிமை என்பது முழுவதுமாக அங்கீரிகரிக்கப்பட்டுள்ளதுடன் அது மக்களாட்சி எனும் கருத்தாக்கத்திலிருந்து வெளிப்படகூடிய இயற்கை உரிமையாகும்.

இந்திய அரசமைப்பின் உறுப்ப 19(1) (அ) பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரத்திற்கான உரிமையினை வழங்குகிறது. வாக்காளர்களின் பேச்சு மற்றும் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரமானது வாக்களித்தலின் மூலமாக வெளிப்படுகிறது. அதாவது வாக்காளர்கள் தங்கள் வாக்கினை செலுத்துவதன் மூலமாக தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். இதற்காக தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளரைப் பற்றிய தகவல்கள் அவசியமாகும். பொதுமக்கள் தங்களின் பிரதிநிதியாக சட்டத்தினை மீறுபவர்களை சட்டத்தினை உருவாக்குபவர்களாக தேர்ந்தெடுப்பதற்கு முன் சிந்தித்து செயல்பட வேண்டும்.

**இந்திய தேர்தல் ஆணையம்:**

இந்திய அரசமைப்பின் உறுப்பு 324 ஓர் தேர்தல் ஆணையத்தினை அமைப்பதை பற்றி விளக்குகிறது. இது சுதந்திரமாகவும், நடுநிலையாகவும், ஒழுங்கான முறையிலும் தேர்தல்களை நடத்துகிறது. இவ்வாணையமானது நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை மேற்பார்வையிட்டு, வழிகாட்டுவதுடன் தேர்தலையும் நடத்துகிறது.

**தேர்தல் ஆணையம் - ஓர் சுதந்திரமான அமைப்பு:**

இந்திய தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டதன் நோக்கமே ஓர் நிரந்தரமான மற்றும் சுதந்திரமான தேர்தல் அமைப்பு அவசியம் என்பதுடன் ஆட்சியாளர்கள் மற்றும் ஆளுங்கட்சியின் அரசியல் அழுத்தத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாகத் தேர்தலை நடத்துவதற்காகும். அத்துடன் நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத்தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை நடத்தும் பொறுப்பும் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அமைப்பு:**

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 16வது மக்களவைத் தேர்தலில் 9,30,000 வாக்குச் சாவடிகளில் 553 மில்லியன் வாக்காளர்களுக்கு மேல் வாக்களித்தனர். இந்தியாவிலுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையானது அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் மேற்கு ஐரோப்பாவின் கூட்டு மக்கள் தொகையினை விட அதிகமாகும். இந்தியாவில் 30 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக ஒரு கட்சி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

**தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் விவரங்கள்:**

| **தேர்தலின் எண்ணிக்கை** | **சபையின் பதவிக்காலம்** | **தேர்தல் தேதிகள்** |
|---|---|---|
| 1. | 1952 – 1957 | 1952 ஜனவரி 2, 5, 8, 9, 11, 12, 16, 21 மற்றும் 25 (9 நாட்கள்) |
| 2. | 1957 -1962 | 1957 மார்ச் 1, 4. 6, 8 மற்றும் 11 (5 நாட்கள்) |
| 3. | 1962 - 1967 | 1962 பிப்ரவரி 17, 19, 21 மற்றும் 24 (4 நாட்கள்) |
| 4. | 1967 – 1971 | 1967 பிப்ரவரி 5, 16 மற்றும் 21 (3 நாட்கள்) |
| 5. | 1971 – 1976 | 1971 மார்ச் 1, 4 மற்றும் 7 (3 நாட்கள்) |
| 6. | 1997 – 1980 | 1977 ஜீன் 12 மற்றும் 14 (2 நாட்கள் |
| 7. | 1980 – 1984 | 1980 மே 20 மற்றும் 31 (2 நாட்கள்) |
| 8. | 1985 – 1986 | 1984 டிசம்பர் 24 (1 நாள் மட்டும்) |
| 9. | 1989 – 1991 | 1969 ஜனவரி 21 (1 நாள் மட்டும்) |
| 10. | 1991 - 1996 | 1991 ஜூன் 16 (1 நாள் மட்டும்) |
| 11. | 1996 – 2001 | 1996 ஏப்ரல் 27 மற்றும் மே 2 (2 நாட்கள்) |
| 12. | 2001 – 2006 | 2001 மே 10 (1 நாள் மட்டும்) |

| | | |
|---|---|---|
| 13. | 2006 – 2011 | 2006 (மே 8 (1 நாள் மட்டும்) |
| 14. | 2011 – 2016 | 2011 ஏப்ரல் 13 (1 நாள் மட்டும்) |
| 15. | 2016 – தற்போது வரை | 2016 மே 16 (1 நாள் மட்டும்) |

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்:**

- வாக்காளர் பட்டியல் தயாரித்தல்
- வாக்காளர் பட்டியலை திருத்துதல்
- தொகுதிக்கான இடங்களை ஒதுக்கீடு செய்தல்
- தேர்தல் நடத்துதல்.
- தேர்தலை மேற்பார்வையிட்டு வழிகாட்டுவதுடன் அது தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்துதல்
- வழிகாட்டுவதுடன் அது தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்துதல்
- அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்
- கட்சிகளுக்கான சின்னங்களை ஒதுக்கீடு செய்தல்
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தலை உறுதி செய்தல்.
- தேர்தல் விவகாரங்கள் தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் குடியரசுத் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட மாநில ஆளுநர்களுக்குத் தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்குதல்.

- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியிழப்பினை முடிவு செய்தல்.

- இந்திய குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநரால் பரிசீலனைக்கு அனுப்பப்படும் மனுக்கள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்த்தல்
- ஓர் அரசியல் கட்சியில் பிளவு ஏற்பட்டால் எழும் தேர்தல் சின்னம் தொடர்பான சச்சரவுகளில் முடிவெடுத்தல்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களின் உச்சவரம்பினை இறுதி செய்யும் அதிகாரம்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்துக்கள் தொடர்பான ஆவணப் பத்திரங்களை கேட்டுப் பெறும் பணி.

அரசியலைத் தூய்மைப்படுத்துவதற்கான உச்சநீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு
ஜீலை 11, 2013 ல் உச்சநீதிமன்றம் வெளியிட்ட ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பில் சிறை அல்லது காவல் துறையினரின் விசாரணையில் இருக்கும் ஒருவர் சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என தீர்ப்பளித்துள்ளது. ஒரு நாள் முன்னதாக, ஜுலை 10, 2013-ல் அதே அமர்வு வழங்கிய தீர்ப்பில் தங்களின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பின், நாடாளுமன்ற, சட்டப்பேரவை அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் குற்றங்களுக்கான தண்டனை பற்றிய தீர்ப்ப வழங்கப்பட்டவுடன் அப்பொதுப் பதவிகளை வகிப்பதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவர்.
இப்பிரிவு நாடாளுமன்ற மற்றும் சட்மன்ற உறுப்பினர்கள் தம்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டால் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8(4) ஐ இந்த அமர்வு நிராகரிப்பு.

- தேர்தல் செலவினக் கணக்கினை ஓர் வேட்பாளர் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கவில்லையெனில் அவரை தகுதியிழப்பு செய்யும் அதிகாரமும், கடமையும்.

- தேர்தல் முடிந்த பின்னர் முறைப்படி அவை அமைக்கப்பட்டதற்கான அறிவிப்பினை வெளியிடுதல்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி (CEO) :**

ஓர் மாநிலம் / ஒன்றிய பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி அம்மாநில / ஒன்றியப் பிரதேசத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரத்துடன் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டில் செயல்படுகிறார். இந்தியத் தேர்தல் ஆணையமே ஓர் மாநிலம் / ஒன்றியப் பிரதேசத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரியை நியமிக்கிறது. அந்நியமனத்தின் போது மாநில / ஒன்றியப் பிரதேச அரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னரே தேர்தல் ஆணையம் இறுதி முடிவெடுத்து செயல்படுத்துகிறது.

**மாவட்ட தேர்தல் அதிகாரி (DEO)**

தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட தேர்தல் அதிகாரி செயல்படுவதுடன் மாவட்டத்தின் தேர்தல் பணிகளை மேற்பார்வையிடுகிறார். மாநில அரசாங்கத்துடன் கலந்தாலோசித்த பின்னர் ஓர் மாநில அரசு அதிகாரியை மாவட்ட தேர்தல் அதிகாரியாக நியமிக்கவோ அல்லது பதவியளிக்கவோ தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு.

**தேர்தல் நடத்தும் அலுவலர் (RO):**

ஓர் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அக்குறிப்பிட்ட நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தொகுதியில் தேர்தலை நடத்தும் பொறுப்பு உள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட மாநில / ஒன்றிய பிரதேச அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்து ஒவ்வொரு நடாளுமன்ற / சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரை நியமிக்கிறது. அவர் அரசாங்க அதிகாரியாகவோ அல்லது உள்ளாட்சி அதிகாரியாகவோ இருக்கலாம். மேலும் கூடுதலாக அவருக்கு தேர்தல் பணிகளில் உதவுவதற்கு ஒன்று அல்லது இரண்டு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொரு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளிலும் நியமிக்கப்படுவதுடன் தேர்தல் நடத்தும் அலுவலரின் பணிகளை செயல்படுத்துவதில் பேருதவியாக இருப்பர்.

**வாக்காளர் பதிவு அலுவலர் (ERO) :**

ஓர் நாடாளுமன்ற / சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பணி வாக்காளர் பதிவு அலுவலருடையதாகும். இந்திய தேர்தல் ஆணையம் மாநில / ஒன்றியப் பிரதேச அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்த பின்னர் வாக்காளர் பதிவு அலுவலரை நியமிக்கிறது. இவர் அரசாங்க அல்லது உள்ளாட்சி அதிகாரியாக இருக்கலாம். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் இவருக்கு உதவி செய்வதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்படுகின்றனர்.

**வாக்குச் சாவடி தலைமை அலுவலர் (PO)**

வாக்குச் சாவடி தலைமை அலுவலர் பிற வாக்குப்பதிவு அலுவலர்களின் உதவியுடன் வாக்குச் சாவடியில் தேர்தலை நடத்துகிறார். மாவட்ட தேர்தல் அதிகாரியே வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களை நியமிக்கிறார். ஒன்றியப் பிரதேசங்களைப் பொறுத்தவரை அந்தியமனங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் (RO) மேற்கொள்கிறார்.

**தேர்தல் பார்வையாளர்கள் (EO):**

இந்திய தேர்தல் ஆணையம் அரசாங்க அதிகாரிகளைத் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கிறது. (பொதுப்பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் செலவினைப் பார்வையாளர்கள்). இவர்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்குத் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இவர்கள்

தேர்தல் ஆணையத்தால் தங்களுக்கு தரப்பட்ட பணிகளை நிறைவேற்றுகின்றனர். இவர்கள் ஆணையத்திற்கு நேரடி பொறுப்பாகின்றனர்.

**தேர்தல் சீர்திருத்தங்கள், கட்சித்தாவல் தடைச்சட்டம்:**

**குழுக்கள்**

**மேற்கண்ட குழுக்கள் மற்றும் ஆணையங்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் நமது தேர்தல் முறைமையில் அவ்வப்போது பல்வேறு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.**

- 61வது அரசமைப்புச் சட்டத்திருத்தம், 1988-ன் மூலமாக வாக்களிக்கும் வயது இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டு ஆக குறைக்கப்பட்டது.

- வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தியமைத்தல் போன்ற தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அயற்பணியில் சென்று தேர்தல் ஆணையத்தின் கீழ் பணிபுரிதல்.

- ஓர் தொகுதியில் வேட்பாளர்களை முன்மொழியும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் பத்து சதவீதம் அல்லது பத்து வாக்காளர்கள் இதில் எது குறைவானதோ அதனை அதிகரித்தல்.

- 1989-ம் ஆண்டு முன்னனு வாக்குப்பதிவு எந்திரம் தேர்தலில் பயன்படுத்தப்படும் வகையில் அம்சங்கள் ஏற்படுத்தப்பட்டன.

- 1989-ம் ஆண்டு வாக்குச்சாவடியைக் கைப்பற்றுவதனைத் தடுப்பதற்கு தேர்தலை ஒத்திவைக்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டது.

- அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், பதிவு செய்யப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை என வகைப்படுத்தி வேட்பாளர்களை பட்டியலிடுதல்

- வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு 48 மணிநேரம் முன்பிருந்து அப்பகுதியில் மதுபான விற்பனையினைத் தடைசெய்தல்.

- தேர்தலில் போட்டியிடும் ஓர் வேட்பாளர் எதிர்பாராமல் மரணமடைந்தால் சம்பந்தப்பட்ட சம்பந்தப்பட்ட கட்சிக்கு மாற்று வேட்பாளரை பிரிந்துரைப்பதற்கான வாய்ப்புடன் ஏழு நாட்கள் அவகாசம்.

- தேர்தல் தினத்தன்று பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு ஊதியத்துடனான விடுமுறை ஆயுதங்கள் தடை.

- 1998-இல் ஓர் அம்சம் எற்படுத்தப்பட்டு அதன மூலமாக உள்ளாட்சி அதிகாரிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பணியாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவன ஊழியர்கள், அரசு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோர் தேர்தல் தினத்தன்று பணியில் ஈடுபடுத்தப்பட பணிக்கப்பட்டனர்.

- 1999-இல் வாக்காளர்களில் ஓர் பிரிவினர் தபால் வாக்கினைப் (Postal Ballot) பயன்படுத்தி வாக்களிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

- 2003-இல் இராணுவத்தில் பணிபுரிபவர்கள் தங்களின் சார்பாக பதிலி வாக்கு (Proxy vote) அளிக்கும் முறை கொண்டு வரப்பட்டு இராணுவச் சட்டத்திற்கு இசைவான வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- 2003-இல் தேர்தல் ஆணையம் வேட்பாளர்களின் முந்தைய குற்ற சம்பவங்கள் மற்றும் சொத்துக்கள் பற்றிய விவரங்களை பிரகடனப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

- 2003-இல் மாநிலங்களதைத் தேர்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வேட்பாளரின் வசிப்பிடம் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. மேலும் வெளிப்படையான வாக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

- 2003-இல் வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் பயணச் செலவினங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

- அரசாங்கமே இலவசமாக வாக்காளர் பட்டியலை வழங்குதல்

- 2009-இல் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகளை நடத்தி முடிவுகளை அறிவிப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

- 209-இல் தேர்தலின் போது தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை தகுதியிழப்பு செய்வதுடன் மூன்று மாத காலத்திற்குள் குற்றம் சாட்டப்பட்டவரின் மீதான விவரங்களை குறிப்பிட்ட அதிகாரி சமர்ப்பிக்க வேண்டும்.

- தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பிணைத்தொகை அதிகரிக்கப்பட்டது.

- மாவட்டத்தினுள் மேல் முறையீட்டு அதிகாரிகளை நியமித்தல்

- 2010-இல் வெளிநாடு வாழ் இந்தியக் குடிமக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

- 2011-இல் தேர்தல் செலவினங்களுக்குக்கான உச்சசவரம்பு அதிகாரிக்கப்பட்டது.

**கட்சித் தாவல் தடைச்சட்டம்:**

52வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 1985-ன் மூலமாக ஒரு சட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்கு மாறும் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினரைத் தகுதியிழப்ப செய்யும் நடைமுறை கொண்டு வரப்பட்டது. இதற்காக இந்திய அரசமைப்பில் பத்தாவது அட்டவணை இணைக்கப்பட்டது. இச்சட்டமே "கட்சித் தாவல் தடைச் சட்டம்" என அழைக்கப்படுகிறது. பின்னர் 91வது அரசமைப்புச் சட்டதிருத்தம், 2003ன் மூலமாக ஓர் சிறுதிருத்தம் செய்யப்பட்டது. அதாவது கட்சி பிளவுறும் சூழலில் கட்சித் தாவலின் அடிப்படைகள் பொருந்தாது என்பதாகும்.

**இச்சட்டத்தின் அம்சங்கள்**
**தகுதியிழப்பு:**

எக்கட்சியினைச் சார்ந்தவராக இருப்பினும் அவையின் ஓர் உறுப்பினர் தனது விருப்பத்தின் அடிப்படையில் உறுப்பினர் பதவியை விட்டு விலகுதல் அல்லது தான் சார்ந்த கட்சியின் வழிகாட்டுதலுக்கு எதிராக வாக்களித்தல் அல்லது வாக்களிப்பிலிருந்து கட்சியின் முன் அனுமதியின்றி விலகியிருத்தல் ஆகியவற்றால் தகுதியிழப்பு செய்யப்படலாம்.

ஓர் சுயேட்சை வேட்பாளர் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மற்றொரு அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவையிலிருந்து அவர் தகுதியிழப்பு செய்யப்படுவார்.

ஓர் நியமன உறுப்பினர் தான் பதவியேற்ற நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் ஏதேனும் அரசியல் கட்சியில் சேர்ந்தால் அவையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

**விதிவிலக்குகள்:**

ஓர் கட்சி மற்றொரு கட்சியுடன் இணைக்கப்படும் போது கட்சித்தாவலின் அடிப்படையில் ஓர் உறுப்பினரின் மீது நடவடிக்கை எடுப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. சபையை வழிநடத்தும் பொறுப்பிற்கு ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தனது கட்சி உறுப்பினர் பொறுப்பிலிருந்து சுயவிருப்பத்தின் அடிப்படையில் வெளியேறினாலும் அப்பதவியிலிருந்து விடுபட்ட நிலையில் மீண்டும் கட்சியில் சேரலாம் என்பது மற்றொரு விதிவிலக்காகும்.

**தீர்மானிக்கும் அதிகாரம்:**

அவையை நடத்தும் பொறுப்பில் உள்ளவரே கட்சித் தாவல் தொடர்பான தகுதியிழப்பு பிரச்சனைகளை இறுதி செய்வார்.

**விதியை உருவாக்கும் அதிகாரம்:**

இந்திய அரசமைப்பின் பத்தாவது அட்டவணையில் உள்ள அம்சங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வரும் விதிமுறைகளை உருவாக்கும் அதிகாரம் அவையை நடத்துபவருக்கே உள்ளது. அத்தகைய விதிகள் 30 நாட்களுக்குள் அவையில் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவற்றினை குறிப்பிட்ட அவை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்யலாம். மேலும் ஓர் உறுப்பினர் தனது விருப்பத்தின் அடிப்படையில் அவ்விதிகளை மீறுவது என்பதனை அவையின் மரபுகளை மீறிய செயலாகக் கருத நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அவையை நடத்துபவருக்கு உள்ளது.

**சட்டத்தினைத் திறனாய்வு செய்தல்:**

1. பதவிகள் அல்லது பொருள் சார்ந்த ஆதாயங்களுக்காக அரசியலில் கட்சித்தாவலை மேற்கொள்ளும் செயல்களைத் தடுக்கும் வகையில் அரசமைப்பின் பத்தாவது அட்டவணை வடிவமைக்கப்பட்டுள்ளது.
2. கொள்கையற்ற மற்றும் அறநெறிக்குப் புறம்பான வகையில் மேற்கொள்ளும் கட்சித்தாவல்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக இந்திய நாடாளுமன்ற மக்களாட்சியின் மாண்பினை இது வலுப்படுத்துகிறது.
3. சட்டமன்ற உறப்பினர்களின் கட்சிமாறும் மனப்பாங்கினைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசியல் கட்டமைப்பினை உறுதியாக வலுப்படுத்துகிறது.
4. கட்சிகளை இணைப்பதன் மூலம் சட்டமன்றத்தில் உள்ள கட்சிகளை மறுசீரமைப்பு செய்ய வாய்ப்பு ஏற்படுத்துகிறது.
5. தற்போதுள்ள அரசியல் கட்சிகளுக்கு அரசமைப்பு அடிப்படையில் தெளிவாக அங்கீகாரம் வழங்குகிறது.

**மாநிலங்களவைத் தேர்தலைப் பற்றி நாம் அறிந்து கொள்வோமா?**

நமது மாநிலங்களவைத் தேர்தலில் மாற்றித்தரக்கூடிய வாக்கு முறை பின்பற்றப்படுகிறது. மாநிலங்களவையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறிப்பிட்ட ஒதுக்கீடு உள்ளது. மாநிலங்களவையின் உறுப்பினர்கள் மாநில சட்டப்பேரவையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டப்பேரவை உறுப்பினர்களே வாக்காளர்களாவர். ஒவ்வொரு வாக்காளரும் தங்களுக்கு விருப்பமான வேட்பாளரை வரிசைப்படுத்த வேண்டும். வெற்றி பெறுவதற்கு ஒவ்வொரு வேட்பாளரும் குறிப்பிட்ட அளவிலான வாக்குகளைப் பெற வேண்டும். இதற்கென வகுக்கப்பட்ட விதிமுறை பின்வருமாறு:

பதிவான மொத்த வாக்குகள்
தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய + 1

மொத்த வேட்பாளர்கள் + 1

உதாரணமாக தமிழகத்தின் 200 சட்டப்பேரவை உறுப்பினர்களால் 4 மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனில் அவர்கள் (200 / 4 + 1 = 40 + 1) 41 வாக்குகளைப் பெற வேண்டும். வாக்கு எண்ணிக்கையின் போது ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற முதல் முன்னுரிமை வாக்குகள் (First Preference votes) எண்ணப்படுகின்றன. இவ்வாறு முதல் முன்னுரிமை வாக்குகள் எண்ணப்பட்ட பின்னரும் சில வேட்பாளர்கள் குறிப்பிட்ட அளவிலான வாக்குகளைப் பெறவில்லையெனில் குறைவான முதல் முன்னுரிமை வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் பெற்ற வாக்குகளில், அதாவது வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது முன்னுரிமை வேட்பாளருக்கு அந்த வாக்குகள் மாற்றப்படுகின்றன. இந்நடைமுறை ஓர் வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படும் வரை தொடர்கிறது.

**தேர்தலில் முதலில் நிலையை கடந்தவரே வெற்றி பெற்றவர் என்ற முறையை இந்தியா பின்பற்றியது?**

இதற்கான பதிலை சிந்திப்பது மிகவும் தேர்தல் முறையை நீங்கள் படிக்கும் போது அம்முறை எவ்வளவு கடினமானது என்றும், அது சிறிய நாடுகளில் சாத்தியமாகுமே தவிர இந்தியாவைப் போன்ற துணைக்கண்ட நாடுகளில் செயல்படுத்துவது மிகவும் கடினமான பணியாகும். ஆனால் முதலில் நிலையைக் கடத்தல் முறை (FPTP) என்பது மிகவும் பிரபலமாகவும், வெற்றிகரமாகவும் இருப்பதற்கு அதன் எளிமையே காரணமாகும்.

இத்தேர்தல் முறை முழுவதையும் புரிந்துகொள்வதற்கு மிகவும் எளிமையாகவும், தேர்தல் மற்றும் அரசியலைப் பற்றி தெரியாத பொதுவான வாக்காளர்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது. தேர்தலின் போது வாக்காளர்களுக்கு தெளிவான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன தேர்தலின் போது வாக்காளர்கள் ஓர் வேட்பாளர் அல்லது கட்சியை அங்கீகரிக்க வேண்டும் அப்போதைய அரசியலின் தன்மைக்குத் தக்கவாறு வாக்காளர்கள் கட்சி அல்லது வேட்பாளருக்கோ அல்லது இரண்டிற்கும் சமமாகவோ முக்கியத்துவம் தரலாம்.

அல்லது இரண்டிற்கும் சமமாகவோ முக்கியத்துவம் தரலாம்.

முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் என்னும் முறையானது கட்சிகளுக்கிடையே தேர்வு செய்யும் முறையாக இல்லாமல் குறிப்பிட்ட வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் முறையாகும். ஆனால் பிற தேர்தல் முறைகளில் குறிப்பாக விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் வாக்காளர்கள் ஓர் ஆட்சியைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் பிரதிநிதிகளும் கட்சியின் பட்டியலில் இருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் விளைவாக, ஓர் குறிப்பிட்ட பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய மற்றும் பொறுப்பான ஓர் பிரதிநிதி இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆனால் முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் முறையைப் போன்றே தொகுதி அடிப்படையிலான முறையிலும் வாக்காளர்களுக்குத் தங்களின் பிரதிநிதி யார் என தெரிவதுடன் அவர்கள் வாக்காளர்களுக்குப் பதில் சொல்ல கடமையும், பொறுப்பும் கொண்டுள்ளனர். முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் முறையில் பொதுவாக தனிப்பெரும் கட்சிக்கு அல்லது கூட்டணிக்கு சில இடங்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. இது அவர்களின் பங்கான வாக்குகளை விட அதிகமாக இருக்கும்.

இங்ஙனம் இம்முறையானது நிலையான அரசாங்கத்தை உருவாக்க வகை செய்வதுடன் நாடாளுமன்ற அரசாங்கம் அமைதியாகவும். திறம்பட செயலாற்றவும் வாய்ப்பளிக்கிறது. முதலில் நிலையை கடந்து செல்லுதல் (ஃபீஃபீ) முறையானது ஓர் பகுதியில் உள்ள சமூகக் குழுக்களைச் சேர்ந்த வாக்காளர்களை ஒன்றிணைத்து வெற்றி பெற வைக்கிறது. ஆகவே முதலில் நிலையைக் கடந்து செல்லுதல் (FPTP) முறையானது எளியதாகவும், சாதாரண வாக்காளர்களுக்கு அறிமுகமானதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள். அரசின் நிதியுதவி என்றால் என்ன?**

- அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் என்னும் கருத்தாக்கமே ஊழலைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். இதில் தனிநபர் நிதியளிப்புகளுக்கு மாற்றாக அரசாங்கமே தேர்தல்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

- அரசியல் கட்சிகளின் நிதியில் வெளிப்படைத் தன்மையை எட்டுவதற்குச் சிறந்த வழியாக அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் பரித்துரைக்கப்படுகின்றன. அரசின் நிதியுதவி என்பது இயற்கையானதாகவும், மக்களாட்சிக்காக செய்யும் செலவினமாகவும் நம்பப்படுகிறது.

வெளிப்படையாக வாக்களிக்கும் முறை என்பது கைகளை உயர்த்துவதன் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும்.
ரகசிய வாக்கெடுப்பு முறையில் ஓர் வாக்காளர் தனது வாக்கினைப் பிறர் அறியாதவாறு வாக்குப்பெட்டி எந்திரத்தில் அளிக்கிறார்.

- இதன் மூலமாக புதிய மற்றும் வளரும் கட்சிகளுக்கு ஆதரவளிக்கப்படுவதுடன் தேர்தல்களும் நேர்மையான முறையில் நடக்கின்றன.

- கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கு தனியார் நிதியுதவி இருக்குமெனில் சமுதாயத்தில் உள்ள பொருளாதார சமத்துவமின்மை என்பது அரசாங்கத்தில் அரசியல் சமத்துவமின்மையாக உருமாறுகிறது.

**அரசின் நிதியுதவியுடனான தேர்தல் குறித்த இந்திரஜித் குப்தா குழு, 1998:**

அரசின் நிதியுதவியுடனான தேர்தல்கள் பற்றி ஆராய்வதற்காக இரந்திரஜித் குப்தா தலைமையிலான குழு 1998-ல் நியமிக்கப்பட்டது. அக்குழுவானது அரசியல் கட்சிகளுக்கு அரசின் நிதியுதவியுடனான தேர்தல்களை நடத்துவதற்கான அரசமைப்பு அம்சங்கள், சட்டக் கூறுகள், பொது விருப்பம் போன்றவற்றினை கொள்கை அடிப்படையில் ஆராயும் அதிகார வரம்பினைக் கொண்டிருந்தது. இதன் மூலம் குறைவான நிதி ஆதாரங்களைக் கொண்ட கட்சியுடன் தேர்தலில் போட்டியிடும் சூழலை நிறுவுவதாகும்.

**இரண்டு கூடுதல் வரையறைகள்:**

1. அரசின் தேர்தல் நிதி சுயேட்ச்சை வேட்பாளர்களுக்கு வழங்கப்படமாட்டது. வாக்காளர்கள் மத்தியில் பிரபலமாக இருப்பதுடன் தங்களுக்கென தேர்தல் ஆணையத்தால் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ள தேசிய அல்லது மாநிலக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு மட்டுமே அரசின் தேர்தல் நிதியுதவி வழங்கப்படும்.
2. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் வேட்பாளர்களுக்கு சில வகையினங்களில் மட்டுமே குறுகிய காலத்திற்கு நிதியுதவி வழங்கப்படும்.

மேலும் இக்குழு தனியாக தேர்தல் நிதியை உருவாக்க பரிந்துரைத்தது. இதற்கு மத்திய அரசின் சார்பாக வருடத்திற்கு 600 கோடி ரூபாயும், அனைத்து மாநில அரசுகளும் அதற்கு நிகரான பங்களிப்பினை ஒட்டு மொத்தமாக மேற்கொள்ள வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது. மேலும் இக்குழுவின் பரிந்துரையில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் அரசிடமிருந்து தேர்தல் நிதியைப் பெறும் தகுதியுள்ளவர்களாவதற்கு கடந்த நிதியாண்டில் வருமான வரி செலுத்தியிருக்க வேண்டியது அவசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரசியலில் இளைஞர்களின் பங்கு:**

தேர்தலில் வெற்றி பெற நினைக்கும் அனைத்து அரசியல் தலைவர்களும் சிந்திக்கக் கூடியதாக இத்தலைப்பு உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் வாக்காளர் பட்டியலில் பன்மடங்கிலான முதல் தலைமுறை வாக்காளர்கள் சேர்க்கப்படுகின்றனர். இந்த இளைய சமுதாயத்தினரின் வாக்கு என்பது தேர்தல் முடிவுகளை பெருமளவில் மாற்றியமைக்கிறது.

இன்றைய இளைய தலைமுறையினருக்கு நமது தேசத்தினை மாற்றும் வலிமை உள்ளதுடன் அது நிகழும் என்பதும் நிதர்சனமாகும். ஆகவே மாற்றம் முன்னேற்றம் மற்றும் புதுமையைப் புகுத்தல் ஆகியவை இளைஞர்கள் தங்களின் தோளில் சுமக்கும் பொறுப்பாகும்.

**இளைஞர்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்?**

- பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையில் தேர்தல்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இத்தேர்தல் நடைமுறையில் பங்குபெறும் இளைஞர்கள் அவர்கள் ஆதரவினை வழங்குவதன் மூலம் அரசியல் மற்றும் கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி பாராட்டுக்குரியவர்கள் ஆகின்றனர்.
- “ஒரு நபர் ஒரு வாக்கு“ என்ற அடிப்படையில் வாக்களிப்பதன் மூலமாக ஒவ்வொரு குடிமகனும் சமவாய்ப்புடன் தேர்தலில் பங்கேற்கின்றனர். வாக்களிப்பதன் மூலமாக இளைஞர்களும் பிறரைப் போன்றே அரசியல் செல்வாக்கு மற்றும் அழுத்தத்தைக் தரும் திறனைப் பெறுகின்றனர்.

- தேர்தல்களில் அனைவரும் பங்கேற்பதன் மூலமாக “மக்கள் விருப்பம்“ பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது.
- இளைஞர்கள் ஆரம்பத்திலிருந்தே தேர்தலில் வாக்களிக்கும் பழக்கத்தை கடைபிடிப்பதன் மூலம் அதிக வாக்குப்பதிவினை உறுதி செய்யலாம்.
- இளைஞர்கள் மற்றும் வயதான வாக்காளர்களின் அரசியல் விருப்பங்கள் மாறுபடுகின்றன. இளைஞர்கள் தேர்தலில் வாக்களிக்கவில்லை என்றால் அவர்களின் தனிப்பட்ட விருப்பங்கள், கொள்கையை உருவாக்குபவர்களால் புறந்தள்ளப்படுகிறது.

**நோட்டா என்றால் என்ன?**
**மேற்கண்டவர்களுள் எவருமில்லை**

- தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.
- நமது அரசியல் முறைமையைத் தூய்மைப்படுத்தும் நோக்கில் உச்சநீதிமன்றம் கூறியது என்னவெனில் தேர்தலில் போட்டியிடும் அனைத்து பேட்பாளர்களையும் நிராகரிக்கும் உரிமை வாக்காளர்களுக்கு உள்ளது என்பதாகும். இதனால் உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்திற்கு வழிகாட்டும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் "மேற்கொண்ட எவருமில்லை" (NOTA) எனும் வாய்ப்பினை வாக்காளர்களுக்கு வழங்கும்படி உத்தரவிட்டது.

"நோட்டா" அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்புவரை எதிர்மறை வாக்கினை செலுத்த விரும்பும் வாக்காளர்களுக்கு தனி வாக்குச் சீட்டு தரப்படுவதுடன் ஓர் பதிவேட்டில் அவர்களின் பெயரும் பதிவு செய்யப்படும்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் 1961-ன் பிரிவு 49(0) கூறுவது என்னவெனில் ஓர் வாக்காளர் தனது வாக்காளர் வரிசை எண்ணை 17A படிவத்தில் பதிவு செய்த பின்னர் எதிர்மறை வாக்கினைச் செலுத்தலாம்.

"நோட்டாவைப் போன்று முன்னரே வேறோரு அம்சம் இருந்ததை நீங்கள் அறிவீர்களா? அது "எதிர்மறை வாக்களித்தல்" (Negative Voting) என அழைக்கப்படுகிறது.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் தரப்பட்டுள்ள வேட்பாளர்கள் பட்டியலின் இறுதியில் நோட்டா வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

மேற்கண்டவர்களுள் எவருமில்லை (None of the above – NOTA) - தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்களரின் உரிமை.

**நோட்டாவை அனுமதிக்கும் நாடுகளை அறிவீர்களா?**

கொலம்பியா, உக்ரைன், பிரேசில், வங்கதேசம், பின்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், சிலி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் நோட்டாவைப் பின்பற்றின. சில சமயங்களில் அமெரிக்காவும் இதனை அனுமதித்தது. 1975-ம் ஆண்டு முதல் டெக்சாஸ் மாகாணம் இந்த அம்சங்களைப் பின்பற்றி வருகிறது.

# 11$^{TH}$அரசியல் அறிவியல்
# Vol – II
# Unit – 12

**உள்ளாட்சி அரசாங்கங்கள்**
**உள்ளாட்சி அரசாங்கத்தின் பொருள், தன்மை மற்றும் முக்கியத்துவம்:**

உள்ளாட்சி அரசாங்கம் என்பது, நம்முடைய கிராமங்கள், நகரங்கள் மற்றும் மாநகரங்களில் மக்களுக்கான சேவைகள் மற்றும் வசதிகளை அளிப்பதற்கும், உள்ளூர் பிரச்சனைகளை நிர்வகிப்பதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் கிராமம், நகரம், பெருநகரங்கள் மற்றும் மாநகரங்கள் என ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் செயல்படுபவை ஆகும். ஒரு கிராமம் அல்லது நகரத்தில் உள்ள மக்களையும் அரசாங்கத்தையும் இணைக்கும் விதமாக உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுகின்றன. மக்களுக்கு சாலை பழுது, சாலையில் நீர் தேங்கியிருத்தல், தெரு விளக்குகள் எரியாமை போன்ற அடிப்படை பிரச்சனைகளின்போதும், குளங்களை உருவாக்குதல், பூங்காக்களை அமைத்தல் போன்ற அடிப்படை தேவைகளின்போதும், உள்ளாட்சி அரசாங்கங்கள் அவற்றை மேற்கொள்கின்றன. அவசர காலங்களின் போதும், உள்ளூரில் பிறப்பு மற்றும் இறப்பு நிகழும்போதும் அவற்றை கையாளும் பொறுப்பும் உள்ளாட்சி அரசாங்களுக்கு உண்டு. ஒரு பகுதியில் இருப்பிட சான்றிதழ் மற்றும் பிறப்பு, இறப்பு, வருமான சான்றிதழ்களை வழங்கும் ஓர் அமைப்பாகவும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்படுகின்றன.

மக்களின் அன்றாட தேவைகளை கையாளும் பொறுப்புடைய ஒரு முழுமையான அமைப்பாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன. நம் அரசாங்க நிர்வாக கட்டமைப்பில் இறுதி நிலை அலகாக உள்ளாட்சி அரசாங்கங்கள் உள்ளன. உள்ளாட்சி அரசாங்கமானது ஒரு சபையை கொண்டுள்ளது. அதில் உள்ள உறுப்பினர்கள் அதன் கிராமம் அல்லது நகரத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவர். அவர்கள் மக்களின் பிரச்சனைகளை மக்கள் சார்பாக சபையில் விவாதித்து தீர்வுகளை காண வேண்டிய பொறுப்புடையவர்கள் ஆவர். அந்த சபையின் உறுப்பினர்கள் ஐந்து ஆண்டுகள் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை, அந்தந்த நாட்டு சட்டப்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை பிரதிநிதித்துவ அமைப்புகள், அவை சபையில் மக்களை பிரதிநிதிப்படுத்துகின்றன. உள்ளாட்சி அரசாங்கங்கள் அவைகளின் பகுதிக்குட்பட்ட மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக விவாதிக்கவும், அவற்றிற்கான தீர்வுகளை காணவும், மேலும் அப்பிரச்சனைகளை மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லவும் சட்டப்படியான உரிமை பெற்ற அமைப்புகளாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் மக்களாட்சி நடைமுறையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், சபையில் கொண்டு வரப்படும் அனைத்து பிரச்சனைகளுக்கும் விவாதம், பேச்சுவார்த்தை மூலமே அனைவரும் எற்கத்தக்க வகையில் தீர்வு எட்டப்பட வேண்டும். சபை உறுப்பினர்கள் இந்தியாவின் அரசமைப்பிற்கு உட்பட்டு விவாதிக்கவும் முடிவெடுக்கவும் முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளாட்சி அரசாங்கங்களின் முக்கியத்துவமே, அது கையாளுகின்ற பிரச்சனைகளின் தன்மையில் உள்ளது. இப்பிரச்சனைகள் அனைத்துமே உள்ளூர் பிரச்சனைகளாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் கையாளுகின்ற பிரச்சனைகளின் உள்ளூர் தன்மையும், அவற்றின் பல்வேறு வகைகளும் மத்திய, மாநில அரசாங்கங்களினால் கையாள முடியாதவை ஆகும். ஏனெனில் உள்ளூர் பிரச்சனைகள் முழுமையாக, அப்பகுதிக்கேயுரிய தனித்தன்மையுடன் இருக்கும். அவற்றை உள்ளூர் மக்களை கொண்ட அமைப்பின் மூலமே சிறப்பாக கையாண்டு பொருத்தமான தீர்வை எட்டமுடியும். அவ்வாறு இல்லாமல் பொருத்தமற்ற தீர்வு எட்டப்படுமானால் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்டு, அது மக்களின் சுமையை மீண்டும் அதிகரிக்கும்.

எனவே, உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை மக்களின் உள்ளூர் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். உள்ளாட்சி அரசாங்கங்கள் பொதுவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை கொண்டுள்ளன. அவர்கள் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் உள்ளூர் பிரச்சனைகளை சபையில் விவாதித்து அதற்கு தீர்வு காண்கின்றனர். உள்ளாட்சி அரசாங்கங்கள், அரசின் திட்டங்களும்

வளங்களும் அடித்தட்டு மக்களை சென்றடைய முக்கிய வழிகளாக விளக்குகின்றன. இன்று எந்தவொரு நாடும் உள்ளாட்சி அரசாங்கங்களை புறக்கணிக்க முடியாது. ஏனெனில் உள்ளூர் பிரச்சனைகளே இப்போது சர்வதேச பிரச்சனைகளாக மாறுகின்றன. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் உலகமே ஒரு கிராமமாக மாறிவிட்டது.

**உள்ளாட்சி அரசாங்கங்களின் வகைகள்:**

உள்ளாட்சி அரசாங்கங்கள் கிராமங்கள் மற்றும் நகரங்கள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடானது அப்பகுதி மக்களின் தொழில் (விவசாயம் சார்ந்த அல்லது விவசாயம் சாராத) அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த தொழிலை அடிப்படையாக கொண்ட பகுதி என்பது, அப்பகுதியின் பெரும்பான்மை மக்களோ, அல்லது அனைத்து மக்களுமோ விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை போன்ற தொழில்களை செய்வது. ஆனால் நகர பகுதிகளில் மக்கள் வர்த்தகம் மற்றும் அதுசார்ந்த தொழில்களில் ஈடுபடுவர். நகரப் பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரமானது வர்த்தகம் மற்றும் அது சார்ந்த நிறுவனங்களையும் தனியார் மற்றும் அரசாங்கத்தின் நிர்வாக அலுவலகங்களில் உள்ள வேலைவாய்ப்பையும் அடிப்படையாக கொண்டுள்ளது. நகரப் பகுதிகள் என்பவை வெளி உலகத்திற்கும் கிராமப்பகுதிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகின்றன. கிராமப்பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அரசாங்கங்கள் ஊரக உள்ளாட்சி அரசாங்கங்கள் என்றும் நகர பகுதிகளில் உருவாக்கப்படும் அரசாங்கங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**உள்ளாட்சி அரசாங்கங்கள்**




இந்தியாவில், கிராம உள்ளாட்சி அரசாங்கங்கள் "பஞ்சாயத்து ராஜ்" என்ற பொது பெயரில் அழைக்கப்படுகின்றன. அரசாங்கங்கள் பஞ்சாயத்து செய்கிற (ஆழ்ந்து விவாதித்தல் மற்றும் பேச்சு வார்த்தை நடத்துதல்) இடமாக கருதப்படுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் நகர்புற உள்ளாட்சி அரசாங்கங்கள் அவைகளின் பொருளாதார மற்றும் அரசியல் அடிப்படையை கொண்டு நகராட்சிகள், மாநகராட்சிகள், நகரியம், பாளையவாரியம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய நகரங்கள் நகராட்சிகளாகவும் பெரு நகரங்கள் மாநகராட்சிகள் எனவும், தொழில் நகரங்கள் நகரியங்கள் எனவும். ராணுவ அமைப்புகள் உள்ள இடங்கள் பாளைய வாரியங்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள்:**

- மாநகராட்சிகள்
- நகராட்சிகள்
- நகரியங்கள்
- பேரூராட்சிகள்
- பாளைய வாரியங்கள்

மாநகராட்சிகள் என்பவை, பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட, சேவைகளையும், வசதிகளையும் வழங்க விரிவான நிர்வாக அமைப்பு தேவைப்படுகிற பெரு நகரங்களில் ஏற்படுத்தப்படுகின்றன.

கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களில் இருந்து பல ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெறும் மக்களின் இடப்பெயர்ச்சி ஒரு நகரத்தை, ஒரு பெருநகரமாக மாற்றுகிறது.

நகராட்சிகள் என்பவை மக்கள் தொகை பத்து லட்சத்திற்கும் குறைவாக உள்ள சிறு நகரப்பகுதிகளில் ஏற்படுத்தப்படுகின்றன. நகராட்சிகளும் வகை – 1, வகை – 2 என

வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகைப்பாடானது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் நகராட்சிகளின் தர நிர்ணயம் செய்யப்படுகின்றது.

**முழுமையான சுகாதாரத்தை நோக்கி**

- ஒன்றிணைந்த குறைந்த செலவினத்திலான சுகாதார திட்டத்தின் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் மூலம் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையை 2010-ம் ஆண்டுக்குள் நீக்கும் நோக்கத்தில் உலர் கழிவறைகளை அமைக்க மானியங்களை உயர்த்தி வழங்குதல்.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் அனைத்து குடிசைப்பகுதிகளுக்கும் அடிப்படை தேவைகளை (குடிநீர், துப்புரவு, கழிவு நீரகற்றல், மின்சாரம், ஆரோக்கியம், சமூக பாதுகாப்பு மற்றும் வீடு வழங்குதல்) (நகர்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குதல் மேலும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி திட்டம்) மேலும் “ராஜீவ் ஆவாஸ் யோஜனா“ திட்டம் மூலம் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை ஒவ்வொரு வீட்டுக்கும் வழங்குதல்.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் வடிகால், சுகாதாரம் மற்றும் உலர் கழிவு மேலாண்மை வசதிகளை மேம்படுத்துதல் (சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான கட்டமைப்பு, ஆளுமை மற்றும் நகர்ப்புற கட்மைப்பு வளர்ச்சி திட்டம்)
- முழுமையான சுகாதார கொள்கை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது.

புதிய தொழிற்சாலைகள் அமைகின்ற இடங்களில் நகரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அங்குள்ள குடிமக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களிலிருந்து விவசாயம் சாரா தொழில்களுக்கு மாறுகின்றனர். இராணுவ, பயிற்சி மையங்கள் அமைந்திருக்க கூடிய இடங்களில், இராணுவ தளவாடங்கள் உற்பத்தி தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் இடங்களில் பாளைய வாரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கிராமப்புற உள்ளாட்சி அரசாங்கங்களும், நகர்ப்புற அரசாங்கங்களும், அரசாங்க படிநிலையில் இறுதி நிலையில் உள்ளவை ஆகும்.

உலகின் பல்வேறு நாடுகளில் ஊரக மற்றும் நகர்ப்புற அரசாங்கங்கள் வெவ்வேறு விதங்களில் எற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் உள்ளாட்சி அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் எல்லா நாடுகளிலும் ஒன்றே. உள்ளாட்சி அரசாங்கங்கள் என்பவை உள்ளூர் மக்களுக்காக, உள்ளூரிலிருந்து கிடைக்கும் வருவாயையே பிரதானமாக கொண்டு ஏற்படுத்தப்பட்டவை.

அரசாங்க படி நிலையில், மேல் நிலையில் உள்ள அரசாங்கம் உள்ளாட்சி அமைப்புகளை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல் பணியை மேற்கொள்கிறது.

**பல்வேறு நாடுகளில் உள்ளாட்சி அரசாங்கங்கள்:**

உள்ளாட்சி அரசாங்கங்கள் மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து காணப்படும் பழமையான ஒன்றாகும். பல்வேறு உலக நாடுகளில் அவர்களின் நவீன அரசுகளே உள்ளாட்சி அரசாங்கங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. பல்வேறு நாடுகளில் அமைந்துள்ள உள்ளாட்சி அரசாங்கம் தொடர்பாக அறிய தொடங்கினால், அனைத்து நாடுகளிலும், அவை சிறிய நாடோ அல்லது பெரிய நாடோ, வளர்ச்சியடைந்த நாடோ அல்லது வளர்சியுறா நாடோ ஏதோ ஒரு வகையில் உள்ளாட்சி அரசங்கங்கள் செயல்படுவதும் அதன் மூலம் பொது சேவைகள் மற்றும் வசதிகள் அடித்தட்டு மக்கள் வளர சென்றடைவதையும் காணலாம்.

ஆனால், கட்டமைப்பு, அதிகாரம், பணி வரம்பு, நிதி ஆதாரங்கள் போன்றவற்றில் அவை பெருமளவு வேறுபடுகின்றன. பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களே தங்களின் முயற்சியால் மையப்படுத்தப்பட்டு இருந்த அதிகாரத்தை பரவலாக்கம் செய்கின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளில் நிதி பகிர்வு, காவல் பணி வரம்பு, போக்குவரத்து, மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம்

போன்றவை இன்றும் தீர்க்கப்படாத பிரச்சனைகளாகவே உள்ளன. ஆனால் வளரும் நாடுகளில் மத்திய அரசாங்கங்கள் அதிகாரத்தையும், நிதி ஆதாரங்களையும் மையப்படுத்தும் முயற்சியை மேற்கொள்கின்றன. இந்தியாவில், மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு நிர்வாக மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்களை மேலும் பகிர்ந்தளிக்க மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் எப்போதுமே இருந்து வருகிறது.

**இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி:**

இந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்களின் தோற்றத்தை பற்றி ஆராய்ந்ததால், அவை கிறித்து பிறப்பதற்கு முன்பே (பொ.ஆ.மு) இருந்ததை அறியலாம். கி.மு. (பொ.ஆ.மு) 600 முதல் கி.பி. (பொ.ஆ) 600 வரை உலகில் பல குடியரசுகள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. இந்த காலத்தில் தான் சமண மதத்தை தோற்றுவித்த மகாவீரர், புத்த மதத்தை தோற்றுவித்த கௌதம புத்தர் போன்றோர் தோன்றினர். புத்த மற்றும் சமண இலக்கியங்களில் கிராமங்கள் அளவு மற்றும் வாழும் முறையால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தர் மற்றும் மகாவீரர் ஏற்படுத்திய மத அமைப்புகளில் மக்களாட்சி நடைமுறையில் முடிவுகள் எடுக்கப்பட்டன. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் அப்போதைய கிராம நிர்வாகம் பற்றி விரிவாக விளக்கப்படுள்ளது. மௌரியர்களின் ஆட்சி காலத்தில் கிராமமும், மாவட்டமுமே நிர்வாக அலகுகளாக இருந்தன.

தென்னிந்திய தீபகற்பத்தில் கிறித்துவின் காலத்திற்கு முன்பே உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டு வந்துள்ளன. இந்த வரலாற்று காலம் முந்தைய சோழர் காலம், களப்பிரர்கள் காலம் மற்றும் பிந்தைய சோழர் காலம், விஜயநகர பேரரசின் தோற்றம், இஸ்லாமியர்கள், மொகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய சோழர் காலத்திலும், களப்பிரர்கள் காலத்திலும் இருந்த உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி சிறிதளவே ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆனால், தென்னிந்தியாவின் கடைக்கோடியில் ஆட்சி புரிந்த பாண்டியர்கள் காலத்திலும், தென் மத்திய இந்தியாவில் ஆட்சி புரிந்த பல்லவர் காலத்திலும் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மேலும் சோழர்கள் காலத்தில் உள்ளாட்சி அரசாங்கங்கள் நன்கு மேம்பட்ட நிலையில் செயல்பட்டு வந்துள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் கண்டெடுக்கப்பட்ட முதலாம் பராந்தக சோழன் கால கல்வெட்டுகள் (கி.பி. (பொ.ஆ) 919 கி.பி (பொ.ஆ) 922) உள்ளாட்சி அரசாங்கங்கள் பற்றி விரிவாக விளக்குகின்றன. ஒவ்வோர் ஊரிலும் ஒரு சபை இருந்ததாகவும், அதில் அவ்வூரின் அனைத்து ஆண்களும் உறுப்பினராக இருந்ததையும், அவர்கள் அனைத்து பொதுப்பிரச்சனைகளிலும் முடிவெடுத்ததையும் இக்கல்வெட்டுகள் மூலமாக அறிய முடிகிறது. இந்த சபைகள் "ஊர்" மற்றும் "மகா சபை" என்று இரண்டு விதங்களாக அழைக்கப்பட்டன. மேலும் மூன்றாவது வகையாக நகரம் என்று வியாபார மையங்களும், நான்காவது நாடு என்றும் அழைக்கப்பட்டன. இவற்றில் நாடு என்பது கிராமங்கள் மற்றும் மற்ற பகுதிகளை உள்ளடக்கிய அமைப்பாகவும், நகரம் என்பது நகரப்பகுதிகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பாகவும் இருந்தன. பொதுவாக 9-ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலங்களில் உள்ளாட்சி அரசாங்கங்கள் செயல்பட்டமைக்கான சான்றுகள் குறைவாகவே கிடைத்துள்ளன. "நாடு" மற்றும் "நகரம்" என்ற இரு அமைப்புகளுமே, நிலங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள், கோவில்கள் மற்றும் நீர்பாசனங்களை நிர்வகித்தல், வரிவசூலித்தல், பெரிய மூலதனம் தேவைப்படுகின்ற பணிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் தொண்டு நிறுவனங்களை நிர்வகித்தல் போன்ற பணிகளை செய்கின்றன. "ஊர்" மற்றும் "மகாசபை" என்ற இரு அமைப்புகளும் அரசனின் கட்டளைகளை அமல்படுத்தும் அதிகாரிகளுக்கு துணைபுரிந்தன.

முதலாம் ராஜராஜ சோழன், வீர நாராயண சதுரவேதி மங்கலம் என்ற ஊரின் மகாசபைக்கு நாட்டுக்கு துரோகமிழைத்த துரோகிகளின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டதை அறிய முடிகிறது. சர் சார்லஸ் மெட்கேப், சர் ஜார்ஜ் போர்டு வுட் மற்றும் எல்பின்ஸ்டோன் போன்ற பல வலராற்றாசிரியர்கள் பண்டைய மற்றும் இடைக்காலத்தில் தென்னிந்தியாவில் உள்ளாட்சி அரசாங்கங்கள் வளமையுடன் செயல்பட்டு வந்ததை குறிப்பிடுகின்றனர். ஆனால் மிக விரிவான முறையில் அனைத்து பகுதிகளிலும் செயல்பட்டு வந்தது என்பதில் சில வரலாற்றாசிரியர்களுக்கு சந்தேகம் உள்ளது.

மொகலாயர்கள் காலத்தில் (கி.பி. (பொ.ஆ) 1500 முதல் கி.பி. (பொ.ஆ) 1777) அரசுகள் மாறினாலும், மத்திய அரசுக்கும் உள்ளூர் நிர்வாகத்துக்குமிடையேயான உறவில் அடிப்படை விதிகள் மாறவில்லை. மொகலாய பேரரசு அதன் உச்சத்தில் இருந்தபோது, அது பல மாகாணங்களாக (பராக்னாஸ்) பிரிக்கப்பட்டிருந்தது. மாகாணங்களில் உட்பிரிவுகள் (சர்க்கார்) ஏற்படுத்தப்பட்டிருந்தன. சர்க்கார்கள் பல கிராமங்களை கொண்ட தொகுதிகளாக (பராக்காஸ்) பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படிநிலையிலும் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கென அதிகாரிகள் பேரரசால் நியமிக்கப்பட்டிருந்தனர். கிராமப்பகுதிகளில் மொகலாய பேரரசின் இறுதிக் காலங்களில், உள்ளாட்சி அமைப்புகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. ஆனால் அவை பற்பல தாக்குதல்களை கண்டாலும், தொடர்ந்து இயங்கின. பிளாசிப்போருக்கு பின் (கி.பி. (பொ.ஆ) 1757), ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, வங்காள நவாபிடமிருந்து நில வரி வசூல் உரிமைகளை பெற்றது. இதுவே, இந்தியாவில் ஆங்கிலேயே ஆட்சிக்கு வழிகோலியது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் மாகாண தலை நகரங்களான கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னை தவிர மற்ற கிராம மற்றும் நகர வியாபார மையங்கள் எந்த ஒரு கட்டுப்பாட்டின் கீழும், மேற்பார்வையின் கீழும் இயங்கவில்லை. மாவட்ட நிர்வாகமானது மாவட்ட ஆட்சியரின் கீழ் இயங்கியது. ஆங்கிலேயர் ஆட்சியில் மாவட்ட நிர்வாகம் முக்கியமானதொரு நிர்வாக அமைப்பாகவும், நாட்டின் ஊரக பகுதிகள் அனைத்தும் அதன் கட்டுப்பாட்டிலும் இருந்தன.

கல்கத்தா (கொல்கத்தா) பம்பாய் (மும்பாய்) மற்றும் மெட்ராஸ் (சென்னை) நகரங்களில், மாநகராட்சி நிர்வாகத்தை ஏற்படுத்தியது ஆங்கிலேயர் ஆட்சியின் ஒரு முக்கியமான நிகழ்வாக கருதப்படுகிறது. 1882-ஆம் ஆண்டு ரிப்பன் பிரபு ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தார். அதன்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்தவும் அதை மேற்பார்வையிட மாவட்ட அளவில் வாரியங்களை ஏற்படுத்தவும் நடவடிககை எடுத்தார்.

ரிப்பன் பிரபுவின் தீர்மானம், உள்ளாட்சி அமைப்புகளில் பெரும்பாலும் அதிகாரிகளல்லாதோரை கொண்டிருக்க வேண்டும் எனவும், அவர்கள் முடிந்தவரை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனவும் கூறியது. ஏறத்தாழ 500 உள்ளாட்சி அமைப்புகள் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரிகளல்லாதோரை கொண்டு தொடங்கப்பட்டன. அவர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சியர் பரிந்துரைத்தார். மாவட்ட வாரியங்களின் பணிகள் 1909-ஆம் ஆண்டு வரை காவல், கல்வி மற்றும் கிராம துப்புரவு முதலியவையாக மட்டுமே இருந்தன.

ரிப்பன் பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட உள்ளாட்சி அரசாங்கங்கள் பலரால் விமர்சிக்கப்பட்டன. ஆங்கிலேய அரசாங்கம் 1907-ஆம் ஆண்டு மத்திய அரசிற்கும், மாகாண மற்றும் அதன் கீழ் உள்ள அமைப்புகளுக்குமிடையே நிர்வாக மற்றும் நிதி உறவுகளைப் பற்றி விசாரிப்பதற்கு ஒரு விசாரணை ஆணையத்தை அமைத்தது. அப்போதைய நிர்வாக அமைப்பு நிர்வாக பகிர்வின் மூலம் மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் இந்திய அரசாங்க சட்டம் 1919-ன் படி மாகாண அரசாங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எனும் அம்சம் அரசின் இரட்டை ஆட்சி முறையின் கீழ் ஏற்படுத்தப்பட்டது.

மாவட்ட மற்றும் வட்டார அமைப்புகளில் 1923-ம் ஆண்டு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாகாணங்களில் இருந்த அலுவலரல்லாத தலைவர்கள் மாற்றப்பட்டு அலுவலர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட நிர்வாக அமைப்புகளில் நீதிக்கட்சியின் உறுப்பினர்கள் 1927 ஆம் ஆண்டு 545 பேர்கள் நியமிக்கப்பட்டனர். 1937-ல் முதல் 1947 ஆம் ஆண்டு வரை தேச சுதந்திர பிரச்சனை உட்பட பல பிரச்சனைகளை உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்தனர்.

இரட்டை ஆட்சி முறை மூலமாக நிர்வாக துறைகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும், மாகாண அரசுகளுக்கு மாற்றி தரப்பட்ட துறைகள் எனவும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. காவல், சட்டம் ஒழுங்கு, நிதி போன்ற துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் எனப்படும். அவை ஆளுநரின் வசம் இருக்கும். கல்வி மற்றும் பிற துறைகள் மாற்றித் தரப்பட்ட துறைகளாகும். அவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கும்.

இந்தியா 1947-ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்பு, உள்ளாட்சி அரசாங்களுக்கு புத்துயிரூட்ட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவில் பரவலாக்கப்பட்ட அதிகார அமைப்பு

இருத்தல் வேண்டும், கிராமபுற பஞ்சாயத்துக்கு ஆளுகையில் பொறுப்புகள் அளிக்கப்பட வேண்டும் (தன்னிறைவு பெற்ற கிராம சுயராஜ்ஜியம்) என்று மகாத்மா காந்தி வலியுறுத்தினார்.

ஷர்மா நாராயணன் என்பவர் சுதந்திர இந்தியாவுக்கான காந்திய அரசியலமைப்பு தொடர்பான ஒரு திட்ட வரைபடத்தை தயாரித்தார். அதில் குடிமக்களின் சமூக, பொருளாதார அரசியல் நடவடிக்கைகளுக்கான அடிப்படை அமைப்பாக பஞ்சாயத்துகள் இருக்கும்படி அமைந்தார்.

கிராம பஞ்சாயத்துகள் குடிமை, அரசியல் மற்றும் நிர்வாகப்பணிகளைப் போல் உற்பத்தியை ஒருங்கிணைத்தல் மற்றும் வளங்களின் விநியோகம் தொடர்பான பொருளாதார பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த பொருளாதார நடவடிக்கையின் மூலமே கிராம சமூகங்கள் தன்னிறைவு அடைவதுடன் தங்களது அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இதனால், நவம்பர் 26, 1959-ஆம் நாள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய அரசமைப்பின் பகுதி நான்கில் அமைந்துள்ள அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில், விதி 40 ஏற்படுத்தப்பட்டது. "அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகள் சுய ஆட்சியின் அலகுகளாக பணிபுரிய தேவையான அதிகாரங்களையும், திறனையும் வழங்க வேண்டும்" என அரசியலமைப்பு பிரிவு 40 கூறுகிறது.

அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் விதிகளின் படி செயல்படுவதற்காக 1952-ஆம் ஆண்டு பேரார்வத்துடன் சமூக மேம்பாட்டு திட்டம் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கமாக மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் கிராமங்களின் சமூக பொருளாதார மாற்றத்தை உறுதி செய்வதாகும். இதற்கு தொழில் நுட்ப ஒத்துழைப்பையும், நிதி பங்களிப்பையும் அரசு செய்யும். இந்த திட்டமானது, தேசிய விரிவாக்க பணியாக பல்வேறு ஊரக பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிவை விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் ஊரக கைவினை தொழில்களில் புகுத்துவது இதன் நோக்கமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலமான 1956-ல் (1956-61) கிராம பஞ்சாயத்துகள் அமைப்பு ரீதியாக உயர்நிலைகளில் உள்ள மக்கள் நிர்வாக அமைப்புகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. 1957-ஆம் ஆண்டு, திட்ட வடிவமைப்பு குழு ஒன்றை, பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் மத்திய அரசாங்கம் அமைத்தது. மேத்தா குழு முக்கியமான இரண்டு பரிந்துரைகளை கூறியது

அவை: நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும் மற்றும் நிர்வாகம் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இரண்டாவதாக, ஊரக வளர்ச்சி வட்டங்கள் மக்களாட்சி நிர்வாக அலகுகளாக மாற்றப்பட வேண்டும். அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட ஊராட்சி ஒன்றியம் மூலம் அப்பகுதியில் மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும் மாவட்ட அளவில் ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அளவிலான சுகாதாரம், விவசாயம்,கால்நடை, கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட மேம்பாட்டு குழு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரைத்தது. இந்த மாவட்ட அமைப்பு ஒரு ஆலோசனை வழங்கும் அமைப்பாக மட்டுமே செயல்படும். மேத்தா குழுவின் பரிந்துரைகள் பெரும்பாலும் அனைவராலும் வரவேற்கப்பட்டன. பல்வேறு மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஏறத்தாழ 90 சதவீத இந்திய மக்கள் 1960 வாக்கில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்குள் கொண்டுவரப்பட்டனர்.

- ❖ பஞ்சாயத்து அமைப்புகளின் செயல்பாடுகளை பற்றி ஆராயவும், அதனை செம்மைப்படுத்தவும் இந்திய அரசாங்கம், 1977-ஆம் ஆண்டு அசோக் மேத்தா தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழு. பஞ்சாயத் ராஜ் அமைப்பு மக்களாட்சி பண்புகளை கொண்ட ஒரு உள்ளாட்சி அரசாங்க அமைப்பாக மாறவேண்டும், மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும் அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்றது. எனவே, இது தனது முதல் பரிந்துரையாக மாவட்ட பஞ்சாயத்து நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்றது. ஒரு தற்கால தீர்வாக, வட்டார அளவில் பஞ்சாயத்து ஒன்றியம் நீடிக்க பரிந்துரைத்தது. இது உள்ளாட்சி அரசாங்கத்தின் ஒரு அலகாக இல்லாமல், மாவட்ட பஞ்சாயத்திற்கு ஒரு இடைநிலை ஆதரவு கரமாக செயல்பட வேண்டும் என்றது. அசோக் மேத்தா குழு, 1978-ஆம் ஆண்டு தனது பரிந்துரையை சமர்பித்தது. இதன் எதிரொலியாக கர்நாடகா, மகாராஷ்டிரா,

ஆந்திர பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்கள் தங்கள் மாநில பஞ்சாயத்து சட்டங்களில் திருத்தங்களை கொண்டுவந்தன.

- உள்ளாட்சி அரசாங்கங்களை வலுப்படுத்த 1978 முதல் 1986 வரை, சி.எச். அனுமந்தராவ் குழு, ஜி.வி.கே. ராவ் குழு மற்றும் எல்.எம்.சிங்வி குழு போன்ற பல குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவையாவுமே அசோக் மேத்தா குழுவின் பரிந்துரைகளில் சிறுசிறு மாற்றங்களையே பரிந்துரைத்தன. ராஜீவ்காந்தி அரசாங்கத்தால் 1989-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 64-வது மற்றும் 65-வது சட்ட திருத்தம் மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும். ஆனால், இது மாநிலங்களவையில் நிறைவேற்றப்படவில்லை.

- பின்பு, பல்வேறு முயற்சிகளின் விளைவாக 1992-ஆம் ஆண்டு, முந்தைய பல முயற்சிகளின் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கி, அரசாங்கம் 73-வது மற்றும் 74வது சட்டத்திருத்த மசோதாவை 1992-ல் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி இறுதியில் அது 1993-ஆண்டு இரு அவைகளிலும் நிறைவேற்றியது.

- இந்த 73-வது சட்ட திருத்தமும் 74-வது சட்ட திருத்தமும் இந்திய அரசமைப்பில் பகுதி IX மற்றும் IX(A) என்ற இரு பகுதிகளை இணைத்தது. அதில் அரசியல் சட்ட பிரிவுகள் 243 முதல் 243(ZG) வரை உள்ளது.

**73-வது அரசமைப்பு சட்ட திருத்தம் அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்:**

- மக்கள்தொகை இருபது லட்சத்துக்கும் மிகாமல் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் கிராமம், ஒன்றியம் மற்றும் மாவட்டத்தைக் கொண்ட மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என 73-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்ட அரசமைப்பு சட்ட பிரிவு 243(B) கூறுகிறது. மாவட்டம் என்பது சாதாரணமாக வழக்கில் உள்ள ஒரு மாநிலத்தின் மாவட்டத்தை குறித்தாலும், கிராம மற்றும் ஒன்றிய பஞ்சாயத்துகளின் எல்லை பற்றி இந்த சட்ட திருத்தம் குறிப்பிடவில்லை. ஒரு கிராம பஞ்சாயத்தின் எல்லையை மாநில ஆளுநர் ஒரு அறிக்கை மூலமாக தீர்மானிக்கலாம். அது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இதைப் போலவே இடைநிலையில் உள்ள பஞ்சாயத்தான ஒன்றிய பஞ்சாயத்தையும் ஆளுநர் தன் அறிக்கை மூலம் தீர்மானிக்கிறார். இது மாநில அரசுக்கு பஞ்சாயத்துகளை அமைப்பதிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களை அமைப்பதிலும் முழு சுதந்திரத்தை வழங்குகிறது.

- அரசமைப்பில் ஒரு புதிய அட்டவணையாக 11-வது அட்டவணை சேர்க்கப்பட்டது. அது கட்டாய பணிகள் மற்றும் விருப்ப பணிகளை பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தருகிறது.

    1. கிராம அளவில் கிராம பஞ்சாயத்து உள்ளது.
    2. மாவட்ட அளவில் மாவட்ட பஞ்சாயத்து உள்ளது.
    3. 20 லட்சத்துக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட மாநிலங்களில் கிராம மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு இடைப்பட்ட அளவில் இடைநிலை பஞ்சாயத்துக்கள் உள்ளன.

- ஒரு பஞ்சாயத்தில் உள்ள அனைத்து இடங்களும், தொகுதி மக்களின் நேரிடையான தேர்தல் மூலம் நிரப்பப்பட வேண்டும். ஒரு கிராம பஞ்சாயத்தின் வாக்காளர்களை கொண்ட அமைப்பு ”கிராமசபை” என்று அழைக்கப்படுகிறது. ஒரு கிராம பஞ்சாயத்தின் வாக்காளர் பட்டியலில் உள்ள அனைவரும் கிராம சபை உறுப்பினர்கள் ஆவர்.

- ஒவ்வொரு பஞ்சாயத்திலும், பஞ்சாயத்து தலைவர் அம்மாநில சட்டப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்த சட்டப்படியே கிராம பஞ்சாயத்தின் தலைவருக்கும், ஒன்றிய பஞ்சாயத்தின் தலைவருக்கும் மாவட்ட பஞ்சாயத்தில் பிரதிநிதித்துவம்

**பதினோராவது அட்டவணை (பிரிவு 243G)**

- விவசாயம் மற்றும் விவசாய விரிவாக்க பணிகள்
- நில மேம்பாடு, நிலச்சீர்த்திருத்தங்களை அமல்படுத்துதல், நிலங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பேணுதல்.
- சிறிய நீர் பாசனங்களை நிர்வகித்தல், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல்
- கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பால் பண்ணை
- மீன் வளம்
- சமூக காடுகள் மற்றும் பண்ணை காடுகள்
- சிறு காடுகளின் மூலமான உற்பத்தி
- சிறு தொழில்கள், உணவு பதப்படுத்தும் தொழில்கள் உட்பட
- காதி, கிராமம் மற்றும் குடிசைத் தொழில்கள்
- ஊரக வீட்டு வசதி
- குடிநீர்
- எரிபொருள் மற்றும் கால்நடை தீவனம் சாலைகள், சிறுபாலங்கள், பெரிய பாலங்கள், படகு, நீர்வழிகள்
- ஊரக மின்மயமாக்கல் மற்றும் மின் விநியோகம்
- மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள்
- வறுமை ஒழிப்பு திட்டங்கள்
- தொடக்க கல்வி மற்றும் மேல் நிலைக் கல்வி
- தொழில்நுட்ப பயிற்சி மற்றும் தொழில் கல்வி
- நூலகங்கள்
- கலாச்சார நடவடிக்கைகள்
- சுகாதாரம் மற்றும் துப்புரவு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் மருந்தகங்கள் உட்பட
- குடும்ப நலன்
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு
- சமூக நலம்: மாற்றுத்திறனாளிகள் மற்றும் மன நலம் குன்றியோர் நலம் உட்பட
- நலிவடைந்த பிரிவினரின் நலம் குறிப்பாக பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர்
- பொது விநியோக முறை
- சமுதாய சொத்துக்களை நிர்வகித்தல்

அளிக்கப்படுகிறது. அது போலவே சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கிராம பஞ்சாயத்துக்கு மேல் உள்ள பஞ்சாயத்துகளில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சட்ட திருத்தம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஒன்றிய பஞ்சாயத்திலும், மாவட்ட பஞ்சாயத்திலும் பங்கு பெறுகிற வாய்ப்பை வழங்குகிறது. மேலும், பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு அளிக்கிறது. மேலும், பெண்களுக்கு மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மிகாமல் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. பஞ்சாயத்துகளின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள்.

> இந்தியாவின் 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,50,000 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன.

- மாநில சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட என்ன தகுதிகள் தேவையோ, அதே தகுதிகள் தான் ஒருவர் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட தேவைப்படும் தகுதிகள் ஆகும். பஞ்சாயத்தின் பொறுப்புகள் எவை என்று தெளிவாகவும் விரிவாகவும் அரசமைப்பின் பதினோராவது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய நிதிக்குழு போலவே, மாநில நிதிக்குழு ஒன்று உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு மாநில நிதியை பகிர்ந்து கொடுப்பதற்கும், அதில் பரிந்துரைகளை கொடுப்பதற்கும் அரசமைப்பு சட்டத் திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்டது.

❖ 73-வது சட்டத்திருத்தத்தின் விளைவாக உச்ச நீதிமன்றம் அனைத்து உள்ளாட்சி அதிகாரிகளும் அரசாகவோ அல்லது அரசாங்கமாகவோ தான் கருதப்பட்டு அவ்வாறே நடத்தப்பட வேண்டும் என்று கூறியது. இதன் விளைவாக பஞ்சாயத்துகள் சட்டப்பூர்வ தன்மை பெறுகின்றன. அவை அரசின் கருவியாக அங்கீகரிக்கப்பட்டு மக்களின் பங்களிப்பு அமைப்புகளை கீழ்நிலைகளில் உருவாக்குகின்றன. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகளான மாநில தேர்தல் ஆணையம், மாநில நிதிக்குழு போன்றவை பஞ்சாயத்துகளுக்கு நிலைத்தன்மையையும், நிரந்தர தன்மையையும் அளிக்கின்றன. அடிப்படை சேவைகளான குடிநீர், ஊரக துப்புரவு, சுகாதாரம், தொடக்க கல்வி போன்றவை உள்ளாட்சி அமைப்புகளின் பிரதான பணியாக இருந்த போதிலும் பெரும்பாலான பஞ்சாயத்துகள், மாநில அரசின் திட்டங்களை அமல்படுத்தும் நிறுவனங்களாகவே நடத்தப்படுகின்றன.

**பஞ்சாயத்து ராஜ் (1959 – 2009)**

பொன் விழா ஆண்டு – அக்டோபர் 02, 1959 ஆம் நாள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ராஜஸ்தான் மாநிலம் நகவுரில் பஞ்சாயத்து ராஜ்-க்கு அடிக்கல் நாட்டினர். ஊரக இந்தியாவை ஆள்வதில் இது ஒரு புரட்சிகரமான படியாகும். கிராமங்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல் என்ற நோக்குடனான இந்த பயணம் அன்று தொடங்கியது.

❖ மாவட்ட ஆட்சியரின் கீழ் செயல்படும் மாவட்ட நிர்வாகமானது, உத்தரவுகளை நிறைவேற்றும் நிர்வாக அமைப்பாக உள்ளது. இதில் கிடைமட்ட ஒருங்கிணைப்பு கீழ்நிலையில் இல்லாமல் இயங்கும் படியாக நம்முடைய மக்களாட்சி கட்டமைப்பு உள்ளது.

❖ உள்ளாட்சி நிர்வாகமானது மேலும் பொறுப்புடனும், வெளிப்படை தன்மையுடனும் மற்றும் மக்களுக்கு பதிலளிக்கும் கடமை உணர்வுடனும் செயல்பட மத்திய மற்றும் மாநில அரசுகளில் மட்டுமல்லாது மாவட்ட மற்றும் கிராம அளவிலும் பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவைகளுக்குள் நியாயமான வகையில் பணிகள் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**73 வது அரசமைப்பு சட்ட திருத்தத்தினால் (1991) ஏற்படுத்தப்பட்ட மூன்றடுக்கு பஞ்சாயத் ராஜ் அமைப்பு**

❖ மாவட்ட பஞ்சாயத்துகள் (தேர்ந்தெடுக்கப்பட்டோர் மற்றும் நியமிக்கப்பட்டோர்)
❖ ஊராட்சி ஒன்றிய குழு (தேர்ந்தெடுக்கப்பட்டோர்)
❖ கிராம பஞ்சாயத்து (தேர்ந்தெடுக்கப்பட்டோர்)
❖ கிராம சபை (ஒரு கிராமத்தின் அனைத்து வாக்களார்களும்) (ஆலோசனை அமைப்பு)

**74-வது அரசமைப்பு சட்டதிருத்தம் - அமலாக்கம் மற்றும் அதன் விளைவுகள்:**

❖ 74-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தின்படி நகர பகுதிகள் என்பவை வெவ்வேறு விதமான அளவுகள், குணம் மற்றும் முக்கியத்துவம் கொண்ட நகரங்களையும் பெரு நகரங்களையும் உள்ளடக்கியவை. மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்கள் மற்றும் பாளைய வாரியங்கள் என்பவை பொதுவான நகர்ப்புற உள்ளாட்சி அரசாங்க வகைகளாக உள்ளன. இதில் முதல் நான்கு வகைகளும் மாநில நகராட்சி சட்டங்களின் அடிப்படையிலும், பாளைய வாரியம் மட்டும் மத்திய சட்டமான, பாளைய வாரியங்கள் சட்டம், 1924-ன் அடிப்படையிலும் செயல்படுகின்றன.

❖ அரசமைப்பின் 74-வது அரசமைப்பு சட்ட திருத்தம் 1922-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, ஜீன் 1993-ஆம் ஆண்டு அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்த 1992ம் ஆண்டு சட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் ஓர் ஆண்டு காலம் கால அவகாசம் வழங்கியது. அதற்குள் ஒவ்வொரு மாநிலமும், யூனியன் பிரதேசமும் தங்கள் சட்டங்களை தேவையான அளவு திருத்துவதன் மூலமோ மாற்றுவதன் மூலமே மத்திய சட்டத்தின் விதிகளை தங்கள் சட்டங்களில் ஏற்படுத்தி

அதன் மூலம் நகர உள்ளாட்சி அரசாங்கங்களை அமைத்திட வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது. உதாரணமாக பஞ்சாப் நகராட்சிகள் சட்டம் 1911 மாற்றப்பட்டு பஞ்சாப் நகராட்சிகள் மசோதா 1998 கொண்டு வரப்பட்டதை கூறலாம்.

- 74-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தில் நகர உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றடுக்கு முறை பரிந்துரைக்கப்பட்டது. அவை பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள். இவற்றைப் பற்றி விரிவாக காணலாம்.

**பேரூராட்சிகள்:**

- ஒரு பகுதி, ஊரக பகுதியிலிருந்து நகர பகுதியாக உயரக்கூடிய நிலையில் இருந்தால், அப்பகுதி பேரூராட்சி என அழைக்கப்படும். இது நகராட்சிக்கும், ஊராட்சிக்கும் இடைப்பட்ட ஓர் நிலையாகும். இதன் மக்கள் தொகை 5,000-க்கு மேலும் 15,000-க்கு மிகாமலும் இருக்கும். அதன் வருவாய் ஈட்டலும் வருவாய் ஆதாரங்களும் ஊராட்சிக்கென்று அரசு நிர்ணயித்துள்ள வரம்பை விட அதிகரித்து இருக்கும். ஒரு பேரூராட்சியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 3க்கு குறையாமலும் அதே சமயத்தில் 15-ஐ விட மிகாமலும் அம்மாநில சட்டம் கூறும் எண்ணிக்கையில் இருக்கும். இந்த பேரூராட்சி எந்த சட்டமன்ற தொகுதியின் எல்லைக்குள் வருகிறதோ அந்த சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநில அரசால் நியமிக்கப்படும் நகராட்சி நிர்வாகத்தில் அனுபவம் பெற்ற அல்லது சிறப்பு நிபுணத்துவமுடைய இரண்டு உறுப்பினர்கள் பேருராட்சியின் தேர்ந்தெடுக்கப்படாத உறுப்பினர்களாக இருப்பர். இந்த நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பேரூராட்சி கூட்டங்களில் கலந்து கொண்டாலும் வாக்களிக்கும் உரிமை கிடையாது. ஒரு பேரூராட்சியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கும்.

- இந்த பேரூராட்சியின் பகுதிகள் பல சிறு தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, அவை வார்டுகள் என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு வார்டும் ஒரு வார்டு உறுப்பினரை தேர்ந்தெடுக்கும். அந்த பேரூராட்சியின் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கைக்கும் ஒட்டு மொத்த மக்கள் தொகை எண்ணிக்கைக்கும் உள்ள விகிதாசாரத்தின் அடிப்படையில் பட்டியலினத்தவருக்கும் பழங்குடியினருக்கும் வார்டுகள் இட ஒடுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. மேலும்ட ஒட்டு மொத்த வார்டுகள் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு இட ஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது.

- பேரூராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒருவரை தலைவராகவும், மற்றொருவரை துணைத்தலைவராகவும் பேரூராட்சியின் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த கூட்டத்தை துணை ஆணையர் கூட்டுகிறார். ஒவ்வொரு பேரூராட்சிக்கும் கட்டாயம் செய்ய வேண்டிய பணிகளாக குடிநீர் வழங்கல், வடிகால், தூய்மை போன்றவை உள்ளன. ஒவ்வொரு பேரூராட்சிகளுக்கும் அரசு ஒரு செயல் அதிகாரியை நியமிக்கிறது.

**நகராட்சி:**

- மக்கள் தொகை 15,000-க்கு மேலும் மூன்று இலட்சத்திற்கு கீழும் உள்ள சிறு நகரப் பகுதிகளில் நகராட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதே போல் அதன் வரி வருவாய், மற்ற வருவாய்கள் அரசு நிர்ணயித்த அளவுக்குள் இருத்தல் வேண்டும். இதை அவ்வப்போது அந்தந்த மாநிலங்கள் தீர்மானிக்கும்.

| நகராட்சி நிலை | மக்கள் தொகை |
|---|---|
| வகையினம் அ | ஒரு லட்சமும் அதற்கு மேலும் |
| வகையினம் ஆ | 50,000 முதல் 1 லட்சம் வரை |
| வகையினம் இ | 50,000 க்கு கீழ் |

- நகராட்சியின் வகையினம் அ-ல் 20 எண்ணிக்கைக்கு குறையாமலும், 50 எண்ணிக்கைக்கு மிகாமலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருப்பர். அதேபோல் வகையினம் ஆ-ல் 15 முதல் 30 வரை, வகையினம் இ-ல் 10 முதல் 15 வரை தேர்ந்தெடுக்கப்பட் உறுப்பினர் இருப்பர். சட்ட மன்ற தொகுதி எல்லைக்குள் வருகின்ற நகராட்சிகளில், அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவி வழி உறுப்பினராக நகராட்சியில் இருப்பார். மூன்று உறுப்பினர்கள்

வரை அரசாங்கம் நகர சபைக்கு நியமிக்கலாம். தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தலில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பங்கு பெற்று வாக்களிக்க முடியாது. நகராட்சி உறுப்பினர்கள் மக்களால் ரகசிய வாக்கெடுப்பு முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

❖ ஒட்டுமொத்த நகராட்சி பகுதியும், எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமோ அத்தனை வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பட்டியலில் நகராட்சி எல்லைக்குள் உள்ளவர்களே பொதுவாக நகராட்சியின் வாக்காளர்களாக எடுத்துக் கொள்ளப்படுவர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்கள் அக்கட்சியின் வேட்பாளருக்கு வழங்கப்படும்.

❖ தேர்தல் முடிவுகள் வெளியான 14 நாட்களுக்குள் துணை ஆணையர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டி அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுக்க வகை செய்ய வேண்டும். நகர பஞ்சாயத்துகளைப் பொறுத்தவரையிலும் ஓர் நகரப் பகுதியில் உள்ள பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் அடிப்படையிலே தனி தொகுதிகள் நகர பஞ்சயாத்துகளில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேலும் கூடுதலாக பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினப் பெண்கள் உட்பட மொத்த இடங்களில் 30 சதவீகிதம் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகை மூன்று லட்சத்திற்கு குறைவாக உள்ள நகராட்சிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட வார்டுகளை இணைத்து வார்டு குழுக்கள் ஏற்படுத்தப்படும். அந்தந்த வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். வார்டு குழு உறுப்பினர்களாக இருப்பர். ஒவ்வொரு நகராட்சியிலும் நிலைக்குழுக்கள் ஏற்படுத்தப்படும். இதில் நகராட்சியின் தலைவர் மற்றும் துணை தலைவர், மேலும் வகையினம் அ – வாக இருந்தால் இரண்டு உறுப்பினர்களையும் நகராட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பர். இந்த நிலைக்குழுவின் பதவிக்காலம் இரண்டரை ஆண்டுகளாகும். நகராட்சியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி, சட்டப்படி செயல்படாத போது, அது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

❖ நகர சபை ஆண்டுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். அக்கூட்டத்திற்கு நகர சபை தலைவர், அவர் இல்லையெனில் நகர சபை துணைத்தலைவர் தலைமை ஏற்பர். நகர சபை தன் பணிகளை செய்ய பல்வேறு துணை குழுக்களை அமைக்கிறது. இதில் நகர்மன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களாக இருப்பர். அவர்கள் பிரச்சனைகளை ஆராய்ந்து, தீர்வுக்கான பரிந்துரைகளை அளிப்பர். அவை சட்டபூர்வ குழுக்கள், சட்ட பூர்வமற்ற குழுக்கள் என இரு வகைப்படும். சிறப்பு தேவைகளுக்காக நகராட்சி அமைப்புகள் சில துணைக் குழுக்களை ஏற்படுத்தலாம்.

**நகர் மன்றம்:**

❖ நகர்மன்ற சட்டத்தின்படி தேர்வு செய்யப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களில் ஒருவர் நகர்மன்றத் தலைவராக ஒரு மாதத்திற்குள் தேர்வு செய்யப்படுகின்றார். நகர் மன்றம் தேர்தல் முடிந்தவுடன் உருவாக்கப்படுகின்றது. இந்த நகர்மன்ற தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கிறது. நகர்மன்றம் ஒன்று அல்லது இரண்டு துணை தலைவரையும் தேர்வு செய்கின்றது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உள்ள நகர்மன்றத் தலைவர்கள் பயணப்படி மற்றும் மாத ஊதியம் பெறுகின்றனர்.

❖ நகர் மன்ற கூட்டங்களை கூட்டுவதும், அதற்கு தலைமை வகிப்பதும் நகர் மன்றத்தலைவரின் பணியாகும். மேலும் தவறு செய்யும் நகர்மன்ற உறுப்பினர் மேல் ஒழுங்கு நடவடிக்கையையும் எடுக்கிறார். நகர் மன்றத்தின் முதன்மை பேச்சாளர் நகர்மன்றத் தலைவர் ஆவர். அரசுடன் தகவல் தொடர்பும் மற்றும் அரசு விழாக்களில் பங்கு கொள்வதும் இவருடைய பணியாகும்.

- ❖ ஒவ்வொரு நகர்மன்றத்திற்கும் ஒரு நிர்வாக அலுவலர் உள்ளார். அவரை மாநில நிர்வாகம் நியமனம் செய்கின்றது. நகர்மன்ற அலுவலர்கள் அந்த நிர்வாக அலுவலரின் கீழ் பணிபுரிபவர்களாக உள்ளனர்.

- ❖ நகர்மன்றத்தை ஆளுகின்ற அமைப்பு நகர்மன்ற குழு ஆகும். இது நகர நிர்வாகத்திற்கு பொறுப்புள்ளது. மேலும் சட்டம் இயற்றுவது, நகர்மன்ற கூட்டத்தின் நேரம், கூட்டத்தை நடத்துவது போன்ற முடிவுகளை நிர்வாக அலுவலர் மேற்கொள்கிறார்.

- ❖ நகர்மன்ற உறுப்பினர்கள் குடிமக்களின் குறைகளை கேட்டறிய வேண்டும், பொதுமக்களுடன் தொடர்பில் இருத்தல், நகராட்சி அலுவலர்கள் மீதான பொதுமக்களின் புகார்களை உரிய நிர்வாக தலைமையிடம் முறையிடல், நகர்மன்ற கூட்டத் தொடரில் மக்களின் குறைகளை எடுத்துரைப்பதும் இவர்களின் பணியாகும்.

- ❖ நகர்மன்றத்தின் பணிகள், பொறுப்புகள் இந்திய அரசமைப்பில் 12-வது அட்டவணையில் கூறப்பட்டுள்ளது. 74-வது அரசமைப்பு சட்டத்திருத்தம், ஒரு மாவட்டம் முழுமைக்கும் ஒரு வளர்ச்சி திட்ட வரைவை ஏற்படுத்தும் நோக்கில் மாவட்ட திட்டகுழுவை ஏற்படுத்தியது. இதன் மூலம் மாவட்டத்திற்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது. உள்ளாட்சி மற்றும் நகராட்சியில் உருவாக்கப்படும் திட்டத்தினை ஒன்று சேர்ப்பது குழுவின் பணி.

- ❖ 1992-ஆம் ஆண்டு சட்டத்தின் படி மாவட்ட திட்டக்குழுவில் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் நான்கு பங்கிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். இந்த உறுப்பினர்களை மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் உள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த எண்ணிக்கை அந்த மாவட்டத்தின் நகர்ப்புற மக்கள்தொகை மற்றும் கிராமப்புற மக்கள் தொகையின் விகிதாச்சார அடிப்படையில் அமைந்திருக்கும்.

- ❖ நகராட்சி அமைப்புகள் தனது பணிகளை மேற்கொள்வதற்கான செலவினங்களுக்கு வரி, கட்டணம் மூலம் வருவாய் ஆதாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி அமைப்புகள் தனது நிதி ஆதாரங்களை உயர்த்திகொள்ள பல வகை வரி விதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன (உதாரணம் - நிலவரி, கட்டடவரி, விளம்பரத்தின் மீதான வரி, நெடுச்சாலை சுங்க வரி, சாலைவரி முதலானவை) 74-வது சட்ட திருத்தத்தின்படி, மாநில அரசுகள் இந்த சட்ட திருத்தத்தை தங்கள் மாநில சட்டத்தில் இனைத்துக் கொண்ட ஒரு வருட காலத்திற்குள், மாநில நிதிக் குழுவை அமைத்திடல்வேண்டும்.

**அரசமைப்பின் 12-வது அட்டவணை நகராட்சியின் அதிகாரமும் - பொறுப்புகளும்**

- ❖ நகரத் திட்டங்கள், நகரத்தை வடிவமைத்தல்.
- ❖ கட்டடங்களை கட்டுதல், நிலத்தை பயன்படுத்துதலை ஒழுங்குமுறைபடுத்துதல்
- ❖ பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு திட்டமிடல்
- ❖ சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல்.
- ❖ வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் விநியோகம் செய்தல்.
- ❖ பொதுச்சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல்.
- ❖ தீயணைப்பு பணிகள்
- ❖ நகர்புற காடு மற்றும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல்
- ❖ சமூகத்தில் நலிவடைந்தோர், ஊனமுற்றோர் மனநிலை குன்றியவர்கள் நலன்களை பாதுகாத்தல்.
- ❖ குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், தரத்தை உயர்த்துதல்
- ❖ நகர்புற வறுமை ஒழிப்பு

❖ பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்புற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்
❖ கல்வி மற்றும் காலாச்சார அம்சங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்
❖ இடுகாடு மற்றும் சுடுகாடு மைதானங்களை பராமரித்தல்.
❖ கால்நடைக்கான குடிநீர் குட்டைகள் அமைத்தல் மிருகவதையை தடைசெய்தல்
❖ பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் பதிவுடன் கூடிய மிக முக்கியமான புள்ளி விவரங்களைத் சேகரித்தல்
❖ பேருந்து நிறுத்துமிடங்கள், கழிவறை, சாலை விளக்கு போன்ற பொது வசதிகளை செய்து கொடுத்தல்.
❖ வதைகூடங்கள் மற்றும் தோல் பதனிடும் தொழில்களை ஒழுங்குபடுத்துதல்

**மாநில நிதிக்குழு கீழ்கண்டவற்றில் பரிந்துரைகளை அளிக்கலாம்:**

1. மாநில அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்குமிடையே வரி, சுங்க சட்டங்கள் போன்றவற்றின் மூலமாக வரும் வருவாயை பகிர்ந்தளித்தல்.
2. அந்த வருவாயை மாநிலத்திலுள்ள நகராட்சியின் பல நிலைகளுக்கும் ஒதுக்கீடு செய்தல்.
3. நகராட்சிகளின் வரி வகைகள், சுங்க கட்டணங்கள் போன்றவற்றை நிர்ணயம் செய்தல்
4. மாநிலங்களுக்கு நிதி வழங்க உதவும் மானியங்கள்
5. நகராட்சியின் நிதி நிலைமையை மேம்படுத்த தேவைப்படும் நடவடிக்கைகள்

❖ ஆனால், யதார்த்தத்தில், மாநில சட்டம் எந்தெந்த பணிகளை நகராட்சிகள் செய்யலாம் என வரையறுத்திருக்கிறதோ, அந்த பணிகளை மட்டுமே நகராட்சிகள் செய்கின்றன. மாறி வரும் அரசியல் சூழ்நிலைகள் மற்றும் நாட்டின் தேவைகளின் வழியே காணும் போது நகராட்சியின் பணிகள் மீதான அந்த கட்டுப்பாடு சரியான ஒரு செயல்பாடாக கருத முடியவில்லை. சிறப்பு தேவை செயலாண்மைகளை ஏற்படுத்துவதன் மூலம் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உள்ளாட்சியின் பணிகளை தனதாக்கி கொள்ளும் மாநில அரசாங்கத்தின் போக்கு அதிகரித்து வருகிறது.

**மாநகராட்சி:**

❖ இந்தியவில் உள்ள நகர உள்ளாட்சி அமைப்பின் உச்ச அமைப்பு மாநகராட்சி ஆகும். பாராளுமன்ற சட்டத்தின் மூலமாகவும், மாநிச சட்டமன்ற மற்றும் யூனியன் பிரதேசத்தின் சட்டம் மூலம் பெரிய நகரங்களில் மாநகராட்சிகள் நிறுவப்படுகின்றன. மக்கள்தொகை அடிப்படை, மற்றும் வருமான அடிப்படையில் நகரங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் மாநகராட்சி அமைப்புகள் மும்பை, சென்னை மற்றும் கொல்கத்தாவில் உருவாக்கப்பட்டன.

❖ மாநகராட்சி அமைப்பு மக்களதொகையின் அளவு தேர்தெடுக்கப்பட்ட பிரதிநிதியைக் கொண்டு நகரத்தை நிர்வகிக்கும் தன்மை மற்றும் வயதுவந்தோர் வாக்கு பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர்/பழங்குடியினர் (SC/ST) மக்களுக்கு இட ஒதுக்கீடுடன் விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதிகள் தேர்தெடுக்கப்படுகின்றனர். மாநகராட்சி அமைப்பு ஓர் சட்டப்பூர்வமான நிர்வாக அமைப்பு ஆகும்.

❖ மாநகராட்சி மன்றம் மற்றும் நிலைக்குழுக்கள் இரண்டும் விவாதிக்கும் அமைப்பாகவும் செயலாக்க அமைப்பாகவும் உள்ளன.

❖ நிலைக்குழுவின் பணியானது மாநகராட்சிக்கு துணையாக செயல்படுவது. நகராட்சி ஆணையின் பரிந்துரையின் அடிப்படையில் தான் அனைத்து திட்டங்களும் நகராட்சி குழுவில் நிறைவேற்றப்படுகின்றன. ஆணையர் மாநகராட்சி மன்றத்தால் இயற்றப்படும் கொள்கைகளை செயல்படுத்துவது அவருடைய தலையாயப் பொறுப்பாகும்.

❖ இந்தியாவில் உள்ள மாநகராட்சி அமைப்புகள் மும்பையில் அமைந்த மாநகராட்சி அமைப்பை போன்றவை. இதன் பதவிகாலம் 5 ஆண்டுகள் ஆகும். 74-வது சட்டத்திருத்தம் வார்டு குழுக்களை ஏற்படுத்தியது. மாநகராட்சியின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வார்டுகளுக்கு அவை பொறுப்பாக இருக்கும். இதன் தலைவர் ஓராண்டுக்கு தேர்தெடுக்கப்படுகின்றார். அவர் மீண்டும் தலைவர் தேர்தலில் போட்டியிடலாம். மாநகராட்சியில் உள்ள வார்டு உறுப்பினர்கள் கண்காணிப்பில் தான் குடிநீர் விநியோகம், துப்பரவுபணி, சாக்கடை இணைப்பு, தெருக்களில் நிறைந்துள்ள நீரை வெளியேற்றுவது மற்றும் திடக்கழிவுகள் சேமிப்பதும், அகற்றுவதும் தெருவிளக்கு அமைத்தல், பூங்காக்கள் அமைத்தலும் போன்றவை நடைபெறுகின்றன.

❖ மாநகராட்சியில் நிலைக்குழு உருவாக்கப்பட்டு அதில் மேயர், துணை மேயர், வார்டு உறுப்பினர்கள் தமக்குள்ளிருந்து ஒருவரை துணை மேயராக தேர்ந்தெடுக்கின்றனர். மேயர் நிலைக்குழுவின் தலைவர் ஆவார். மாநகராட்சி குடிநீர் விநியோகம், கழிவு நீரகற்றல் போன்றவற்றிற்காகவும் குழுக்களை அமைக்கிறது. ஒவ்வொரு குழுவிலும் 3-க்கு குறையாமலும் 5க்கு மிகாமலும் இருப்பர்.

❖ இந்தக்குழுவின் பதவிக்காலம் ஓராண்டுகள் ஆகும். 74-வது சட்டத்தித்தின் மூலம் நிதி ஆதாரங்கள் மாநகராட்ச்சிக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசமைப்பின் 12-வது அட்டவணை மாநகராட்சி மேற்கொள்ள வேண்டிய 18 பணிகளை பட்டிலிட்டுள்ளது. 73-வது சட்டத்திருத்தை போல 74-வது சட்டதிருத்தத்திலும் நகர திட்டமிடலுக்கு குழு உருவாக்கப்பட்டுள்ளது.

❖ நகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பெருநகர எல்லைக்குள் உள்ள பஞ்சாயத்து தலைவர்களின் மொத்த எண்ணிக்கையில் இரண்டில் மூன்று பங்கிற்கு குறையாத எண்ணிக்கையில், தங்களுக்குள் இக்குழுவின் உறுப்பினர்களை இவர்களே தேர்ந்தெடுக்கின்றனர்.

❖ அனைத்து மாநகராட்சியிலும் மேயர் மற்றும் துணைமேயர் இடம் பெற்றிருப்பார்கள். சில மாநிலங்களில் மேயர் மக்களால் நேரிடையாக தேர்ந்தெடுக்கப்படுவர். மாநகராட்சி மேயர் மன்ற கூட்டத்திற்க்கு தலைமை தாங்குகிறார். அமைதியையும், ஒழுங்கமைப்பையும் நிலை நாட்டுகிறார். மன்ற கூட்டங்களில் தவறாக நடக்கும் உறுப்பினர்களை நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் மேயர் பெற்றுள்ளார். மன்ற கூட்டங்களில் சமமான வாக்குகள் பெற்றிருக்கும் நிலையில் மேயர் தீர்மான வாக்கை அளிக்கமுடியும். ஆணையர் மாநகராட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். மாநகராட்சி ஆணையர் இந்திய நிர்வாக பணியை (IAS) சார்ந்தவர் ஆவார். மாநகராட்சி ஆணையரை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசிடம் இருப்பது மிகுந்த சர்ச்சைக்குரிய ஒன்றாகவே உள்ளது. மாநகராட்சி ஆணையரின் பதவிக்காலம் மூன்றாண்டுகள். இந்த கால அளவை மாநில அரசாங்கம் விரும்பினால் நீடிக்கலாம். மாநகராட்சி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசின் முழு அதிகாரம் நிறைந்தவர் ஆணையர் ஆவார்.

**தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள்:**

❖ 73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழகத்தில் தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது,

❖ 73-வது சட்டத்திருத்தத்தின் மூலம் தமிழக அரசாங்கத்தின் அரசமைப்பு கடமைகளாக, அதிகாரத்துடன் கூடிய கிராம சபைகளை அனைத்து கிராமங்களிலும் உருவாக்குதல். பொதுவான மேற்பார்வை மற்றும் பஞ்சாயத்தின் வருடாந்திர திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் முதலாக அதிகாரங்கள் பஞ்சாயத்து, மூன்ற அடுக்குகளை கொண்ட உள்ளாட்சி அமைப்பை உருவாக்குதல் மாவட்ட பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், கிராம பஞ்சாயத்து போன்றவை உள்ளன.

❖ இந்த உள்ளாட்சி அமைப்பில் பெண்கள், (பட்டியலினத்தவர்/பழங்குடியினர்) மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு இட ஒதுக்கீடும், வரி விதிக்கும் அதிகாரமும், நிதி ஆதாரம் பெறவும்

வழிவகை செய்யப்பட்டன. மேலும் மாநில அரசிடமிருந்து நிதியைப் பெற்று பயன்படுத்துவதற்கு மாநில நிதி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.

| |
|---|
| தமிழ்நாட்டில் 12,564 கிராம பஞ்சாயத்தும், 388 ஊராட்சி ஒன்றியமும், 31 மாவட்ட பஞ்சாயத்தும் உள்ளது. |

- ❖ 74-வது சட்டத்திருத்தத்தின் மூலம் அதிகார பகிர்வு உருவாக்கப்பட்டு வரி விதிக்கும் அதிகாரம், மாநில அரசுடன் வருமான பகிர்வு, சீரான தேர்தல் நடத்துதல், பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர்/பழங்குடியினர் இட ஒதுக்கீடு உருவாகின. மேலும் நகர அமைப்பு உருவாகவும் வழி செய்தன.

- ❖ 73-வது சட்ட திருத்தம் படி, மாற்றங்கள் கொண்டு வருவதற்காக, தமிழ்நாட்டில் ஏற்கனவே அமலில் இருந்த தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1958 மாற்றப்பட்டு தமிழ்நாடு பஞ்சாயத்துகள் சட்டம், 1994 புதிதாக இயற்றப்பட்டது. பின்பு இது 1996-ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. இந்த திருத்தத்தின் மூலம் வளர்ச்சிக்கான திட்டங்ளை ஏற்படுத்த, மாவட்ட திட்டகுழு, மாநில தேர்தல் ஆணையம் மற்றும் மாநில நிதி ஆணையம் போன்றவை உருவாக்கப்பட்டன.

- ❖ இந்த 1994 சட்டத்தின் படி தமிழ்நாட்டில் முதலில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மொத்தமாக 1,17,000 பிரதிநிதிகள் பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தேர்தெடுக்கப்பட்டனர்.

**நகர உள்ளாட்சி அரசாங்கம்:**

- ❖ 74-வது சட்டத்திருத்தம் பல்வேறு மாநிலங்களில் நகர உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்க வழி செய்தது. தமிழகத்தில் நகர உள்ளாட்சி அமைப்புக்கான தேர்தல் 1996, 2001, மற்றும் 2011-ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது.

**தற்கால பிரச்சனைகள்:**

- ❖ உள்ளாட்சி அமைப்பில் உள்ள பல பிரச்சனைகளை நிபுணர்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டியுள்ளார். நிபுணர்கள் சுட்டிக்காட்டிய பிரச்சனைகளை பின்வரும் பகுதிகளில் காணலாம். முதலில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு பொறுப்புகளை அதிகப்படுத்தப்பட வேண்டும். இதற்கு முன் அவை மாநில அரசின் பொறுப்புகளாக இருந்தது.

- ❖ பல்வேறு நிலைகளில் உள்ள அரசாங்கங்களின் திறன் மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டு எல்லை போன்றவற்றை கருத்தில் கொண்டு முழு அரசு இயந்திரம் வகைப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, கிராம நீதிமன்றங்கள், காவல் துறையானது முழுமையாக மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நிலைமையில் இது சாத்தியப்படாது. மூன்றாவதாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பல விதமான பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன, அவற்றில் பல மாநில அரசின் துறைகளோடு தொடர்புடையவை.

- ❖ சுருக்கமாக, சொன்னால் 73-மற்றும் 74-வது சட்டத்திருத்தம் பல சீர்த்திருத்தங்களை உள்ளாட்சி அரசாங்கத்தில் கொண்டுவந்துள்ளது. ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், சீர்திருத்தங்களுக்கு முன்பு ஆங்கிலேயர்கள் உருவாக்கிய விதத்தில் இருந்தன. பல புதுமையான மாற்றங்களை இந்த சட்ட திருத்தங்களினால் கொண்டு வரப்பட்டன. இந்தியவில் இதுவரை 18 மாநிலங்களில் மட்டும் தான் தங்களது சட்டசபையில் உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்த இசைவு தந்துள்ளன. மேலும் சில மாநில அரசாங்கங்கள் சட்டத்திருத்தத்திற்கு பிறகும், உள்ளாட்சி அமைப்பு உருவாக்க சட்டம் இயற்றிய பின்னும் பல பிரிவுகளை சரிவர செயல்படுத்தவில்லை, மேற்கூறிய காரணங்களால் உள்ளாட்சி அமைப்பில் உள்ள சிக்கல்கள் உள்ளன. அவை அகற்றபடாவிட்டால் 73-வது மற்றும் 74-வது சட்டத்திருத்தத்தின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது.

| |
|---|
| 15 மாநகராட்சிகளும், 148 நகராட்சிகளும், 561 பேரூராட்சிகளும் தமிழகத்தின் நகர உள்ளாட்சி அமைப்புகளாக உள்ளன. |

## அலகு– 13- சமூக நீதி

**அறிமுகம்:**

சமத்துவம், நீதி குறித்து சமூகங்கள் இடையிலான விவாதங்கள் இருபதாம் நூற்றாண்டு பிற்பகுதிவரை கூட நடைபெறவில்லை. அதற்கு சில வரம்புகள் பின்பற்றப்பட்டு, ஒரு சமூகத்துக்குள் மட்டும் நிகழ்ந்தன. உதாரணமாக ஜான் ராவ்ஸ் அவர்களின் நீதிக்கோட்பாடு கூட முழுமையானதாக அமைந்திருக்கவில்லை. சமூகங்கள் இடையேயான செல்வப் பகிர்வு குறித்து அவர் ஆய்வு செய்யவில்லை. 1990 களில் போதுதான், தொழில்மய நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் அதாவது பணக்கார நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இடைவெளிகளால் உருவாகியுள்ள அற நெறிப் பாதிப்புகள் குறித்து தத்துவவியலாளர்கள் எண்ணிப்பார்க்கத் தொடங்கினர். வளரும் நாடுகளில் வறுமை அதிகரித்து வருவதற்கு வளர்ந்த நாடுகளே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறும் ஜெர்மன் தத்துவவியலாளர் தாமஸ் போக்கே, சுட்டிக்காட்டுகிறார்.

அதேபோல ஒரு நாட்டுக்குள் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வரும் அநீதியான பாகுபாட்டால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளான பிரிவினருக்கும் சமத்துவ ஆட்சியில் முன்னுரிமை தருவதன் அவசியமும் உணரப்பட்டுள்ளது. இதுவே சமூக நீதியின் அடிப்படைக் கோட்பாடாகும். உறுதிப்படுத்தும் நடவடிக்கை, நேர்மறை பாகுபாடு என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாறு சமத்துவம், நீதி குறித்து மாறிவரும் கருத்தாக்கங்களையும் சமூக நீதியின் வரலாறு குறித்தும் இப்பாடத்தில் காணலாம்.

**கற்றலின் நோக்கங்கள்:**

- சமூக நீதி என்ற கருத்தாக்கத்தின் பல்வேறு பரிணாமங்கள்
- சமூக நீதியின் முக்கியத்துவம்
- பகிர்ந்தளிப்பு நீதியின் பொருள் மற்றும் முக்கியத்துவம் - சமூக படிநிலையில் இதன் தாக்கமும்.
- ஜான் ரால்சின் நியாயமான மற்றும் நேர்மையான சமுதாயம்
- தமிழகத்தில் சமூக நீதி இயக்கங்கள்
- உறுதியான நடவடிக்கை நேர்மறை பாகுபாடு பற்றிய கருத்தாக்கம் / அரசியல் கொள்கை
- சாதிப்பாகுபாடுகளும் அதன் பின் விளைவுகளும்
- சமத்துவ சமுதாயம்
- இட ஒதுக்கீட்டுக் கொள்கையும் அதன் தேவையும்
- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அரசாங்கத்தின் பங்கு
- சலுகைகளும் அதன் தாக்கமும்

**சமூகநீதி என்றால் என்ன?**

சமூகம் உருவாக்கும் எதிர்மறை மதிப்பீடுகள் சமத்துவமின்மையை, ஏற்றத்தாழ்வை உருவாக்குகிறது. சட்டென்று பார்க்கும் போது சிலருக்கு ஆண் - பெண் ஏற்றத்தாழ்வு இயற்கையானதாகவே தெரியும். ஆம், பல நூற்றாண்டுகளாக வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால் பெண்களின் ”பலவீனமான“ நிலை பலருக்கு இயற்கையானதாகவும் இயல்பானதாகவும் தோன்றலாம். ஆப்பிரிக்காவின் கருப்பு இனமக்கள் மீதான காழ்ப்புணர்ச்சியும் இதே வகையைச் சேர்ந்ததே. கருப்பின் மக்கள் அறிவுலகில் பெரும் பங்களிப்பைச் செய்ய முடியாது என்றே திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டது. பல காலமாகத் தொடர்ந்த இந்த அவலம் நமக்கு இயல்பானதாக மாற்றப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலும் இதே நிலைதான். சாதியின் பெயரால் வாய்ப்பு மறுக்கப்பட்ட பலரது நிலை ”இயற்கையானது” என்பது போல நமக்குச் சொல்லப்படுகிறது. ஆனால், இவை அனைத்துமே செயற்கையானது நம் கண்களுக்குப் புலப்படாத அதேசமயம் பெரும் உருவம் கொண்ட “அதிகாரம்“ அங்கு ஊடுருவியிருக்கிறது என்பதை இன்றைய அறிஞர்கள் திட்டவட்டமாக அறிவிக்கின்றனர்.

சமூக அதிகாரத்தைக் கைக்கொள்வதில் ஏற்படும் போட்டிகளே ஒடுக்குமுறைகள் தோன்றிடக் காரணங்களாகும். தங்களுக்கென உருவாக்கிக் கொண்ட இயல்பான அடையாளக் கூறுகளைத் தற்காத்துக் கொள்வதற்கு அதிகார அமைப்புகளைக் கைப்பற்றிக்கொள்ள எண்ணுகின்றனர். “பன்மைத்துவ“மான சமூக அமைப்பில் தனித்த ஒரு குழுவினர் மட்டும் சமூகமேலாதிக்கம் பெற்றவர்களாக உருவெடுப்பது அநீதியான போக்காகும்.

சமூகமேலாதிக்க உணர்வினைப் பெற்ற இன, மத, மொழி, சாதி மற்றும் பண்பாட்டுக் குழுவினர் மற்ற குழுவினரின் சமூக உரிமைகளைப் பறித்தெடுக்க முயலும்போது அல்லது தடுக்கும்போது சமூகப் பகை முரண்கள் உருவாகின்றன. தங்கள் மீதான மேலாதிக்கத்தை மறுத்துத் தங்களுக்கு உரிய உரிமைகளைச் சமமாகப் பெற்றிட நடத்துகிற போராட்ட உணர்வினையே சமூக நீதி என்கிறோம்.

சமூகப்படி நிலைகளின் பின்புலம்:
இந்தியாவில், புராதன காலத்து மரபுசார்ந்த சிந்தனையால் உருவான வருணாசிரம தர்மா சமூகப்பிடிநிலை, மேல் - கீழ் என்னும் பாகுபாட்டைக் கொண்டிருக்கின்றது. வருண படிநிலை அமைப்பு “சதுர் வருண அமைப்பு“ (நான்கு வருண அமைப்பு – அந்தணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) என்று அழைக்கப்படுகிறது. பிறப்பின் அடிப்படையல் பேணப்படும் இப் பாகுபாடு, தலைமுறைகளாகத் தொடர்வதால் சமூகத்தில் ஆழமான ஏற்றத்தாழ்வுகள் உருவாயின.

**இன, மத, மொழி சிறுபான்மையினருக்கான ஐ.நா. பிரகடனம் - டிசம்பர் 18, 1992**
**பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள்**

- ❖ சிறுபான்மை மக்கள் தனிப்பட்ட முறையிலும் பொதுவாழ்விலும் எந்த வகையான பாகுபாடும் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாக தங்கள் பண்பாட்டைப் பின்பற்றவும்,மதத்தைக்கடைப்பிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும், மொழியைப் பயன்படுத்தவும் பெற்றவர்கள் ஆவர்.
- ❖ சிறுபான்மை மக்கள் தங்களுக்கான அமைப்புகளை உருவாக்கவும் பராமரிக்கவும் உரிமை உண்டு.
- ❖ சிறுபான்மையினர் தங்கள் வரலாறு, மரபுகள், மொழி மற்றும் பண்பாடு பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒட்டுமொத்த சமுதாயம் பற்றி அறிந்து கொள்வதற்கும் சிறுபான்மை மக்களுக்கு உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.
- ❖ ஏற்கனவே உள்ள மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்திற்கு இந்தப் பிரகடனம் எந்த வகையிலும் ஊறு விளைவிப்பதாக அமையக்கூடாது.

**இந்திய அரசமைப்புச் சட்டம் 1949: பிரிவு 15(4):**
சமூக மற்றும் கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கான சிறப்புத் திட்டங்கள் உருவாக்குவதற்கு அரசமைப்புச் சட்ட விதி (29(2) தடையாக இருக்காது.

**இந்திய அரசமைப்புச் சட்டம் 1949: பிரிவு 16(4):**

அரசுப்பணியில் போதிய அளவு பிரதிநிதித்துவம்பெறாத அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பணிநியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்க மேற்கொள்ளப்படும் செயல்களுக்கு இவ்விதி தடையாக இருக்காது.

இந்தியா பல்வேறு தட்ப,வெட்ப புவிசார் நிலவியல் அமைப்பு கொண்ட பன்மைத்துவ நாடாகும். பல்வேறு மொழிகள் பேசும் தேசிய இனங்கள் வெவ்வேறு பண்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். எனினும், இந்திய சமூக வளர்ச்சிப் போக்கில் ஏற்றத்தாழ்வுகள் வர்ண அமைப்பின் அடிப்படையில் அமைந்த படிநிலைகளால் உருவாகியுள்ளன. இத்தகைய ஏற்றத்தாழ்வுகளால் நலிவுற்ற பிரிவினரின் வாழ்க்கை மேம்பட, அவர்களையும் அரவணைத்து வளர்ச்சிபெற்றிட, நமது அரசமைப்புச் சட்டம் பல்வேறு விதிமான வழிகாட்டு நெறிமுறைகளை முன் மொழிகிறது.

இயற்கை வளங்களோ தொழில் வளர்ச்சியோ இல்லாத பகுதிகளுக்கு ஏற்ப சிறப்புத் திட்டங்களை மாநில அரசு உருவாக்கிக் கொள்ள அரசமைப்புச் சட்டம் அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் சமூகத்தில் கல்வி, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நலிந்த பிரிவினருக்குச் சிறப்புச் சட்டங்கள் மற்றும் சலுகைகளையும் அரசமைப்புச் சட்ட வழிகாட்டுதலின்படியே அரசு வழங்கியுள்ளது. அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் தன்னிறைவு பெற்ற சமூக வளர்ச்சிக்கு என்று சமூகநீதியை அடித்தளமாகக் கொண்ட சிறப்பு ஏற்பாடுகள் இன்றியமையாத தேவையாக உள்ளன.

நமது நாட்டின் சமூக மக்களாட்சி தழைத்திடவும், பன்மைத்துவம் வலிமைபெறவும் இன, மத பிரிவினர்கள் குழுக்கள் தங்கள் அடையாளங்களுடனும், அதிகாரப் பகிர்வுடனும், சகிப்புத்தன்மை உணர்வுடனும் வாழ்வதற்கான சமூக ஏற்பாடே சம வாய்ப்பு என்பதாகும்.

தொழில் புரட்சியைத் தொடர்ந்த மேலை ஐரோப்பிய சமூக அமைப்பில் ஏற்பட்ட பிரிவினை உணர்விற்கு பொருளாதாரம் அடிப்படை காரணமாகும். இந்திய சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள பாகுபாடுகள் வைதீக புராணங்கள் அடிப்படையில் நால்வருண அமைப்பாக பாகுபடுத்தப்பட்டிருக்கிறது.

சமூகத்தின் உற்பத்திக் கருவிகளான நிலம் மற்றும் இயற்கை வளங்களை உடைமையாக்கிக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறவர் முதலாளியாகவும் அத்தகைய உற்பத்திக் கருவிகளைப் பெற முடியாமல் தடுக்கப்பட்டு ஏழ்மை நிலையை அடைந்தவர்கள் தொழிலாளிகளும் ஆவார். நிலம் மற்றும் வளங்களைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறபோது அவரின் வர்க்கமும் மாற்றம் அடைகிறது. எனவே, பொருளாதார அடிப்படையில் முதலாளி தொழிலாளி என சமூகப் பிரிவினை ஏற்பட்ட மேலை ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி முதலாளி ஆவதற்குச் சமூகத்தில் நிரந்தரத்தடைகள் ஏதும் இல்லை. ஆனால், புராதண நூல்களின் அடிப்படையில் உருவான நால்வருணப் பாகுபாட்டு முறையில் யாரும் தத்தம் வருணங்களை மாற்றிக் கொள்ள முடியாது. பிறப்பு முதல் இறப்பு வரை ஒரே வருணத்தில் மட்டுமே இருக்க வேண்டிய சமூகத்தடை உள்ளது.

வருண அமைப்பு தனிமனித மாண்புகளையும் உரிமைகளையும் மறுக்கிறது. ஆனால், இந்திய அரசமைப்புச் சட்டம் சரியான சமூகக் கண்காணிப்பு முறைகளையும், சட்டப் பூர்வமான நீதி வழங்கும் முறையினையும் கடைபிடித்து வருகின்றது. அவ்வாறு வழங்கப்பெறும் நீதி வருண, வர்க்க வேறுபாடுகளைக் களைவதுடன் சமத்துவக் கண்ணோட்டத்துடனும் அமைந்திருக்கிறது எனலாம்.

மக்களாட்சி என்பது எண்ணிக்கை சார்ந்து பெரும்பான்மையினரின் விருப்பம் அல்லது எண்ணப் பிரதிபலிப்பு என்று புரிந்து கொள்ளப்படுகிறது. எல்லோருக்குமான பிரதிநிதித்துவம் என்பதே உண்மையான மக்களாட்சி என்பதே வளர்ந்து வரும் புதிய கண்ணோட்டமாகும். எல்லோரையும் உள்ளடக்கிய அமைப்பு முறையில் மக்களாட்சி செழிப்படையும். அவ்வாறு உருவாகும் மக்களாட்சி அமைப்பு முறைக்குள் ”பன்மைத்துவ உணர்வு” ஏற்படும். பன்மைத்துவமான சிந்தனைகளும், பிரதிநிதித்துவமும்தான் நமது இந்திய ஜனநாயத்தின் வேர்களாகும்.

இந்திய அரசமைப்புச் சட்டம் மக்களாட்சி நெறிமுறைகளின்படி பாதிக்கபட்ட அனைவருக்கும் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து அவர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கையினைப் பாதுகாக்கிறது. இத்தகைய சமூக வளர்ச்சிக்கான மாற்று செயல்முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் சமூக விடுதலையும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்படுகின்றன. எனவே, உயிரோட்டமான சமூகநீதி இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டு உணர்வையும் பேணிக்காத்து நீதிப்பகிர்வினையும் மக்களாட்சி மாண்பினையும் உறுதி செய்கிறது.

**சமத்துவம் நிலவ சமூக நீதி அவசியம்:**
சமத்துவம் வேண்டும் என்று அனைவருமே ஏற்றுக்கொள்ளும் அதே நேரம். ஏற்றத்தாழ்வுகளும், பாகுபாடுகளும் நம்மை நிலைகுலைய வைக்கின்றன. வசதிகளில், வாய்ப்புகளில், பணிச் சூழலில் என்று பல தளங்களில் நிலவும் சமத்துவமின்மை பற்றி நாம் என்ன சொல்லப்போகிறோம்? இது போன்ற ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும் நமது வாழ்வில் தவிர்க்க முடியாத மற்றும் நிரந்தரமான அம்சங்கள் என்று கருதமுடியுமா? இவ்வாறு வாய்ப்புகள் இன்றித் தவிக்கும் மக்கள் நமது நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்ய நாம் கூடுதலாக என்ன

செய்ய வேண்டும்? இதுபோன்ற சமத்துவமின்மைக்கு நமது சமூகத்தில் நிலவும் பண்பாட்டு மதிப்பீடுகள் எந்த அளவிற்கு காரணமாக இருக்கின்றன? இது மாதிரியான கேள்விகள் பல ஆண்டுகளாகவே நம் நாட்டினரை மட்டுமல்ல உலகெங்கிலும் பெரும் அதிர்வுகளை உருவாக்கி வந்திருக்கின்றன. அதனால்தான், சமத்துவம் என்பது சமூக, அரசியல் கோட்பாட்டில் முதன்மையான இடத்தைப் பிடித்திருக்கிறது என்றால் அது மிகையில்லை. முதலில், சமத்துவம் என்ற கோட்பாடு எதை சுட்டிக்காட்டுகிறது? நாம் அனைவரும் சமம் என்றால் அதன் உண்மையான பொருள் என்ன? சமத்துவத்தை உறுதிசெய்வது எப்படி? அவ்வாறு உறுதி செய்வதன் வழியாக நாம் சாதிக்க நினைப்பது என்ன? வருமானத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை மட்டுமே நாம் சரிசெய்ய நினைக்கிறோமா? எந்த மாதிரியான சமத்துவத்தை நாம் நிலைநாட்ட முயல்கிறோம்? நாம் எத்தனிக்கும் சமத்துவம் யாருக்கானது?

**சிறப்பு முன்னுரிமைக்கான தேவைகள்:**
ஏழைக்குடும்பத்தில் குடிசையில் பிறந்த காரணத்தினால் ஒரு குழந்தைக்கு தரமான கல்வி, மருத்துவம் மறுக்கப்பட்டால் அதற்கு எதிராக நாம் குரல் கொடுக்கிறோம்.

காரணம், அது அநீதி என்று கருதுகிறோம். ஆக, நாம் எதை ஏற்கிறோம், எதை மறுக்கிறோம் என்பதை புரிந்துகொள்வோம். ஒருவர் பெரும் மரியாதையோடு நடத்தப்படுவதற்கு அவரது மதம், சாதி, மொழி, இனம் மட்டுமே காரணம் என்றால் அந்த மரியாதையை ஏற்பதில்லை. அதேசமயம், இசை போன்ற ஒரு துறையில் ஆர்வம் கொண்ட ஒருவர் அவரது துறையில் சாதிக்க முயலும் போது, அவரது மதம், சாதி, பாலினம், இனம் போன்ற சமூக அடையாளங்களினால் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்படும் போது அது அநீதிக்கு வித்திடுகிறது. மனிதர்களிடம் இருக்கும் வேறுபாடுகள் என்ன? பாகுபாடுகள் என்ன? என்பதைப் புரிந்துகொள்வது மிக அவசியம். சமூக அடையாளங்களை முன்னிறுத்தி ஒருவருக்கு வாய்ப்பு மறுக்கப்படுவது அநீதி; அதுவே சமத்துவமின்மையை உருவாக வழிகோலுகிறது.

இனம், மொழி, சாதி, பாலினம், மதம் போன்ற வேறுபாடுகள் இருந்தாலும், மனிதர்கள் அனைவரும் தங்களது தனித்துவமான திறமையினை முன்னெடுத்துச் சென்று வாழ்வில் வெற்றி பெற வாய்ப்புகள் சம அளவில் வழங்கப்பட வேண்டும்.

சமூக, அரசியல் கோட்பாடுகளில், மிக முக்கியமான அம்சமாகக் கருதப்படுவது இயற்கையாகவே மனிதர்களிடம் நிலவும் வேறுபாடுகளுக்கும் சமூக, கலாச்சார ரீதியாக இருக்கும் பாகுபாடுகளுக்குமான வேறுபாடு போல, தனிநபர் விருப்பங்கள், திறமைகள் இயல்பானவை. தனித்துவமானவை. ஒருவருக்கான ஆங்கீகாரமும், மதிப்பும் தனி நபர்களின் சாதனைகள், தனி நபரின் திறமைக்குமாக இருக்க வேண்டும். ஆனால், ஒரு சமூகம் உருவாக்கி வைத்திருக்கும் கலாச்சார, அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் செயற்கையானவை. இவற்றை பாகுபாடுகள் எனலாம்.

மக்களாட்சி நிலவும் நாடுகளில் அரசியல் சமத்துவத்தை எளிதாகப் புரிந்துகொள்ளமுடியும். மக்களாட்சி அரசுகள் தனது நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான குடியுரிமையை வழங்கி வருகின்றன. குடியுரிமை என்பது வாக்குரிமை, கருத்துரிமை, இணைந்து செயல்படும் உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, வழிபாட்டுரிமை என பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. இவை அனைத்துமே மக்களாட்சி சிறப்பாகச் செயல்பட அவசியமாகும். அப்போதுதான், குடிமக்கள் அனைவரின் பங்களிப்புடன் அரசு செயல்பட முடியும். மேலும், அரசமைப்புச் சட்டம் அனைத்து குடிமக்களுக்கும் சட்ட உரிமைகளையும் வழங்கியுள்ளது. மக்களாட்சி நிலவும் பல நாடுகளில் குடியுரிமை உறுதி செய்யப்பட்டு இருந்தாலும், சமத்துவமின்மையும், ஏற்றத்தாழ்வுகளும் நிலவத்தான் செய்கின்றன.

∴ப்ரன்ட் லைன் என்ற மாத இதழின் இணையத்தளத்திற்கு சென்று அங்கே நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்தியா சென் எழுதிய பாலின பாகுபாட்டின் பல்வேறு முகங்கள் என்ற தலைப்பிலான சிந்தனையைத் தூண்டும் கட்டுரையை வாசிக்கவும். அதில் அவர் ஏழுவிதமான பாகுபாடுகளை பட்டியலிடுகிறார்.

- ❖ இறப்பில் பாகுபாடு
- ❖ பிறப்பில் பாகுபாடு

- அடிப்படை வசதிகளில் பாகுபாடு
- சிறப்பு வாய்ப்புகளில் பாகுபாடு
- தொழிலில் பாகுபாடு
- உடைமை கொள்வதில் பாகுபாடு
- இல்லத்தில் பாகுபாடு

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ரேட் சினிப் கல்வி நிறுவனத்தில் ஆற்றிய தொடக்க உரையின் அடிப்படையில் எழுதப்பட்டது இந்தக் கட்டுரை. அதில் பாலின பாகுபாட்டின் பல்வேறு முகங்கள் பற்றி விரிவாக கூறியுள்ளார். இந்த கட்டுரையை படித்த பின்பு உனது கருத்துக்களை வகுப்பறையில் விவாதிக்கவும்.

அதன் படி பின்தங்கிய வகுப்பினருள் உள்ள பொருளாதார மேம்பாடு அடைந்தவர்களுக்கு இட ஒதுக்கீட்டில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

**நியாயமான விநியோகம் (Justice Distribution):**

ஒரு சமுதாயத்தில் உள்ள பல்வேறு மக்கள் மாறுபட்ட விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொண்ட போது, யார், எப்படி நியாயத்தை உறுதிப்படுத்த முடியும் என்ற கேள்வி எழுகின்றன. சமூகத்தில் அனைவருக்கும் செல்வம், வாய்ப்பு போன்றவை சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும். நியாயமாக வளங்களை அனைவருக்கும் வழங்குவதற்கு சட்டம் வழிசெய்கின்றன. சட்டத்தை செயல்படுத்தும் அமைப்புகள் வளங்களை விநியோகிப்பதை கண்காணிக்க வேண்டும். இதில் எந்தவிதமான அநீதிகளும் இடம் பெறக்கூடாது.

நம்மை போன்ற நாடுகளில் சமூக கலாச்சார ஏற்றத்தாழ்வுகள் நன்கு ஊன்றியுள்ளது. சமூகத்தின் அனைத்து பிரிவிற்கும் சுதந்திரம், வாய்ப்பு, செல்வம் மற்றும் சுய கௌரவத்தின் அடிப்படைகள் போன்றவை, சம அளவாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதில் எந்தவிதமான அநீதிகளும் இடம்பெறக்கூடாது.

சட்டமானது மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்கு முன்னரே, மக்கள் சில அடிப்படை சமத்துவங்களை பெற்று வாழ்வில் தனது நோக்கங்களை தொடர தேவையான சூழ்நிலைகள் அமைய வேண்டும். அரசும், சட்டமியற்றும் அமைப்புகளும் தீண்டாமை மற்றும் பிறசாதி பாகுபாடு நடவடிக்கை அகற்றி சமூகத்தில் நீதியை முறைப்படுத்துகின்றது.

சமூகத்தில் சமத்துவத்தை உருவாக்குவதும் அதை அனைவருக்கும் உறுதிப்படுத்துவதும் அரசமைப்பின் தலையாய கடமையாகும்.

வரலாற்றுரீதியாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகவும், தார்மீகரீதியாகவும் உரிமை கிடைக்க அரசாங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும். சமத்துவத்தை உருவாக்குவதில் பரந்த மனப்பான்மை என்றும் தொண்டு எனவும் அரசாங்கம் நினைக்கக் கூடாது. சமுதாயத்தில் சமூக நீதியை நிலைநாட்ட மக்களை மாறுபட்ட விதத்தில் நடத்துவது அரசின் கடமையாகும். மேலும் நலிவடைந்த பிரிவினரின் அடிப்படை உரிமையாகவும், இதனைக்கொண்டு சட்டரீதியாகவும் அரசமைப்பில் தீர்வு காண முடியும். நலிவடைந்த பிரிவினருக்கு சம வாய்ப்பும் வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் ஏற்படுத்துவதில் அரசு முக்கிய பங்காற்றுகிறது. அரசு வேலைவாய்ப்பிலும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதிலும் நவீன கல்வி முக்கிய பங்காற்றுகிறது. இதனை நிலைநிறுத்துவதற்கு சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்தவும், சமவாய்ப்பினை ஏற்படுத்துவதும் அரசமைப்பின் முக்கிய நோக்கமாகவும் அங்கமாகவும் இருக்கின்றது.

இதனைப் பற்றி பல கருத்துகள் சமூகத்தில் நிலவுகிறத. நலிவடைந்த பிரிவினருக்கு வளங்களையும், சமவாய்ப்புகளையும் எவ்வாறு அளிப்பது என கேள்வி எழுகின்றது. மேல்தட்டு மக்கள் அரசின் மாறுபட்ட செயல்பாடு பாகுபாட்டை ஏற்படுத்தும் என கருதினர். கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு நலிவடைந்தோருக்கு கிடைக்காது என்ற அச்சத்தில் இட ஒதுக்கீட முறையை அரசு உருவாக்குவதன் மூலம் சமூகத்தில் சமவாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்று நம்பினர்.

இட ஒதுக்கீட்டு முறையினால் நலிவடைந்த பிரிவினருக்கு வாய்ப்புகள் ஏற்படுத்தும் போது தகுதி பாதிக்கப்படுவதாக சிலர் கருதினர். ஆகையால் தொழிற்துறையில், பணியாளர்களின் திறமையை பாதிக்கும் என கூறப்படுகிறது.

அரசியல் அறிவியல் மாணவர்களான நாம் எவ்வித தயக்கமுமின்றி நீதியில் உள்ள பிரச்சினைகளை ஆராய வேண்டும். முதலில் நீங்கள் நலிவடைந்து, முன்னேற்றமடையாத மக்களுக்கு உதவ சில தலையீடு தேவை என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா?

நாம் சுதந்திரம் அடைந்து குடியரசு ஆன பின்னும் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வளங்கள் அனைத்தும் மேல்தட்டு மக்கள் வசமே இருந்தால் அது என்ன விளைவை ஏற்படுத்தும்? நாம் அனைவரையும் உள்ளடக்கிய நாட்டையா அல்லது குறிப்பிட்ட சிலருக்கான நாட்டையா? எதை அடையவேண்டும் எவ்வகையான சமூக நீதியை நாம் இறுதியில் பின்பற்ற வேண்டும்?

**பகிர்ந்தளிக்கும் நீதி, மற்றும் தண்டிக்கும் நீதி:**
நீதி என்ற கோட்பாட்டை படிக்கும் போது வளங்களை எவ்வாறு சமூகத்தில் உள்ள அனைவருக்கும் வழங்கவேண்டும் என்ற பொருள் விளங்கும். நீதி பற்றிய கருத்தை முழுமையாக புரிந்து கொள்வதற்கு இதில் உள்ள முக்கியமான கருத்துக்கள் மற்றும் பிரச்சனைகளை அறிய வேண்டும். அரசியல் தொடர்பானவற்றில் மரபு ரீதியான புரிதலில் பல நீதி பற்றிய பற்றிய முதன்மையான கோட்பாடுகள் நீண்ட விவாதத்திற்குட்பட்டுள்ளது. அனைவருக்கும் சமமான வளங்கள் பெறுவதற்கு பொது உரிமையாளர் கோட்பாடு, உரிமை கோட்பாடு போன்றவைகள் நீதி என்ற விவாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வளங்களில் சமத்துவம்:**
இது வளங்களின் விநியோகம் நியாயமான முறையில் இருக்கவேண்டும் என கூறுகிறது. ஒவ்வொரு மனிதனும் சமமான வளங்களை கொண்டிருந்தால் அது நீதியாகும். வழங்கப்பட்ட ஒரு பணிக்கு அனைவரும் சமமான ஊதியத்தையோ அல்லது வெகுமதியையோ பெறுவதே நீதியை பெறும் வழியாகும். சமத்துவமின்மைக்கு தனிமனித செயல்பாடுகளே காரணமாகின்றன. ஒருவன் உழைப்பை தேர்ந்தெடுப்பதோ? அல்லது ஓய்வை தேர்ந்தெடுப்பதோ அவனது தேர்வாகும்.

இது சுய உடமைத்துவத்தையும் வளங்களின் உடமைத்துவத்தையும் நிராகரிக்கின்றது. அதே வேளையில் கடமைகளையும் பொறுப்புகளையும் வலியுறுத்துகிறது.

**பொது உரிமையாளர் கோட்பாடு**:
ஆரம்ப நிலையில் ஒவ்வொரு மனிதனும் ஒரே அளவிலான நிலங்கள் மற்றும் வளங்களை நியாயமான விநியோகத்தின் மூலம் பெற்றிருக்க வேண்டும். இது தனி மனித முன்னுரிமையிலும் மற்றும் திறமையிலும் வேறுபாடின்றியும் இருக்க வேண்டும் என்பதை தெளிவாகக் கூறுகின்றது. சமூகத்தில் உள்ள அனைத்து தனிமனிதனும் சமமான திறமையை பெற்றுள்ளனர். ஆகையால், வளங்கள் அனைத்துக்கும் அனைவரும் உரிமையாளர் என்ற நிலைமையை உறுதிசெய்வதே நீதியை உருவாக்குவதற்கான ஒரே வழி.

**உரிமை அளித்தல் கோட்பாடு:**
நிலம் மற்றும் பிற வளங்கள் வழங்கப்படுவதை வரலாற்று ரீதியாக நியாயப்படுத்த வேண்டும், என நியாயமான விநியோகம் விளக்குகிறது. தனிமனிதன் நிலம், மற்றும் பிற வளங்களுக்கு ஒருபோதும் உரிமையாளராக இல்லாத போது தானாகவே வளங்களும், நிலங்களும் அவர்களுக்கு மாறவேண்டும். அவ்வாறு வளங்கள் அவர்களுக்கு மாறுவது முற்றிலும் தானாகவே அமையவேண்டும். மனிதனின் திறமையும், வளங்கள் இந்த இரண்டுமே முக்கிய கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகின்றன. வளங்கள் என்றால் உதாரணமாக நிலமும், மனிதனின் அறிவு எனவும், கோட்பாடுகளில் மனிதனின் திறமை முக்கிய பங்காற்றுகிறது.

சமூகத்தில் நீதி நிலைக்க வேண்டுமானால் நீதி தண்டிப்பை விட நியாயமான நீதி விநியோகம் இருந்தால் மட்டுமே தீர்வு என்ற பெரும் கருத்தொற்றுமை உருவானது. நாம் எவ்வாறு தண்டிக்கும் நீதியை விளக்கப்போகின்றோம்?

**தண்டிக்கும் நீதி:**

- ❖ தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கம் ஆனது பல சூழ்நிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வகை நீதியின் கட்டமைப்பை சில விதிகளை பின்பற்றுவதன் மூலம் ஒருவர் அறிந்து கொள்ளலாம்.
- ❖ தவறான செயல்களை செய்தவர்கள், கடும் குற்றம் இழைத்தவர்கள், அவர்களின் குற்றத்திற்கான சரியான தண்டனை பெற வேண்டும்.
- ❖ சட்டப்படி தண்டிக்கும் அதிகாரம் பெற்றுள்ள ஒருவரால் குற்றவாளிக்கு அவரின் குற்றத்திற்கு எற்ற தண்டனையை வழங்குவதே தார்மீக அடிப்படையில் சரியானதாகும். ஒவ்வொரு குற்றவாளிக்கும் தண்டனை வழங்கும் செயலானது, தண்டிக்கப்படுபவர்களுள் ஒப்பு நோக்கப்படுகிறதோ அல்லது ஒப்பு நோக்கப்படவில்லையோ, ஆனால் தண்டிப்பது என்பது அவசியம். அதுவே சமூக நன்மைக்கு அவசியமாகிறது.
- ❖ இது வேண்டுமென்றே அப்பாவிகளை தண்டிப்பதை ஊக்குவிப்பதில்லை. மேலும் குற்றவாளிகளுக்கு அவர்கள் இழைத்த குற்றத்தை விட அதிகமான தண்டனை வழங்குவதையும் இது கண்டிக்கிறது.

- ❖ தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கமானது நீதி மற்றும் தண்டனை கோட்பாட்டை உண்டாக்குவதில் முக்கிய பங்காற்றினாலும், இதன் முக்கிய அம்சங்களான விகிதாச்சார தண்டனை, துன்பத்தின் இயல்பு நிலை மற்றும் தண்டனையை நியாயப்படுத்துதல் போன்றவை சர்ச்சைக்குரியதாகவே உள்ளன.

- ❖ இந்தியா போன்ற நாடுகளில், சிலர் தண்டிக்கும் நீதியின்படி வன்முறையின் மூலமாக தவறிழைப்பவர்களை தண்டித்து அதன் மூலம் நீதியை நிலை நாட்டலாம் என்கின்றனர். இன்றைய நவீன காலத்தில் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய அரசமைப்பு தண்டிக்கும் நீதியை முற்றிலுமாக நிராகரித்துள்ளது. நம் அரசமைப்பு சிற்பிகள் வன்மறை வழிகள் அமைதியையோ அல்லது பிரச்சனைகளுக்கான தீர்வையோ கொண்டு வராது, நிலையான நீதியை வழங்காது என்று உறுதியாக நம்பினர்.

இப்பாடத்தின் நோக்கமே, நீதி பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதுதான். அவைகளை கற்றுணரும்போது, நீதி பற்றிய எந்த கண்ணோட்டம் நம் இந்திய சூழ்நிலையில்

நீதியை நிலைநாட்ட பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் அறியலாம். இந்த கண்ணோட்டங்களுள் நீதி பற்றிய ஜான் ரால்சின் கருத்துக்கள் முக்கியமானவையாக உள்ளன. நீதி பற்றிய அவர் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை படிக்கலாம்.

**ஜான் ரால்சின் நீதிகோட்பாடு:**

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவராக ஜான் ரால்சன் கருதப்படுகிறார். நேர்மையான நீதி என்ற கருத்தியலின் அடிப்படையில் ஓர் நீதி கோட்பாட்டை அவர் உருவாக்கியுள்ளார்.

அவரது கட்டமைப்பு அனைத்து தனிமனித பண்புகளையும் ஒழுக்க ரீதியில் தன்னிச்சையானவை என்கிறது. இவரது நீதி சமத்துவத்தை கோருகிறது. இவரைப் பொறுத்தவரை சுதந்திரம், வாய்ப்பு, வருவாய், வளம் மற்றும் சுயமரியாதை என அனைத்தும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இதையே வேறு வார்த்தைகளில் கூறினால் சமத்துவமின்மையே அநீதி ஆகும். தனிமனிதன் எந்த ஒரு செயலோ அல்லது பண்போ மற்றவருக்கு பயனளிக்காத வகையில் இருக்குமாயின் அது அந்த சமூகத்தின் அநீதியான பண்பை காட்டுவதாக அமையும்.

இந்த கண்ணோட்டமானது நீதியை பற்றிய நமது புரிதலை விரிவாக்குகிறது. ரால்ஸ் நீதியைப் பற்றி என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

**ஜான் ரால்ஸ் சிறந்த படைப்புகள்:**

- ❖ நீதி கோட்பாடு – 1971
- ❖ நேர்மையான நீதி – 1985
- ❖ அரசியல் தாராளாவியல் - 1993
- ❖ மக்களின் சட்டம் - 1993

தண்டிக்கும் நீதி எனும் கருத்தாக்கமானது நீதி மற்றும் தண்டனை கோட்பாட்டை உண்டாக்குவதில் முக்கிய பங்காற்றினாலும், இதன் முக்கிய அம்சங்களான விகிதாச்சார தண்டனை, துன்பத்தின் இயல்பு நிலை மற்றும் தண்டனையை நியாயப்படுத்துதல் போன்றவை சர்ச்சைக்குரியதாகவே உள்ளன.

இந்தியா போன்ற நாடுகளில், சிலர் தண்டிக்கும் நீதியின்படி வன்முறையின் மூலமாக தவறிழைப்பவர்களை தண்டித்து அதன்மூலம் நீதியை நிலை நாட்டலாம் என்கின்றனர். இன்றைய நவீன காலத்தில் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய அரசமைப்பு தண்டிக்கும் நீதியை முற்றிலுமாக நிராகரித்துள்ளது. நம் அரசமைப்பு சிற்பிகள் வன்முறை வழிகள் அமைதியையோ அல்லது பிரச்சனைகளுக்கான தீர்வையோ கொண்டு வராது, நிலையான நீதியை வழங்காது என்று உறுதியாக நம்பினர்.

இப்பாடத்தின் நோக்கமே, நீதி பற்றிய பல்வேறு கண்ணோட்டங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதுதான். அவைகளை கற்றுணரும்போது, நீதி பற்றிய எந்த கண்ணோட்டம் நம் இந்திய சூழ்நிலையில் நீதியை நிலைநாட்ட பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் அறியலாம். இந்த கண்ணோட்டங்களுள் நீதி பற்றிய ஜான் ரால்சின் கருத்துக்கள் முக்கியமானவையாக உள்ளன. நீதி பற்றிய அவர் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களை படிக்கலாம்.

ஜான் ரால்சின் இந்தக் கேள்விக்கான பதிலை கண்டறிய முயற்சித்தார். ஒரு கற்பனை சூழ்நிலையை நம்முடைய சிந்தனைக்கு அவர் தருகிறார். ஆம், ஒரு சமுதாயத்தில் இந்த படி நிலையில் நாம் இருக்கிறோம் என்று தெரியவில்லை. ஆனால் அந்த சமுதாயம் எவ்வாறு கட்டமைக்கப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கும் ஒரு முக்கிய நிலையில் நாம் இருப்பதாக கற்பனை செய்து கொள்வோம். நாம் எந்தக் குடும்பத்தில் பிறந்து இருப்போம் என்று தெரியாது. அதைப்போல் நமது சாதி இனம் மதம் பாலினம் மற்றும் எந்த இடம் என்ற எதைப் பற்றியும் நமக்குத் தெரியாது.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அந்த எதிர்கால கற்பனை சமுதாயத்தில் நாம் உருவாக்கும் விதிகள் மற்றும் சட்டங்கள் அனைவருக்கும் பொதுவானதாகவும் நியாயமானவையாகவும் மட்டுமே இருக்கும் என்று “ஜான் ரால்ஸ்“ கூறுகிறார். நமது எதிர்காலம் நிச்சயமற்றதாக இருக்கும்போது நாம் ஏற்படுத்தும் அமைப்பில் அனைவருக்கும் நியாயமான வழியில் அனைத்தும் கிடைப்பதாக இருக்கும்.

இந்த தருணத்தில் ஜான் ரால்ஸ் ”அறியாமை திரை” யின் கீழ் சிந்திப்பது தொடர்பாக விவரிக்கிறார். நாம் சமுதாயத்தில் நம்முடைய நிலை என்னவென்று அறிந்திருக்கவில்லை புதிய சமுதாயத்தில் அவரவர் தங்களுக்கு உகந்த அளவில் சயநல விருப்பங்களை கொண்டிருப்பர். ஆனால், ஆச்சரியப்படத்தக்க வகையில் எவருமே தாங்கள் தயாராக இருப்போம் என்றோ இது தங்களுக்குப் பயனளிக்கும் என்றோ அறிந்திருக்க மாட்டார்கள்.

மிக மோசமான நிலையின் வழியே தான் நாம் ஒவ்வொருவரும் எதிர்காலத்தைப் பற்றி கற்பனை செய்கிறோம். நாம் நம்மை எல்லா சிறப்புகளையும் எல்லா உரிமைகளையும் கொண்டிருக்கும் ஒருவராகத்தான் நினைப்போம். இந்த புதிய கற்பனை உலகத்தில் நாம் எங்கே எவ்வாறு இருப்போம் என்பதை நாம் அறிந்திருக்கவில்லை அப்படி ஓர் சூழ்நிலையில் நாம் எதிர்பாராத விதமாக சமூகத்தின் பின்தங்கிய வகுப்பில் வாய்ப்பு வசதிகள் அற்ற ஒரு இடத்தில் பிறந்தால் என்னவாகும்? இந்நிலையில் உடனே சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கும் வாய்ப்புகள் மற்றும் வளங்கள் கிடைக்கும் படியான ஓர் அமைப்பை உருவாக்க முயற்சிக்கிறோம்.

நாம் பிரியும் தருணம் வந்தாலும் நம்மால் நம் அடையாளங்களை எளிதில் அழிக்க முடியாது. அறியாமை எனும் திரையின் கீழ் இருப்பதாக கற்பனை செய்யவும் முடியாது. இதைப்போலவே மக்கள் முன்பின் அறிமுகமில்லாத ஒருவருக்கு தியாகம் செய்வதாகவோ அல்லது தங்களின் நல்ல எதிர்காலத்தை பங்கு போடுவார்கள் என்று எதிர்பார்க்கவோ முடியாது.

இருந்தபோதிலும் அறியாமை திரையின் பலன் என்னவெனில் இது மக்களை அவர்களின் இயல்பான பகுத்தறிவுடன் இருக்கச்சொல்கிறது. அவர்கள் தங்களுக்காக சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறார்கள். அவர்களின் விருப்பத்தில் எது உயர்வாக உள்ளதோ அதைத் தேர்ந்தெடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கற்பனையான அறியாமை திரையை அணிந்துகொள்வது நேர்மையான சட்டங்கள் மற்றும் கொள்கைகள் கொண்ட அமைப்பை ஏற்படுத்துவதற்கான முதல் படி. இதுவே அவசியமானதுமாகும். இந்த நவீன காலத்தில் பகுத்தறிவு கொண்ட மக்களிடம் இது நம்பிக்கை கொண்டுள்ளது. அறநெறியின் அடிப்படையிலான பகுத்தறிவு ஒரு புதிய அரசியல் கட்டமைப்பை உருவாக்கும். அதில் மக்கள் தங்கள் சுயநல விரும்பிகளின் படி இல்லாமல் ஒட்டுமொத்த சமுதாய விருப்பங்களின் படியான கொள்கைகளைப் பற்றி சிந்திப்பார்கள் என்று ராவ்ஸ் கூறுகிறார். இந்த முழுமையான அனைவரையும் உள்ளடக்கிய கண்ணோட்டம் ஜான் ராவ்சின் கட்டமைப்பில் காணப்படுகிறது. இதை தெளிவாக கூறினால் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் அளிக்கும்படி இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கானதாக இருக்கக்கூடாது. இந்த நியாயமானது இரக்கத்தினாலோ அல்லது பெருந்தன்மையினாலோ இல்லாமல் காரண அறிவின் வெளிப்பாடாக இருத்தல் வேண்டும். ஜான் ராவ்சின் கோட்பாடானது நவீன காலத்தின் மிகச் சிறந்த பகுத்தறிவு மனிதர்கள் நம் சமூகத்தில் நீதியின் சக்தியை உணர வேண்டும் என்கிறது. நம் போன்ற சமூகங்களில் காரண அறிவுக்கு பொருந்தாத அடையாளங்கள் மற்றும் உணர்ச்சிகருத்துக்கள் முக்கிய பங்காற்றுகின்றன. அவற்றை விடுத்து ஜான் ராவ்சின் வழியே அணுகும்போது நீதியின் உண்மையான ஆற்றலை கண்டு கொள்ள முடியும்.

| |
|---|
| வேறு நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்த மக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளை பல நாடுகள் உறுதி செய்துள்ளன. புகலிடம் கோரிய மக்கள், தஞ்சம் அடைந்த மக்கள், அகதிகளாக குடியேறியோர் என பலதரப்பட்ட மக்களுக்கும் உரிமைகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உறுப்பு நாடுகள் பலரும் அங்கீகரித்துள்ளனர். |

**சமூக, பண்பாட்டு சமத்துவம்:**

பண்பாட்டு அம்சங்களைப் பின்பற்றவும் தங்களது தனித் திறமைகளுக்கு ஏற்ற வாழ்க்கைமுறையை அமைத்துக் கொள்ளவும் சமூகத்தில் சமத்துவம் நிலவுவது அவசியமாகும். ஒவ்வொரு நபருக்கும் நியாயமான வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும். அதற்கு, சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு நீக்கிட முயலவேண்டும்; அல்லது அதன் தாக்கத்தை குறைத்திட நடவடிக்கை எடுப்பது மேற்கொள்வது மிக அவசியம். உதாரணமாக, தரமான மருத்துவ வசதிகள், கல்வி, சத்தான உணவுகள், குறைந்தபட்ச ஊதியம் என்பது போன்ற அம்சங்கள் அனைவருக்கும் பாரபட்சமின்றி கிடைத்திடச் செய்வது அவசியம். இவை இல்லாத நிலையில், சமூகத்தில் அனைவரும் சமம் என்றோ அல்லது சம வாய்ப்பு பெற்றவர்கள் என்றோ கருதமுடியாது.

நமது நாட்டின் பிரச்சினை என்ன?

சாதி – மதம் பெயரால் நீண்டகாலமாகப் பின்பற்றப்படும் நம்பிக்கைகள் பெரும் தடையாகிவிடுகிறது. உதாரணமாக, நாட்டில் பல பகுதிகளில், பெண்களின் நிலை கவலை தருவதாகவே உள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை என பல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே பெண்களின்

பணிகளில் மட்டும், பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு 27மூ இட ஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்தது. இவ்வாணை 13.08.90 ஆம் தேதி முதல் அமல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசுப் பணிகளில் சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மத்திய அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தத்துவத்தின் அடிப்படையாகவும் சமூக நீதிக்கு இன்றியமையாத ஒன்றாகவும் கருதப்படுகின்றன. தன் பிறப்பின் அடிப்படையில் பயன்பெறுபவர்கள் இது இந்த நவீன உலகத்திற்கு பொருந்தாது என உணரவேண்டும். சமூகத்தில் உள்ள அனைவருடனும்

1979- ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் பின்தங்கிய வகுப்பிற்கான இரண்டாவது ஆணையம் பி.பி. மண்டல் தலைமையில் உருவாக்கப்பட்டது. பின்தங்கிய மக்களின் சமூக, கல்வியினை மேம்படுத்த வழிமுறைகள், திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் கேட்கப்பட்டன. இந்த ஆணையம் அரசு பதவிகளில் 27 சதவிகிதம் சமூக மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பின்தங்கிய வகுப்பை சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

1980-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மண்டல் ஆணையம் அதன் அறிக்கையை உள்துறை அமைச்சராக இருந்த ஜெயில் சிங்கிடம் சமர்பித்தனர் அப்போது பி.பி. மண்டல் "இந்த அறிக்கையை தயார் செய்வதில் அதிகமான உழைப்பை கொடுத்துள்ளோம். மிக சரியாக கூறினால் நாம் உன்னதமான சடங்கை செய்துள்ளோம்" என்று கூறினார்.

அடுத்த பத்தாண்டுகளுக்கு இந்த மண்டல் ஆணைய அறிக்கை உள்துறை அலுவலகத்திலேயே இருந்தது. அதை தேசிய முன்னணி அரசில் பிரதமராக இருந்த வி.பி. சிங் (1938 – 2001) 1990-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தினார். அந்த நேரத்தில் மண்டல் ஆணைய பரிந்துரைகள் பெரும் விவாதங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தியது. தேசிய அரசியலில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. சந்தர்ப்பவாத அரசியலை செய்வதாக வி.பி.சிங் குற்றஞ்சாட்டப்பட்டார். எந்த ஒரு பெரிய தேசிய கட்சியும் மண்டல் ஆணைய பரிந்துரைகளுக்கு ஆதரவாக இல்லை.

சில அமைப்புகள் மற்றும் பிரிவினர் இந்த பரிந்துரைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இரு தரப்பு வாதங்களையும் பதினொரு நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு கேட்ட பின்பு உச்சநீதிமன்றம் இந்த மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகள் செல்லும் என தீர்ப்பளித்தது. அந்த அமர்வின் பெரும்பான்மை நீதிபதிகள் இந்த 1992-ஆம் ஆண்டு தீர்ப்பை வழங்கினர். ஆனால் அதே சமயத்தில் பரிந்துரைகளில் சில மாற்றங்களை செய்ய அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

1993 ஆம் செப்டம்பர் 8 ஆம் தேதி பணியாளர் மற்றும் பயிற்சி துறையின் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்பின் அறிக்கை பற்றிய சர்ச்சை முடிவிற்கு வந்து, திட்டம் தொடர ஆரம்பித்தது.

**இந்திரா சகானி V. இந்திய யூனியன் AIR 1993 SC 477**

- ஒரு மண்டல குழு வழக்கு எனவும் அழைக்கப்படும்.
- பிரதம மந்திரி மொரார்ஜிதேசாய் தலைமையில் 1979-ஆம் ஆண்டு ஜனவரியில் பி.பி. மண்டல் தலைமையில், சட்டபிரிவு 340-ன் படி பின்தங்கிய வகுப்பினருக்கான இரண்டாவது ஆணையம் ஏற்படு
- பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (SC/ST) மக்களை தவிர்த்து, இதர பிற்பட்ட வகுப்பினர் மொத்த மக்கள் தொகையில் 52% இடம் பெற்றுள்ளனர். அரசு பதவியில் 27 சதவிகிதம் இட ஒருக்கீடு செய்தால்தான் அது பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (SC/ST) இதர பிற்பட்ட வகுப்பினருக்கான (OBC) மொத்த 50 சதவிகித இட ஒதுக்கீடு ஆகும் என இந்த ஆணையம் பரிந்துரை செய்தது.
- மண்டல ஆணைய அறிக்கை சமர்பித்த பிறகு எந்த ஒரு நடவடிக்கையும் மற்றும் செயல்பாடும் இல்லை. பாராளுமன்றத்தில் இருமுறை 1982 மற்றும் 1983-ஆம் ஆண்டுகளில் மண்டல் ஆணையம் அறிக்கை மீது விவாதம் மட்டுமே நடைபெற்றது.
- 1990-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13-ஆம் தேதி வி.பி. சிங் அரசாங்கம் ஒரு ஆணையின் மூலம் மண்டல் ஆணையம் அறிக்கையின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 27 சதவிகித இட ஒதுக்கீடு சமூகத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு இந்திய அரசுப் பணிகளில் வழங்கியது.

## அலகு 14. தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி

**தமிழக அரசியல் வரவாறு:**

இந்தியாவின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாடானது, ஆரோக்கியமான நிர்வாக மற்றும் அரசியல் பண்பாடும், கிட்டத்தட்ட நிலையான பொருளாதார வாழ்வு மற்றும் மிக தொன்மையான காலத்திலிருந்து தற்காலம் வரை தொடர்ச்சியான மரபுகளையும் கொண்டதாகும். தென்னிந்தியவின் சென்னை மாகாணம் என்பது (The Madras Presidency) ஆங்கிலேயரின் அரசியல், நிர்வாக தேவைகளுக்காக தோற்றுவிக்கப்பட்டது. சென்னை மாகாணம் கி.பி. (பொ.ஆ) 1801-இல் உருவாக்கப்பட்டது. இந்த மாகாணமானது, 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் தற்பொழுதுள்ள மாநிலங்களான ஆந்திரா, கேரளாவின் மலபார் பகுதி, தெற்கு கரடநாடகா, ஒடிசாவின் வடபகுதி முழுவதும் கர்நாடகா, ஒடிசாவின் வடபகுதி ஒன்றிய பிரதேசம் ஆகியவை உள்ளடக்கிய பகுதிகளாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சென்னை மாகாணத்தின் அரசியலானது பிராமணர் - பிராமணரல்லாதோரின் மோதல் தொடர்பான ஆதிக்கம் கொண்டதாக இருந்தது. அறிஞர்களும், அரசியல் சிந்தனையாளர்களும் இந்த பிராமணர் - பிராமணரல்லாதோர் என்ற இரு பிரிவினரிடையே உள்ள மோதல்கள் பற்றி புரிந்து கொள்வது என்பதுதான் தென்னிந்தியவின் அரசியல் மற்றும் சமுக வாழ்வை புரிந்து கொள்வதற்கு அவசியமானது என்று நம்பினார்கள்.

**சென்னை மாகாணம்:**

அதே நேரத்தில், சில பிலாமணரல்லாத சாதி குழுக்களின் உறுப்பினர்கள் தொழிற்துறை வாணியம் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை கோரினர். கணிசமான அளவிற்கு, பிராமணரல்லாத சாதிபிரிவினர்கள் கிராமப் புறங்களில் இருந்து மாகாணத்தின் நகர்புறத்திற்கு புலம்பெயர்ந்தனர்.

அவர்கள் தங்களின் அடையாளத்தை உறுதி செய்ய விரும்பினார்கள் மற்றும் படிப்படியாக கமுகத்தில், அரசியலில், நிர்வாகத்தில் பிராமணர்கள் அனுபவித்த ஏகபோக அதிகாரம் மற்றும் தனி உரிடை சலுகைகளை சவாலாக நின்று எதிர்த்தனர்.

''திராவிடன்'' என்ற வார்த்தை அறிஞர்கள் மற்றும் தமிழரல்லாதோர்/ஆரியரல்லாத தமிழ் பேசுவோரை அடையாளம் கண்டுகொள்ள பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் பிராமணர்கள் ''ஆரியர்கள்'' எனவும் அடையாளப்படுத்தப்பட்டனர் மற்றும் பிராமணரல்லாதோர் ''திராவிடர்கள்'' எனவும் அவர்கள் தமிழ்மொழி, பண்பாடு மற்றும் நாகரீகத்தின் பாதுகாவலர் எனவும் கருதப்பட்டனர்.

**திராவிட இயக்கத்தின் தோற்றம்:**

சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதோரின் தமிழ் அடையாளம், சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை பாதுகாப்பிற்காக ஓர் பராமணரல்லாத குழுவால் துவங்கப்பட்டதே ''திராவிட இயக்கமாகும்''.

**திராவிடர்கள் மற்றும் பிராமணரல்லாதோர்:**

1801 ஆம் ஆண்டு பன்மொழி கொண்ட சென்னை மாகாணமானது (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் துலு) காலனிய ஆட்சியால் உருவாக்கப்பட்டது. இந்தியாவினுடைய பன்மை தன்மையை சென்னை மாகாணத்தில் அரசியல் வளர்ச்சியில் காணமுடியும். வங்காளத்திலும், வடஇந்தியவின் பிற பகுதிகளிலும் சமஸ்கிருதம் மற்றும் வேதங்களை மையப்படுத்திய இந்திய பண்பாடு முன் எடுக்கப்பட்டது. இவற்றோடு இந்தோ-ஆரிய (அ) இந்தோ – ஜெர்மன் மொழிக் குடும்பம் அங்கீகரிக்கப்பட்டது. வேதமல்லாத, சமஸ்கிருதம் அல்லாத பண்பாடு அங்கீகரிக்கப்படவில்லை.

| |
|---|
| தமிழ் ஆர்வலர்களால் எல்லிஸ் தமிழை நேசிப்பவராகவும், வள்ளுவரின் குறளை மிகவும் விரும்புவராகவும் பாராட்டப்படுகிறார். இவர் பிற தமிழ்ப் படைப்புகளையும் நேசிப்பவராக இருப்பினும், எல்லிசின் காரனிய மற்றும் மதப் பின்னணி அறியப்படவில்லை. |
| **பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ்** |
| பிறப்பு: மே 7இ 1814 கிளாடி இங்கிலாந்து. |

| |
|---|
| இறப்பு: ஆகஸ்ட் 28, 1891 கொடைக்கானல், இந்திய. |
| **ராபர்ட் கால்டுவெல்** |

1837 ஆம் ஆண்டு ஜேம்ஸ் பிரின்சிபே மற்றும் இதர ஆய்வாளர்களால் பிராமண முல ஆவணங்கள் மற்றும் தென்னிந்திய மொழிகள் மீதான ஆய்வுகள் (எல்லிஸ் 1816 மற்றும் கால்டுவெல் - 1856) போன்றவைகள் இந்திய கலாச்சாரம் கொண்டது அல்ல என்றும், புத்த, திராவிட மரபுகள கூட இந்தியாவில் இருந்தன என்பது நிரூபிக்கப்பட்டது. தென்னிந்தியாவில், குறிப்பாக, பன்மொழி கொண்ட சென்னை மாகாணத்தில், பிராமணரல்லாதோர் இடத்தில், திராவிட மொழிக்குழுக்கள் மற்றும் திராவிட பண்பாட்டு தொன்மை ஆகியவை, திராவிட அடையாள எழுச்சிக்கு இட்டு சென்றது.

(1) பிராமணர்கள், பிராமணரல்லாதோர் மீது தங்களது மேன்மையை கோருவது மற்றும் (2) பிராமணர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை ஏகபோகமாக்கியது ஆகிய இரண்டு திராவிட அடையாளமாக மாற்றியமைத்தது. மகாவாஷ்டிராவில் கூட மகாத்மா ஜோதிபா புலே இதே போன்று ஓர் பிராமணரல்லாதோர் என்பதை குறிப்பதாயிற்று.

சென்னை மாகாண பிராமணரல்லாதோரின் பிரச்சனையை புதியதாக தேசியத் தசைவர்கள் குறைபாடு இருந்தது. 1852 ஆம் ஆண்டு கங்காலு லட்சுமி நராஷ் என்பவர் இதனை வெளிப்படுத்தி, ஆங்கிலேய இந்திய கழகத்திலிருந்து வெளியேறி, சென்னை வாழ் மக்கள் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பை தொடங்கினார். சிப்பாய்க் கலகத்திற்கு பிந்தைய காலங்களில் பிராமணரல்லாத தரைவர்கள் அரசியல் சீர்திருத்தங்களைக் காட்டிலும் சமூக சீர்திருத்ததின் மீது கவனம் செலுத்தினார். 1909 ஆம் ஆண்டு மிண்டோ மார்லி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, சென்னை மாகாணரல்லாதோருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்று எதிர்ப்பு காட்ட துவங்கினர். 1913 ஆம் ஆண்டு ஆளுனரின் செயற்குழு உறுப்பினர், திரு. சர். அலெக்சாண்டர் ஜோர்டன் கார்டிவ் என்பவர் அளித்த புள்ளியியல் விவரமானது, மக்கள் தொகையில் மூன்று சதவீதம் மட்டும் அங்கம் வகிக்கும் பிராமணர்கள் வாய்ப்புகளையும் எடுத்து கொண்டார்கள் என்பதை நிரூபித்தது.

**நீதிக் கட்சி:**

அக்காலத்தில் இருந்த முதன்மையதன அரசியல் கட்சியான இந்திய தேசிய காங்கிரசானது பிராமணர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. எனவே பிராமணரல்லாத உறுப்பினர்களின் கோரிக்கைகளை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. எனவே சென்னை மாகாணத்தில் உள்ள பிராமணர் அல்லாத தலைவர்கள் பிராமணரல்லாதோர் அரசியல் அமைப்பு ஒன்றினை துவங்க நினைத்தனர். முதலாவது உலகப் போருக்கு பிறகு ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் நிறுவனங்களில் பிரதிநிதியாகும் வாய்ப்பு போன்றவை இவர்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தன.

1916 ஆம் ஆண்டு டாக்டர். டி.எம். நாயர், சர் பிட்டி தியாகராயர் மற்றும் டாக்டர்.சி.நடேசனார் போன்றோர்கள் பிராமணரல்லாதோரின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை முன்னேற்றுவதற்காக தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பை நிறுவினர். இவ்வாறு உருவான பின்னர் தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு (SILF) புகழ் பெற்ற நீதிக்கட்சியானது. “நீதிக்கட்சி” என்ற பெயர் ஆங்கில இதழான “நீதி” என்பதன் அடிப்படையில் பெயரிடப்பட்டது. இவர்களின் ஓயாத முயற்கியால் பிராமணரல்லாதோருக்கு மாகாண சட்டமன்ற தேர்தலில் இட ஒதுக்கீடு பெற்றுத்தந்தனர்.

**நீதிக் கட்சியின் முக்கிய நோக்கங்கள்:**

a) தென்னிந்தியாவின் அனைத்து பிராமணரல்லாதோரின் கல்வி, சமூக பொருளாதார மற்றும் செல்வ மேம்பாட்டினை உருவாக்கி முன்னேற்றுதல்.

b) அரசமைப்பிலான அரசாங்கத்தைக் கொண்டு பிராமணரல்லாதோரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல்.

c) அரசமைப்பிலான உண்மையான பிரிதிநிதித்துவ அரசாங்கமாக ஆக்குதல்

d) பிராமணரல்லாதோரின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக பொதுக்கருத்தை உருவாக்குதல்.

1919 ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போ.ஃர்டு சீர்திருத்தமானது மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையைக் கொண்டு வந்ததன் மூலம் சில துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அமைச்சருக்கு என ஒதுக்கப்பட்டது. இரட்டை ஆட்சியின் கீழ் 1920 ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஒத்துழியாமையின் ஒரு பகுதியாக தேர்தலை புறக்கணித்தது. ஆனால் பல்வேறு அடையாளங்களில் காங்கிரசைச் சேர்ந்த பலர் தேர்தலில் போட்டியிட்டனர்.

நீதிக் கட்சி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று சென்னை மாகாணத்திற்கு எ. சுப்பராயலு முதலமைச்சரானார், அவரின் இறப்பிற்கு பிறகு பனங்கல் ராஜா முதலமைச்சாரானார்.

அவர்கள் சூத்திரர்களுக்கு மற்றும் பஞ்சமர்களுக்கு எதிராக இருந்க பொது வழி, போக்குவரத்து, உணவு விடுதிகள் மற்றும் பொது கிணறுகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் இருந்த பாகுபாடுகளை நீக்கினர். இந்து சமய அறநிலைய வாரியத்தை அமைத்ததின் மூலம் ஆலய விவரங்களை ஒழுங்குபடுத்தினர். பஞ்சமர்களுக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்தனர் (பஞ்சமி நிலம்). புதிய நகரங்களையும், தொழிற்பேட்டைகளையும் அறிமுகப்படுத்தினர். ஒடுக்கப்பட்டோரின் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்கு சிறப்பு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனால் சில பள்ளிகளில் "மதிய உணவு திட்டத்தை" பரிசோதனை முறையில் கொண்டுவந்தனர். மருத்துவ கல்விக்கு சமஸ்கிருதம் அறிவு அடிப்படைத் தகுதி என்பது நீக்கப்பட்டு பிராமணரல்லாத மாணவர்கள் மருத்துவக் கல்வியில் நுழைவதற்கு வழி செய்யப்பட்டது. டாக்டர். முத்துலட்சுமி அவர்களின் முயற்சியால் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டதுடன், பெண்கள் வாக்குரிமையைப் பெற்றனர்.

கூட்டுறவு சங்கங்கள் மேம்படுத்தப்பட்டன. மிராசுதார் முறை ஒழிக்கப்பட்டதுடன் மற்றும் 1923 ஆம் ஆண்டு நீர்ப் பாசனத்திட்டங்களும் உருவாக்கப்பட்டன. மேலும் இந்த ஆட்சிகாலத்தில் தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் ஆந்திரா பல்கலைக்கழகம் ஆகியவை உருவாக்கப்பட்டன. சில துறைகள் ஒதுக்கப்பட்டாலும் நீதிக் கட்சி மட்டுமே மிகவும் சிறப்பான அரசாங்கத்தை கொடுத்தது.

**பெரியார் ஈ. வெ. ராமசாமி:**

ராஜாஜி அரசாங்கம் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது என முடிவெடுத்ததை தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை அழித்து "வட இந்திய ஏகாதிபத்தியத்தை" நிறுவும் முயற்சி என பெரியார் கருதினார். மேலும் இந்தி திணிப்பு என்பது திராவிடர்களை அடிமைப்படுத்தி ஆரியர்களின் மேலதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சசி என்று பெரியார் கூறினார்.

சென்னை மாகாணத்தில் மாபெரும் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றதன் விளைவாக மாகாண அரசாங்கத்தால் பெரியார் சிறையில் அறையபட்டார். பதினைந்து ஆண்டுகள் இருபத்து மூன்று சிறை சென்றனர் என்பதால் 'சிறைப்பறவை' என்றும் அடைமொழியிட்டு அழைக்கப்பட்டார். 1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது அவர் நீதிக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு நீதிக் கட்சியானது ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்ற தீர்மானத்தை இயற்றியதுடன் இது ஆங்கிலேய ஆரசாங்கத்தின் இந்தியாவிற்கான அமைச்சருடைய நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்றது. சென்னை மாகாண காங்கிரவில் பெரியார் முன்னோடியாக இருந்ததால் அரசியல் அரங்கில் பிராமணரல்லாதோர் அரசியலில் பங்குபெறுவதற்கான விகிதாச்சார பிரதிநித்துவத்திற்க்குச் சாதகமாக காங்கிரசில் தீர்மானம் கொண்டு வந்ததில் மிகச் சிறப்பாக தனது முயற்சியை செய்தார். வைக்கம் சத்தியாகிராக போராட்டத்திற்கு தனது சிறப்பான தலைமையை அளித்ததுடன் காங்கிரஸ் கட்சி நிறுவிய சேரன்மா தேவி குருகுலத்தில் நடந்த சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக பிரச்சாரம் செய்தார்.

பெரியார் தன்னுடைய திட்டங்களை காங்கிரசு கட்சி ஏற்றுக்கொள்ளச் செய்வதில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தபோது காங்கிரசை விட்டு விலகி 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். இவ்வியக்கம் தேர்தல் அரசியலை தவிர்த்ததுடன் சமூக சீர்திருத்தம், சாதிமுறையை நீக்குவது, பெண்கள் மீதான பாலின அடிப்படையிலான தடை நீக்கம்,

பரம்பரை அர்ச்சகர் உரிமையை எதிர்ப்பது போன்றவற்றிற்காக பிராச்சாரம் செய்தது. சுயமரியாதை இயக்கம் மிக தீவிரமான பிரச்சாரத்தை மேற்கொண்டு பழங்காலம் முதலான மூடநம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் எதிர்த்துடன் பகுத்தறிவற்ற மரபுகள் மற்றும் சமத்துவமற்ற தன்மைகள் நீடித்திருப்பதை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் மகத்தின் பங்குப்பற்றியும் வினா எழுப்பியது. இந்த சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு மாண்பு மறுப்பினை எதிர்த்தல் மற்றும் தனிமனித சமத்துவம் (பெண்கள் உட்பட்ட) போன்றவை மரபு மற்றும் மதத்தின் கோரப்பிடியின் கீழ’ இருப்பதை எதிர்த்து பிராச்சாரம் செய்தது.

சுயமரியாதை இயக்கம் அதன் இயக்க உறுப்பினர்களுக்கு சாதி துணைப்பெயர்களை துறப்பதுடன், சாதி – மத அடையாளங்களையும் கைவிட ஆணையிட்டது. அது சாதியற்ற, புரோகிதர் அற்ற தவிர சம்பிராதாய சடங்குகள் அற்ற ஒப்பந்தத் திருமணங்களை அறிமுகம் செய்தது. இது சுயமரியதைத் திருமணம் எனப்பட்டது. இவ்வியக்கம் தீண்டாமைக்கு எதிராக மட்டும் போராடவில்லை, மாறாக சாதிமுறை அமைப்பு மற்றும் சாதி அடிப்படையிலான பலவீனங்கள், தனிமனிதர்கள் மீது திணிக்கப்படும் மாண்பு குறைவு நடவடிக்கைகள் ஆகியவற்றினையும் எதிர்த்து போராடியது.

சுயமரியாதை இயக்கம் வெறும் பெயருக்காக மட்டும் பெண்ணுரிமை பற்றி பேசவில்லை. அது பெண்களின் சம உரிமை, சமநிலை மற்றும் சம வாய்ப்புக்காக பிராச்சாரம் செய்தது. பெண் விடுதலையில் சுயமரியாதை இயக்கத்தின் பங்குப்பணி ஓர் ஈடு இணையில்லாதது, என்பதால் அதன் காரமாகவே பெண்கள் மாநாட்டில் ஈ.வெ. ராமசாமிக்கு ‘‘பெரியார்’’ என்ற பட்டம் வழங்கபட்டது. பெரியாரின் நாளேடுகளான ‘‘குடியரசு,’’‘‘புரட்சி’’, பின்பு ‘விடுதலை’ போன்றவை சுயமரியாதைக் கருத்துக்களை சிறப்பான முறையில் பிரச்சாரம் செய்தன.

**சுயமரியாதை இயக்கம்:**

1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாடு நடந்தது. 1937 ஆம் ஆண்டு ராஜாஜி என்று புகழ்பெற்ற C. ராகோபாலச்சாரியின் தலைமையில் வழிநடத்தபட்ட காங்கிரசு கட்சி ஓரிடத்தை தவிர அனைத்து இடங்களிலும் வெற்றிப் பெற்றது. ஆனால் காங்கிரசு கட்சியின் வெற்றியானது நீதிக்கட்சியின் வீழ்ச்சினால் கிடைத்ததாகும். காங்கிரசு அரசாங்கம் அமைக்கப்பட்டு, சென்னை மாகாணத்தின் முதன்மை அமைச்சராக ராஜாஜி ஆனார்.

அதிகாரத்திற்குப் வந்த உடனே காங்கிரசு அரசாங்கம் பள்ளிக் கூடங்களில் இந்தியினை கட்டயப்பாடமாக அறிமுகப்படுத்தியது. பெரியார் இந்தி எதிர்ப்பு போராட்டத்தினை தொடங்கினார்.

இக்கால கட்டத்தில் பொதுவுடைமைக் கட்சி (முன்னதாக 1925-இல் உருவாக்கப்பட்டது) சமதர்மத் திட்டங்களுக்காக தொழிலாளர் இயக்கங்களை ஒன்றிணைந்து தீவிராமாக பரப்புரை செய்து கொண்டிருந்து. M. சிங்காரவேலர் மற்றும் அவரின் உடன் இருந்தோர் சுயமரியாதை இயக்கத்தின் சமூக சீர்திருத்த திட்டங்களால் கவரப்பட்டனர். இதன்படி சமூகங்களின் பொருளாதார திட்டங்களுக்கான, ஓர் பொது திட்டத்தின் அடிப்படையில் செயலாற்ற ஒத்துக்கொண்டனர். (ஈரோடு திட்டம்).

**சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள்:**

1. திராவிட சமுதயத்தை சீர்திருத்துவது மற்றும் அதனை உண்மையான பகுத்தறிவுடையதாக்குதல்.
2. திராவிடர்களின் பண்டைய தமிழ் பண்பாட்டின் அவர்களுக்கு கற்பித்தல்.
3. ஆரிய பண்பாட்டின் ஆதிக்கத்தில் இருந்து திராவிட கமூகத்தைக் காப்பாற்றுதல்
4. மூடநம்பிக்கையான நடவடிக்கைகளை நீக்குவதன் மூலம் இந்து மதத்தை சீர்திருத்துவதுடன் பிராமணர்களின் செல்வாக்கினைக் குறைத்தல்.

பெரியார் பொதுவாக பிராமணரல்லாதவர்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொன்மையான திராவிட பண்பாட்டின் புகழை மீட்டெடுக்க

விரும்பினார். பிராமண புரோகிதர்கள் இல்லாத சுயமரியாதைக் திருமணத்தை மேற்கொள்ள ஆதரவு தெரிவித்தார். அவர் மத விழாக்களை மக்கள் பின்பற்றுவதை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு சமூக நிகழ்வுகளிலும் பிராமணர்களின் சேவைகளை பயன்படுத்தாமல் இருக்கச் செய்தார்.

**நீதிக் கட்சியின் வீழ்ச்சி:**

1929-ஆம் ஆண்டு வரை சுயமரியாதை இயக்கமானது சென்னை மாகாணத்தில் ஓர் முன்னோடி இயக்கமாக இருந்தது. 1930 ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாணத்தில் அதன் புகழ் மங்கத்தொடங்கியது. இந்த வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று இந்த இயக்கமானது ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவு மக்களிடையே ஆதரவை இழந்து. இராண்டாவதாக, பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது. இறுதியாக உயர்குடியின மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம் ஆகியவை பெருமளவு அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களித்தன.

**இந்தி எதிர்ப்பு போராட்டம்:**

நீதிக் கட்சியன் வீழ்ச்சியும், தேர்தல் அரசியலில் நுழைய பெரியார் மறுத்ததும், வளர்ந்து வந்த மகாத்மா காந்தியின் புகழும், இந்திய தேசிய காங்கிரசை 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாண தேர்தலில் வெற்றிபெற செய்தது. ராஜாஜி முதல் அமைச்சரானார்.

அவர் முழுமையான மது விலக்கு (மது விற்கத் தடை) மற்றும் ஜமீன்தாரி முறை ஒழிப்பை நடைமுறைப்படுத்தினார். மேலும் ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவுக்கு இருக்கும் தடையை நீக்குவதற்கு சட்டம் கொண்டுவந்தார். இருந்தாபோதிலும், இந்தி மொழியை கட்டாயமாக பள்ளியில் அறிமுகப்படுத்திய நடவடிக்கையானது பல பள்ளிக் கூட்டங்களை மூடுவதற்கு காரணமானது. இது சுயமரியாரதக்காரர்கள் மறைமலை அடிகள் போன்றறோரை ஆத்திரமடையச் செய்தது. இதனால் 1937 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு அனைவரும் ஒன்று சேர்ந்தனர். பெரியார் உள்ளிட்ட ஆயிரக் கணக்காண போராட்டகாரர்கள் கைதானார்கள், மேலும் பல பேர் சிறையிலேயே இறந்தனர்.

**உங்களுக்கு தெரியுமா:**

| **வ.எண்** | **சென்னை மாகாணம் முதலமைச்சர்கள்** | **ஆண்டு** |
|---|---|---|
| 1. | அ. சுப்பராயலு | 1920-1921 |
| 2. | பனகல் ராஜா | 1921-1926 |
| 3. | பி. சுப்புராயன் | 1926-1930 |
| 4. | பி. முகுசாமி | 1930-1932 |
| 5. | பொப்பிலி ராஜா | 1932-1937 |
| 6. | பி.டி. இராஜாஜி | 1936 |
| 7. | கே.வி. ரெட்டி | 1937 |
| 8. | சி. இராஜாஜி | 1937-1939 |
| **(குறிப்பு: தமிழ்நாடு அரசு மாநில ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்ட வருடம் 1946 அக்டோபர் 20 முதல் ஏப்ரல் 30)** | | |
| 9. | த. பிரகாசம் | 1946-1947 |
| 10. | ஓ.பி. இராமசாமி | 1947-1949 |
| **முதலமைச்சர்கள் (தேர்தல் நடைமுறைக்குப் பிறகு)** | | |
| 11. | பி.எஸ். குமாரசாமி ராஜாத | 1949-1952 |
| 12. | சி. இராஜாஜி | 1952-1954 |
| 13. | கு. காமராஜ் | 1954-1957 |
| 14. | கு. காமராஜ் | 1957-1962 |
| 15. | கு. காமராஜ் | 1962-1963 |
| 16. | எம். பக்தவச்சலம் | 1963-1967 |
| 17. | சி.என். அண்ணாதுரை | 1967-1969 |
| 18. | மு. கருணாநிதி | 1969-1971 |
| 19. | மு. கருணாநிதி | 1971-1976 |
| 20. | எம். ஜி. இராமச்சந்திரன் | 1977-1980 |
| 21. | எம். ஜி. இராமச்சந்திரன் | 1980-1984 |
| 22. | எம். ஜி. இராமச்சந்திரன் | 1985-1987 |

| | | |
|---|---|---|
| 23. | ஜானகி. இராமச்சந்திரன் | 1988 |
| 24. | மு. கருணாநிதி | 1989-1991 |
| 25. | ஜெ. ஜெயலலிதா | 1991-1996 |
| 26. | மு. கருணாநிதி | 1996-2001 |
| 27. | ஜெ. ஜெயலலிதா | 2001-2001 |
| 28. | ஓ. பன்னீர்செல்வம் | 2001-2002 |
| 29. | ஜெ. ஜெயலலிதா | 2002-2006 |
| 30. | மு. கருணாநிதி | 2006-2011 |
| 31. | ஜெ. ஜெயலலிதா | 2011 |
| 32. | ஓ. பன்னீர்செல்வம் | 2012 (இடைக்கால) |
| 33. | ஜெ. ஜெயலலிதா | மே 16இ 2016 – டிசம்பர் 5 2016 |
| 34. | ஓ. பன்னீர்செல்வம் | டிசம்பர் 2016- பிப்ரவரி 2017 |
| 35. | க. பழனிசாமி | பிப்ரவரி 2017 – தொடர்கிறார் |

**1994-சேலம் மாநாடு:**

1994-ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற சேலம் மாநாட்டில், ஏற்கெனவே பெரியாரின் தளபதியாகிவிட்ட திறமையான சொற்பொழிவாளரான சி.என். அண்ணாதுரை நீதிக் கட்சியின் பெயரை திராவிடர் கழகம் (தி.க) என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டுவந்தார். பெரியார் ''திராவிட நாடு'' மாநாட்டை கூட்டி திராவிடர்களுக்குத் தனி ''திரவிட நாடு'' கோரினார். மேலும் அவரின் புகழ் பெற்ற வாசகமான ''திராவிட நாடு திரவிடர்களுக்கே'' எனவும் முழக்கமிட்டார்.

தனித் ''திரவிட நாடு'' கோரிக்கையைத் தவிர திராவிடர் கழகமானது சாதியற்ற சமூகத்தை ஏற்படுத்துதல், மதச் சடங்குகளைக் கண்டித்தல், பழமை மற்றும் மூடநம்பிக்கைகள் அற்ற சமூகத்தை அமைத்தல் ஆகியவற்றை விரும்பியது.

திராவிடர் கழகமானது கிராட மற்றும் நகர் புறங்களில் குறிப்பாக மாணவர்களிடத்தில் மிகவும் புகழ்பெற்ற, பல பிராமணர் அல்லாத தலைவர்கள் மற்றும் மாணவர்கள் தங்களுடைய பெயர்களை தூய தமிழில் மாற்றி கொண்டனர்.

**இந்தி எதிர்ப்புப் போராட்டம்-1965:**

1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்திய அரசு அமைப்புச் சட்டத்தின் உறுப்பு 313-ன் படி இந்தி மொழி இந்திய நாட்டின் அலுவலன மொழியாக ஆக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து 1965 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை தி.மு.க துக்க தினமாக அனுசரிக்கத் தீர்மானித்தது. அதன் பல தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழ்நாடு பெருமளவிலான இந்தி எதிர்ப்பு போராட்டங்களை சந்தித்தது. இந்த கிளர்ச்சியால் தி.மு.க மாணவர் சமூகத்திடம் இருந்து பெருமளவு ஆதரவை பெற்றது. இதன் மற்றொரு பக்கம் காங்கிரசு கட்சி தமிழ்நாட்டில் தனது ஆதரவையும், தளத்தையும் இழந்தது. இதற்கிடையில் தி.மு.க. ''திராவிட நாடு'' கோரிக்கையை திரும்ப பெற்றுக்கொண்டு தமிழ் நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற தேர்தல் அரசியலில் ஊக்கத்துடன் பங்கெடுத்து.

**திராவிட இயக்கம்: இரண்டாம் உலகப்போர் காலத்திலும் அதன் பின்னரும்:**

1939 ஆம் ஆண்டு இந்திய இரண்டாம் உலகபோரில் ஆங்கிலேய அரவாங்கத்தால் ஈடுபடுத்தப்படுவதை விரும்பாத காங்கிரசு அமைச்சரவை பதவியை துறந்தது. பெரியார் திராவிட நாடு கோரிக்கையை எழும்பினார். 1944 ஆம் ஆண்டு நீதிக்கட்சி பெரியார் தலைமையிலான சேலம் மாநாட்டில் அதன் பெயரை ''திராவிடர் கழகம்'' என மாற்றியும், திராவிட நாடு அடைவதே தனது லட்சியம் என்றும் அறிவித்து, சமூக பண்பாட்டு சமத்துவத்திற்கு முன்பாக விடுதலை அடைவது தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறினார். 1949 ஆம் ஆண்டில், திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாதுரையால் ஆரம்பிக்கப்பட்டது.

1951 ஆம் ஆண்டில் உச்ச நீதி மன்றமானது உயர்கல்வியில் சாதிவாரி இட ஒதுக்கீட்டை உடைத்து எறிந்தது. உடனடியாக பெரியாரின் திராவிடர் கழகம் மீண்டும் சாதிவாரி இட ஒதுக்கீடு திரும்ப பெற போராட்டத்தை துவங்கியது.

சட்டமும் விதிமுறைகளும் மக்களுக்காகவே ஏற்பட்டவை சட்டத்துக்காகவும், விதிமுறைக்களுக்காகவும் மக்கள் இல்லை.
**-பெருந்தலைவர் காமராஜ்**

திராவிட முன்னேற்ற கழகமும் கூட இந்த போராட்ட இயக்கத்தில் சேர்ந்து கொண்டது. காங்கிரசு தலைவர் காமராஜர் இந்த சிக்கலை மத்தியில் இருக்கும் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இதனைத் தொடர்ந்து சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பின்தங்கிய பிற்படுத்தபட்ட சகுப்பினருக்குச் சாதகமாக இட ஒதுக்கீடு அளிக்கும் முதலாவது நாடாளுமன்ற சட்டத் திருத்தம் இயற்றப்பட்டது.

**ராஜாஜி ஆட்சி:**

சென்னை மாகாண அரசியலானது குடியரசு இந்தியவில் பழமை மாறா சக்திகளுக்கும், சீர்திருத்தவாதிக்ளுக்கும் இடையே தொடர்ந்து நடக்கும் போராட்டத்தின் சாட்சியாகவே இருந்தது. சென்னை மாகாணத்தின் முதல் தேர்தெடுக்கப்பட்ட திரு. சி. ராஜகோபாலாச்சாரி, மீண்டும் குடியரசினுடைய அரசரமைப்பின் கீழ் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை குறைத்தார். பள்ளிகளில் இந்திய மொழியை திணித்தார், புதிய பள்ளிக் கூடங்களில் பகுதி நேரமாக கற்பதற்கு பரம்பரைக் தொழில் எனப்படும் (குலக்கல்வி) புதிய தொடக்க கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

**தண்டி யாத்திரை பற்றிய அருந்ததி ராயின் கருத்து…**

அரசியல் களத்தின் வழியே எதிர்ப்புகள் பிரதிபலிக்கப்படுவதற்கு ஓர் வரலாறு இருக்கிறது. 1930-இல் தண்டிக்கு காந்தி மேற்கண்ட உப்பு யாத்திரை மிகவும் சிறப்பான உதாரணமாகும். ஆனால், உப்பு யாத்திரை என்பது ஓர் களம் மட்டுமல்ல. அது உண்மையில் சட்டமறுப்பு செயல்பாட்டினைப் பெருமளவில் உணர்த்துவதாகும். காந்தியின் தலைமையில் பல சுதந்திரப் போரட்ட வீரர்கள் குஜராத் கடற்கரைக்கு நடந்கு சென்ற கடல் நீரிலிருந்து உப்பெடுக்க முனையும் போது ஆயிரக்கணக்கான இந்தியர்கள் நாடு முழுவதும் ஆங்கிலேயரின் உப்பு வரிச் சட்டங்களுக்கு எதிராக தாங்களே சட்டத்தினை மீறி உப்பெடுக்கும் செயலை மேற்கொண்டனர். ஆங்கிலேய ஏகாதிபத்ய உப்புச் சட்டத்தினால் உள்நாட்டு உற்பத்தி தடைபடுவதுடன் ஆங்கிலேய இறக்குமதிகளுக்கும் ஆதரவாக அமைந்தது. இச்செயல் ஆங்கிலேய பேரரசின் பொருளதார அடித்தளத்தின் மீதான நேரடித் தாக்குதலாக இது அமைந்தது.

**-(அருந்ததி ராய், பேரரசிற்கான ஓர் சாமானியனின் வழகாட்டி, பக்கம்)**

ராஜாஜியின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து திராவிடத் தலைவர்கள் மாநிலம் முழுவதும் போராடத் தொடங்கினார். காங்கிரசு தலைவர்களின் ஒரு பகுதியினரும் ராஜாஜியின் திட்டத்தால் கோபம் அடைந்தனர். இதுவே ராஜாஜி பதவி விலகுவதற்கு காரணமாக அமைந்தது. அவரைத் தொடரடந்து காமராஜர் முதலமைச்சரானார்.

**காமராஜர் காலம் (1954-1963):**

காமராஜர் தொடக்கக் கல்வித்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்ததுடன் குலக்கல்வி திட்டத்தை ஒழித்தார். பள்ளிகளின் எண்ணிக்கையை பன்மடங்கு உயர்த்தினார், பல அணைகளைக் கட்டி நீர்பாசன வசதியை உயர்த்தினார். நிறைய தொழிற்பேட்டைகளை (Industrial Estates) அமைத்தார். அதன் மூலம் மாநிலத்தில் வியக்கத்தக்க அளவிற்கு தொழில்வளர்ச்சிழயை உறுதிசெய்தார். ஏழை கிராமபுற குழந்தைகளுக்கு கல்வி பெறச் செய்தார். அவர் குழந்தைகளும் மிதிய உணவுதிட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**திராவிட கட்சிகளின் ஆட்சி:**

1967-ஆம் ஆண்டு பொது தேர்தலில் காங்கிரசு கட்சி தோற்கடிக்கப்பட்டது. தி.மு.க. வெற்றி பெற்று சி.என். அண்ணாதுரை முதலைமச்சரானார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

1956-இல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலமாக சென்னை மாகாணத்தில் இருந்து மலையாளப் பகுதிகள் கேரளாவிற்கும், தெலுங்கு பகுதிகள் ஆந்திராப் பிரதேசத்திற்கும், கன்னடப் பகுதிகள் மைசூர் மாநிலத்திற்க்கும் தரப்பட்டது. இங்ஙனம் சென்னை மாகாணம் தமிழர்களின் மாநிலமாக உருவானது. காமராஜர் ஓர் நிலையான ஆட்சியைத் தந்தார்.

அனைத்து ஏழைகளுக்குமான வீட்டு வசதி, படியரிசி திட்டத்தின் மூலம் உணவு பாதுகாப்பிற்கு முன்னோடியாக இருந்து மற்றும் குடிசை மாற்றுவாரியம் அமைந்தது போன்றவற்றால் நகர்புற ஏழை மக்களிடம் போதுமான அளவு அண்ணாவிற்கு ஆதரவு பெருகியது. மிகவும் முக்கியமாக 1969 ஆம் ஆண்டு சி.என். அண்ணாதுரையின் தலைமையிலான அரசாங்கம் ‘‘மெட்ராஸ்’’ மாநிலத்தின் பெயரை ‘‘தமிழ்நாடு’’ என பெயர்மாற்றம் செய்தது. அக்கட்சியின் இதர முக்கிய சாதனைகள்.

1. 75 மைல் தொலைவிற்கு மேல் உள்ள பேருந்து தடங்களை தேசியமயமாக்கியது.
2. அனைத்து சாதி ஏழை மாணவர்களும் பல்கலைக்கழக்கத்திற்கு முந்தைய கல்வி மற்றும் தொழிற்கல்விக்கு முந்தைய படிப்புகளுக்கு கல்வி கட்டன விதிவிலக்கு அளிக்கப்பட்டது.
3. இராண்டாவது உலக தமிழ் மாநாடு நடத்தப்பட்டது.
4. தமிழக ஏழை மக்களுக்கு மானிய விலையில் அரிசி வழங்கப்பட்டது.

**தமிழ்நாட்டில் சுதந்திரத்திற்குப் பிறகு திராவிட ஆட்சி:**

கடந்த 62 ஆண்டுகளாக தழிழகத்தை கிராவிட கட்சிகள் ஆட்சி செய்து வருகின்றன. 1957-ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அரசியலில் நுழைய தீர்மானித்தது. இந்திய பகுதிகளை சீனா ஆக்கிரமிப்பு செய்தன.

## அலகு– 15
## தமிழக அரசியல் சிந்தனைகள்

**வரலாற்றுப் பின்னணி:**

அடிப்படையில் செம்மொழியான தமிழின் தாய்நாடு (தமிழகம்) என்பதை தமிழ்நாடு என்று அழைக்கின்றோம். இதன் அருகில் உள்ள சில பகுதிகளாக கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவை உள்ளடக்கியதாக தமிழகம் இருந்தது. ஸ்டராபோ (கி.மு. (பொ.ஆ) 63-முதல் கி.பி. (பொ.ஆ) 24 வரை). வாழ்ந்த கிரேக்க வரலாற்று சிந்தனையாளர் மற்றும் புவியியலாளர் ஆவார். இவர் தமிழ் முடியாட்சியின் பாண்டியர்கள் காலத்தில் உள்ள இராஜதந்திர வரலாற்றை உற்றுநோக்கியிருந்தார். கடல் பயணங்களின் மூலமாக சோழ, சேர மற்றும் பாண்டியர்கள் கடலருகில் வாழும் மக்களிடம் தமிழரின் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் இந்தியா மற்றும் மத்தியத்தரைக்கடல் பகுதிகளில் வர்த்தகத்தை வளர்ப்பதற்காக தமிழக கரையோரங்களில் இருந்த துறைமுகங்கள் முக்கிய மையமாக செயல்பட்டன. குறிப்பாக கி.மு (பொ.ஆ.மு) 200 முதல் காலகட்டத்தைச் சார்ந்த கி.பி. (பொ.ஆ) 300 வரையானது ஆகும்.பண்டையகால துறைமுகங்களான கொற்கை,

கற்றலின் நோக்கங்கள்:

- ❖ மாணவர்கள் எளிதில் தமிழத்தின் பண்டைய அரசியல் கருத்துக்களைக் கற்பர்.
- ❖ திருவள்ளுவரின் அரசியல் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல்.
- ❖ பாரதியாரின் மூலமாகத் தேசியவாதத்தை புரிந்து கொள்ளுதல்
- ❖ தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பொதுவுடைமைவாத கருத்துக்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல். குறிப்பாக சிங்காரவேலரின் பொதுவுடைமைவாத படைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ திராவிடக் கொள்கையைப் பற்றி புரிந்துகொண்டு மற்றும் தமிழ்நாட்டின் அரசியல், சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ளதாக்கத்தை பற்றி அறிந்துகொள்ளுதல். குறிப்பாகஈ.வெ.ரா. பெரியாரின் பங்களிப்பின் மூலமாக சமுகநீதி, சமத்துவம் மற்றும் உயர் சாதியினரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை போன்றவற்றை புரிந்துகொள்ளுதல்.
- ❖ தமிழ் இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தின் முக்கிய விளக்கங்களைத் தெளிவாக விவரித்தல் மற்றும் இவற்றின் அரசியல் போக்கினை விவரித்தல்

பூம்புகார், வசவசமுத்திரம், பெரிமுளா, அரிக்கமேடு, அழகன்குளம், மாமல்லபுரம் போன்றவை சிறந்தமுறையில் செயல்பட்டன. குறிப்பாக வர்த்தகம், வாணிபம் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகள், இலங்கை, சீனா எகிப்து, கிரேக்க மற்றும் ரோமாபுரி போன்ற நாடுகளுடன் திறம்பட மேற்கொள்ளப்பட்டது. கப்பல் கட்டுதலில் பாரம்பரியமிக்க தமிழர்கள் சிறந்த கடலோடிகளான நமது முன்னோர்கள் உலகின் அடிப்படை தன்மைகளின் தாக்கங்களாக அரசியல், சமுதாயம், பண்பாடு, வர்த்தகம் மற்றும் வாணிபத் தொடர்புகளை உலகின் மற்ற நாடுகளுடன் ஏற்படுத்தினர்.

ஏறத்தாழ கி.மு (பொ.ஆ.மு) 300 முதல் கி.பி. (பொ.ஆ) 300. வரையிலான சங்க இலக்கியங்களில் முக்கிய ஆதாரங்களாக விளங்குவதுடன் அக்கால சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் அரசியலை பிரதிபலித்திருக்கின்றன. சங்கப்பாடலின் வகைப்பாட்டியலில் அகம் (அன்பு சார்ந்து இருத்தல்) மற்றும் புறம் (போர், நன்மை மற்றும் தீமை, சமூகம், நீதி மற்றும் முடியரசு) போன்றவற்றால் தமிழ் அரசியல் முறைமை பற்றி கூறியிருக்கின்றன. சங்க இலக்கிய புத்தகங்கள் (எட்டுத்தொகை) எட்டு நூல் திரட்டு ஆகும், அவையாவன:

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பற்று
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு,

இவை தவிர மேலும் ஒன்பதாவது குழுவாக விளங்கும் பாட்டுகளான பத்துப்பாட்டும் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் தொல்காப்பியத்தின் முதல் இரண்டு புத்தகங்களும் தமிழ் இலக்கணமாகக் கருதப்பட்டதும் இக்காலக்கட்டத்தில் தான் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

சங்க இலக்கியங்களுக்கு பிறகு சேகரிக்கப்பட்ட பிரபலமான நூற்கோவை /பாடல் திரட்டு என்பது "கீழ்கணக்கு" என அழைக்கப்படுகிறது. இப்பதினெட்டு நூல்களின் ஒரு பகுதிதான் மிகவும் பிரபலமான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பதினெட்டு சிறிய நூல்கள் (பதினெண் கீழ்க்கணக்கு, இது திருக்குறளையும் உள்ளடக்கியதாகும்) அக்காலகட்டத்தில் எழுதியதாகும். பிரபந்த இலக்கியம் பல்வேறு வகையான பாடல்களைக் கொண்டிருந்தது அவை: "கோவை", என்பது குறிப்பிட்ட கருத்திலான வரிகளைக் கொண்டிருப்பதுடன் (பொதுவாக அரசன் மற்றும் வீரத்தை குறிப்பிடுதல்) மேலும் "பரணி" என்பதற்கும் வழி வகுக்கிறது. இது பாரம்பரியத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம் மற்றும் கலிங்கத்துப் பரணி அகியவற்றைக் குறிப்பிடலாம்

பண்டைய கால தமிழ் இலக்கியங்களை திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை பல சங்க கால அரசியலின் தன்மை, சமுதாயம் மற்றும் பண்பாட்டினைப் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவுடன் படைக்கப்பட்டு இருந்தன. தமிழ் மொழியானது தமிழ் அடையாளம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மரபுகளின் அடிப்படியாக உள்ளதாகும். நிலம், புவியமைப்பு, ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்களால் வேறுபட்டு இருந்தாலும் தமிழ் பேசும் பகுதிகளில் தமிழரின் நாடு மற்றும் தேசக் கூட்டமைவு என்பது இருந்தது. கலிங்க அரசன் காரவேலா கி.மு. (பொ.ஆ.மு) 165 காலத்தின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்தான் 132 வருடமாக இருந்த "தமிழ் கூட்டமைவு" என்பதை அழித்தார்" என்று அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இதுபோன்றே தமிழ் அரசர்களின் கூட்டமைவின் பிறநாட்டு படையெடுப்பிற்கு எதிராக சண்டையிட்டதை சங்க கால இலக்கியமான அகநானூறு" விவரித்துள்ளது. ஆனால் தமிழ் தேசியவாதம் என்பது காலனி ஆதிக்கத்தின் விளைவினால் தோன்றியது என்று சாதாரணமாக கூறிவிட முடியாது.

**கண்ணகியின் சிறப்புகளாக எரிக்மில்லர் கூறுவது:**

கண்ணகி என்பவர் ஓர் அறிமுகமற்ற ஊரில் ஆதரவிற்கு யாருமற்ற நிலையில் கைச்செலவிற்கு ஏதுமின்றி இருந்த சூழ்நிலையிலும் அரசவையில் தனது வழக்கினை உரைத்து வெற்றி கண்டது அனைவருக்கும் உத்வேகம் அளிக்கக்கூடியதாகும்.

நான் அவர் உலகளாவிய நீதி மற்றும் தனிமனித மாண்பிற்கும் அடையாளமாக திகழ்கிறார். இந்த கதை அவருடைய சிலப்பதிகாரம் எனப்படும் காவியத்தின் மூலமாக அறியப்படுகிறது. எனக்குத் தெரிந்தவரையிலும் கோவலன் மற்றும் கண்ணகிக்கு கிழக்கு கடற்கரையோரம் உள்ள பூம்புகாரில் திருமணம் நடைபெற்றது. சில காலத்திற்கு பின்னர், கோவலன் மாதவி எனப்படும் நாட்டின் மங்கையுடன் வாழ்ந்து வரலானார். ஒரு வருடத்திற்கு பிறகு அவர் வீடு திரும்பினார். அவரும் கண்ணகியும் 250 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மதுரைக்கு சென்றனர். அங்கே அவர்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்கினர். கோவலன் நீதி நியாயமற்ற முறையில் பாண்டிய அரசரால் கொல்லப்படுகிறார். கோவலன் அரசியாரின் கால் சிலம்பைத் திருடியதாக பொய்யான முறையில் குற்றம் சாட்டப்படுகிறார். கண்ணகி அரசவைக்கு வந்து தன்னுடைய கணவன் நிரபராதி என்பதுடன் ஒன்றும் அறியாதவர் என்று வாதிட்டு உண்மையை நிருபிக்கிறார். அரசர் நீதி தவறியதற்காக "யானோ அரசன்; யானே கள்வன்" என ஓலமிட்டவாறு தரையில் வீழ்ந்து மடிந்தார். பின்னர் கண்ணகி மூன்று முறை மதுரையை வலம்வந்து அரசன் நீதி தவறியதற்காக மதுரையையே எரிக்கின்றார். ஆனால் நல்ல மனிதர்கள், விலங்குகள் பாதிக்கப்படாமல் இருக்குமாறு அக்னி கடவுளை வேண்டுகிறார். அவரும் இதை ஏற்றுக்கொள்கிறார். பின்னர் மேற்கு தொடர்ச்சி மலைகளுக்கு சென்ற கண்ணகியை மக்கள் தெய்வமாக வழிபடுகின்றனர்.

எரிக்மில்லர் நாட்டுபுறவியலில் தன்னுடைய முனைவர் பட்டத்தை அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பெற்றார். இவருடைய ஆய்வோடு தமிழ் குழந்தைகளின் பாடல், விளையாட்டு மற்றும் மொழியினைக் கற்றல் பற்றியதாகும். சிலப்பதிகாரத்தினை ஆராய்ச்சி செய்வதற்காக இவர் கண்ணகியின் அடியொற்றிய பூம்புகாரிலிருந்து மதுரை வரை நடை பயணத்தினை, குறிப்பாக அதிலும் மேற்குத் தொடர்ச்சி

| |
|---|
| மலை வரை மேற்கொண்டார். |

தமிழ் தேசியத்தின் மூல ஆதாரங்கள் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டினுடைய வரலாற்றுடன் தொடர்புடைய பங்கு வகிப்பதாகும். இதனால் அரசியல் வரையறுக்கப்பட்டிருப்பதனை சங்க காலம் முதல் காணலாம்.

இங்கே அரசு கருத்தாக்கமும், லட்சிய அரசன் எனும் பதமும், கிரேக்கத்தில் நில எல்லைகளில் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்த நகர அரசை போன்று இருந்தது. பண்டைய தமிழ்நாடு என்பது தமிழகம் என்று அழைக்கப்பட்டது. இது மேற்கு மலையைச் சார்ந்த திருப்பதியிலிருந்து கன்னியாகுமரியின் நுனிவரை உள்ளடக்கியதாகும். இந்த நிலமானது பாரம்பரியமாக ஐந்து புவியியல் சார்ந்த பிராந்தியமாக (திணை) இயற்கைத் தன்மையுடன் பிரிக்கப்பட்டுள்ளது. மலையை சார்ந்த பகுதி (குறிஞ்சி), காடுகளை சார்ந்த பகுதி (முல்லை), வயல் சார்ந்த பகுதி (மருதம்), கடல் சார்ந்த பகுதி (நெய்தல்), மணல் சார்ந்த பகுதி (பாலை) ஆகியன ஐந்திணைகள் ஆகும்.

தமிழ் மொழி பேசும் பகுதிகள் சோழர்கள் (தலைநகரம் உறையூர்), பாண்டியர்கள் (தலைநகரம் மதுரை), சேரர்கள் (தற்போதைய கொங்கு நாடு மற்றும் கேரளா), பல்லவர்கள் (தலைநகரம் காஞ்சிபுரம்) என பலவாறு பிரிக்கப்பட்டு இருந்தது. தமிழ்நாடு பல்வேறு அரசர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டது. கடை ஏழு வள்ளல்கள் புலவர்களுக்கு வாரி வழங்கியதை பற்றி சங்கபுலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். கபிலர் மற்றும் ஔவையார் கடை ஏழு வள்ளல்களான ஆய், பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன் மற்றும் நல்லியை பற்றி குறிப்பிடுகின்றனர். ஓர் சிறந்த அரசனின் குணங்களாக அவன் பாகுபாடற்ற நீதி வழங்கும் அரசனாகவும், மக்களிடத்தில் அன்பு உடையவனாகவும் போர்களத்தில் எதிரிகளிடம் வீரத்தை வெளிப்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

சபை அல்லது மன்றம் மன்றம் எனப்படுவது அரசன் தலைமையேற்று நடத்தும் நாட்டின் உயர்ந்த நீதிமன்றம் ஆகும். இதை போலவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மன்றம் உண்டு. அது அந்த கிராமத்தின் பொது இடத்தில் கூடி அந்த கிராமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கும். போர் வீரர்கள் மிகவும் மதிப்புடன் நடத்தப்பட்டனர். போரில் அவர்கள் இறக்க நேரிட்டால் அவர்களின் நினைவாக, நினைவுத்தூண் ஒன்று ஊரில் எழுப்படும். ஆனால் போரில் ஒருவீரன் தன் பின்புறம் காயப்பட்டு அதனால் இறந்தால் சங்க இலக்கிய காலங்களில் அது அவமானமாக கருதப்படும்.

போரின் நல்ல நடைமுறைகள் பலவற்றை சங்க இலக்கியங்கள் நிறைய தெரிவிக்கின்றன. புறநானூறு என்பது ஒரு சங்க இலக்கியம் ஆகும். இது பாண்டிய அரசனை புகழ்கிறது. அவன் பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் மற்றும் வயோதிக மக்கள், கால்நடைகள் இவைகள் அனைத்தையும் பாதுகாப்பான இடங்களில் போர்காலங்களில் இடம் பெயரச் செய்தான். நீதி என்பது அரசு மற்றும் அரசனின் மனசாட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். நீதி என்பது அரசனின் ஆட்சியில் ஒரு முக்கியமான கூறாக இருக்க வேண்டும். ஒர நல்ல அரசன் எந்த சூழ்நிலையிலும் நீதியை தியாகம் செய்யக் கூடாது. அரசனின் நல்லாட்சி மற்றும் நற்செயல்கள் எப்பொழுதும் நிலையான நீடித்த புகழை கொண்டு வரும். இவைகள் தான் முக்கிய அரசியல் கொள்கைகளாக சங்க காலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னராட்சி முடியாட்சி தன்மையைச் கொண்டிருந்தாலும் அரசனின் சட்டப்படியான முடிவுகள் மக்களின் ஒப்புதலைச் சார்ந்தே இருந்தது. அரசன் மக்களின் ஆதரவு இருக்கும் வரை சட்டப்படியான முடிவுகளை அனுபவிப்பவராகவும் அதே சமயம் அவற்றை தவறாக பயன்படுத்தினால் மக்கள் ஆதரவை இழக்கவும் நேரிடும். சங்க இலக்கியம் (பட்டினப்பாலை) பல்வேறு வகையான வரிகளைப் பற்றி கூறுகின்றது. அவைகள் சுங்கவரி, வருமானவரி, பொருள் மீதுள்ள வரி மற்றும் பல வரிகள் அரசின் வருவாய்களை பெருக்கும் ஆதரமாக கூறப்பட்டுள்ளன. எளிமையான நிர்வாக கட்டமைப்பின் வழியே (அமைச்சர்கள், அதிகாரிகள்) தமிழ் அரசர்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர் வெளிநாட்டு வர்த்தகம், சுங்க வரி முதலானவை அரசின் வருவாயில் பெரும் பங்கு வகித்தன. பாண்டியர் கல்வெட்டில் முத்துக்குளித்தல் (கலாத்திகர்) பற்றியும் மற்றும் முதன்மை எழுத்தர் (கணத்திகன்) பற்றியும் கூறப்பட்டுள்ளது. சோழர்களின் கொடியிலும் மற்றும் நாணயங்களிலும் புலி சின்னத்தை பொறித்து இருந்தார்கள், சேரர்கள் வில் மற்றும் அம்புகளையும், பாண்டியர்கள் மீன் சின்னத்தையும் மற்றும் பல்லவர்கள் சிங்கத்தை சின்னமாக பெற்று இருந்தனர்.

ஒற்றர்கள் மூலம் உளவு பார்த்தல் என்பது நிறுவனப்படுத்தப்பட்டு நாட்டின் முக்கியமானதொரு அங்கமாக இருந்தது. நாட்டின் நிலைத்தன்மையும் அமைதியும் இதன் செயல்பாட்டை பொறுத்தே அமைந்திருந்தது. நிறுவனப்படுத்தப்படாமல் இருந்தாலும் அடிமைகள் இல்லாமலில்லை அடிமைகளை படையெடுத்தபின் பிடிப்பதும், அடிமைகளை வர்த்தகத்திற்கு பயன்படுத்தவும், பரிசுக்காக பரிமாற்றம் செய்யவும் அரசாட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறிப்பாக கட்டுமானம் மற்றும் கட்டிட வேலைகளுக்கு அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர்.

பண்டைய தமிழில் சாதி முறை என்பது காணப்படவில்லை. வர்க்க கொள்கை மற்றும் வர்க்க கொள்கை மற்றும் வர்க்க கருத்து வேறுபாடுகள் அவரவர்களின் தொழில் சார்ந்த முறையில் காணப்பட்டன. சங்ககால சமுதாயத்தில் சாதிய முறை என்பது வெளியிடத்திற்குரியதாகவும் மற்றும் அறியப்பட்டாததாகவும் இருந்தது. சமுதாயப் பிரிவுகளை வர்க்கத்தின் அடிப்படையில் சங்க புலவர்கள் தரம் பிரித்தினர்.

அவைகள்: (குடி) துடியன், பாணன் மற்றும் கடம்பன் அல்லது அரசர் (ஆட்சிபுரிபவர்), வைசியர் (வர்த்தகர்கள்) மற்றும் வேளாளர் (விவசாயிகள்) என்று குறிப்பிட்டுள்ளனர். தகுதிநிலைகளில் காணப்பட்ட வித்தியாசங்கள் தவிர்க்க முடியாததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் வர்ண முறை எனும் சாதி அமைப்பு சங்ககால சமுதாயத்தில் சிறிதளவே காணப்பட்டன.

பண்டைய தமிழ் சமூக அமைப்புகளில் மனுதர்மம் மூலமாக சட்டமாக்கப்படவில்லை. ஆரம்பக்கால ஆரிய-பிராமண சாதிய அமைப்புகள் சங்க காலத்தில் குறிப்பிடப்படவில்லை. இதுபோன்ற அமைப்புகள் சங்க காலத்திற்கு பிறகே தோன்றின. பண்டைய தமிழ் மதங்கள் நாட்டுபுற கலையை சார்ந்தே இருந்தது. இயற்கையை வழிபடுதல் மற்றும் இயற்கை காரணிகளே பொதுவாக காணப்பட்டன. முருகக்கடவுளை வழிபடுவதே தமிழ்நாடு பழங்குடியினரின் வழிபாட்டு மரபு ஆகும். முருகக் கடவுளை போராளிகளின் / மாவீரர்கள் கடுவுளாக நாட்டுப்புற கலாச்சாரமாக செயல்படுத்தினர். உலகில் பற்றுடைய கடவுளாக தமிழ் - திராவிட மரபுகளின் கட்டுரைகளில் வேர் ஊன்ற ஆரம்பித்தது. கி.பி. (பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டுக்கு பிறகே தமிழ் மற்றும் சமஸ்கிருதம் போன்ற எழுத்துகள் தோன்ற ஆரம்பித்தது.

சமஸ்கிருதமயமாதல் பொதுவாக பொது வெளிக்கு பரவ ஆரம்பித்தது. பிராமணர்கள் அரசனுக்கு ஆசி வழங்குபவர்களாகவும், மற்றவர்களை விட உயர்ந்தவர்களாகவும் கருதும் மனப்பாங்கு தொடங்கியது. இக்கால கட்டத்திற்கு பின் பிராமணர்களிடம் ஆசி பெறுவது சட்டபூர்வ வழியாக துங்கியது. சமஸ்கிருதமயமாதலுடன் சேர்ந்து, வேத சடங்குகள், மனு கொண்டு வந்த வர்ணாசிரமம் அமைப்பு போன்றவை, எற்கனவே தொழில் ரீதியாக பிரிக்கப்பட்டு இருந்த திராவிட சமூகத்தை மேலிருந்து கீழாக சாதி ரீதியாக பிரித்தது.

மரபு வழி கொள்கையும் இயற்கை வழிபாடும் தமிழ் மன்னர்களிடம் பொதுவாக காணப்பட்டது. முடியாட்சியும் கலாச்சார மையத்திலிருந்து அதிகார மையத்தை நோக்கி நகர்ந்தது. இதனால், சங்க காலத்துக்கு பிந்தைய காலத்தில் அரசனின் அதிகாரங்கள் அதிகரித்து நாட்டின் மொத்த அதிகாரமும் பெற்ற ஒரே அமைப்பாக அரியனை உயர்ந்தது.

அரசுரிமையானது புனிதத் தன்மையுடையதாகவும், மரபு வழியானதாகவும் பல்லவர்கள் கூறினர். பல்லவர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த ஆரிய கலாச்சாரம் தமிழ்நாட்டில் ஊடுருவியது. இரண்டு கலாச்சாரங்களிலும் உள்ள கருத்துக்கள், அமைப்புகள், சில ஒன்றிணையும் முரண்பட்ட சில வழக்கொழிந்து போகவும் இந்த ஊடுறுவல் வழி வகுத்தது. இந்த கலப்பின் விளைவாக தமிழ் பக்தி கலாச்சாரம் தோன்றியது.

பெண்கள் மிகவும் உயரிய மரியாதையுடன் நடத்தப்பட்டனர் மற்றும் இவர்கள் அரசர்களுக்கு பாதுகாவல் மற்றும் பல்வேறு வகையான பணிகளையும் செய்தனர். ஆனால் அதிகாரங்கள் அனைத்தும் ஆண்களிடம் மட்டுமே இருந்தது. பெண்கள் பொது அவையில் பங்கேற்கலாம். ஆனால் ஆண்களே நிர்வாகிகளாகவும் மற்றும் ஆட்சியாளர்களாகவும் இருந்தனர். பெண்கள் சமூக சடங்குகளில் முக்கிய பங்கு வகித்தனர். மேலும் மரபு வழி உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் ஆண்களிடம் இருந்தாலும், குடும்பத்தில் பெண்ணின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

தமிழகச் சமூகத்தில் பெண்களின் பங்கை பற்றி விவாதிக்கையில் ஔவையார் பற்றி குறிப்பிடுவது அவசியமாகிறது. (ஔவையார் என்றால் மதிப்புக்குரிய பெண் என்று பொருள்) தமிழ் இலக்கியத்திற்கு எந்த பெண்மணிகளெல்லாம் முக்கிய பங்களித்தனரோ, அவர்கள் ஔவையார் என்று பட்டப்பெயரிட்டு அழைக்கப்பட்டனர். வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த ஆறு பெண் தமிழ் புலவர்களுக்கு இப்பட்டப்பெயர் வழங்கப்பட்டது.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையாரும் மற்றும் சோழர்களும் சிறந்த சிறப்புத்தன்மை வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். இலக்கியம், காலாச்சாரம், உலகளாவிய அறநெறி, அரசியல் தன்மை, போர், அமைதி மற்றும் இராஜதந்திரம் போன்றவற்றில் இவர்கள் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தினர். இந்த ஔவையார் ஒன்றாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டு (பொ.ஆ) காலத்தில் வசித்தவர். இவர் அதியமானின் அவையில் இருந்தார். இவர் திருவள்ளுவர் மற்றும் கபிலரின் சம காலத்தவர் ஆவார். நற்றினை குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு இவற்றில் குறிப்பிடத்தக் பங்களிப்பை செய்துள்ளார். இவர் சிறந்த ஒரு தூதராகவும் இருந்தார். அதியமானுக்காக பலமுறை பல அரசர்களிடம் தூதுவனாக சென்றுள்ளார். அதியமான் அவையில் புலவராகவும், அதியமானின் உற்ற தோழராகவும் இருந்தார். தன் தூது திறமையின் மூலம் போர்களைக் கூட இவர் தவிர்த்துள்ளார்

ஒரு முறை காஞ்சியை ஆண்ட தொண்டைமான், அதியமான் ஆண்ட தகடூரை தாக்கி போர்புரியும் எண்ணத்துடன் இருந்தான் இதை அறிந்த ஔவையார் காஞ்சி சென்று தொண்டைமானை சந்தித்து பின் வருமாறு கூறினார்.

”தொண்டைமான் அரசரே உங்களுக்கும் அதியமானுக்கும் தான் எவ்வளவு வேறுபாடு உங்களது ஆயுதக்கிடங்கில் ஆயுதங்கள் சுத்தமாகவும் பளபளப்பாகவும் நெய் பூசப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பாவம் அதியமானின் ஆயுதங்கள் உடைந்தும், ரத்தக்கரை படிந்தும், பட்டறைகளில் பழுது நீக்கும் பணியிலும் உள்ளன” என்றார். தொண்டைமானை புகழ்வது போல், ஔவையார் அவனது போர் அனுபவமின்மையும், அதியமானின் தொடர்ந்த போர்களையும், போர் திறனையும் தெரிவித்து போர் வந்தால் தொண்டைமான் வெற்றி பெறுவது கடினம் என்பதையும் உணர்த்தினார்.

சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டில் இன்னொரு புகழ்பெற்ற ஔவையார் இருந்தார்.

இவரே குழந்தைகளுக்கான நீதி கதைகளையும் ஆத்திச்சூடியையும் கொன்றைவேந்தனையும் எழுதியவர். சற்றே வளர்ந்த குழந்தைகளுக்காக மூதுரை மற்றும் நல்வழி என்ற இரண்டு நூல்களை இவர் எழுதியுள்ளார்.

**திருக்குறள்:**
நம் பண்டைய இலக்கியங்கள் நம் கலாச்சாரம் மற்றும் இலக்கிய மரபுகளை பற்றி குறிப்பிடுகிற அதே வேளையில் நம் தமிழ் கலாச்சாரத்தின் வரலாற்றை குறிப்பாக தமிழ் சமூக அமைப்பு மற்றும் மத நம்பிக்கைகள். வாழ்வாதாரம், விதிமுறைகள், தொழிற்கல்வி மற்றும் பெண்களின் தகுதிநிலை, திருமணம், பாலினம், வர்க்க கட்டமைப்பு, சாதி அமைப்பின் தோற்றம், அமைதி, ஆட்சி முறை, கடற்படை, மீன்பிடித்தொழில் பாரம்பரியம், வர்த்தகம், வணிகம், கப்பல் கட்டும் பணி, மற்றும் கடற்பயணங்கள் பொருளாதாரம், நிலம், அமைப்பு, விவாசயம், கலை, நாட்டியம், பாடல்கள், இசை, கட்டடக்கலை மற்றும் அயல் நாடுகளுடன் உறவு மற்றும் தொலை தூர தேசங்களைப் பற்றியும் கூறுகின்றன.

அறிமுகம்:
அரசியல் என்பது சமுதாயத்தின் நடைமுறைச் செயல்பாடுகளை அப்படியே கிரகித்துக் கொள்வதற்கு மாறாகச் சமுதாயத்தின் விழிப்புணர்வை மாற்றுவதற்கான நடவடிக்கை ஆகும். இத்தகைய நடவடிக்கைகள் ஏழ பல காரணிகள் உள்ளன. சமூக, பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சிக் கட்டங்களில் பழைய சிந்தனைகளால் இடையூறுகளுக்கு உள்ளாகும். சமூகத்தில் புதிக காரணிகள் நெருக்கடிகளை உருவாக்குகின்றன. இவை சமூகத் தளத்தில் புதிய சிந்தனையாளர்களை தோற்றுவிக்கின்றன. இவர்களில் நீண்டகாலத் தாக்கங்களை உருவாக்குபவர்கள் அரசியல் சிந்தனையாளர்களாக உருவாகிறார்கள்.

**அரசியல் சிந்தனையாளருக்கான வரையறைகளாக கீழ்க் காண்பவற்றைக் கூறலாம்:**

- சமூகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்திய கொள்கைகள், நிகழ்வுகளுக்குக் காரணியாக இருத்தல்; மக்களின் பொதுப் புத்தியில் மாற்றத்தை உருவாக்குதல்.
- சமூகத்தில் திருப்புமுனை ஏற்படுத்திய அரசியல் முடிவுகளை எடுத்தல்.
- சமூகத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த பயனாளர்களுக்கும் பலன்கள் அளித்த அரசு முடிவுகளுக்குக் காரணமாக இருத்தல்.
- சமூகத்தின் பல பிரிவு மக்களின் முன்னேற்றத்துக்குக் காரணமான அரசியல் கருத்துகளை பொதுக் கருத்தாக உருவாக்குதல்.

அரசியல் சிந்தனையாளர்களின் நடவடிக்கைகள் புதிய அரசியல் சிந்தனைகளுக்கு ஆதரவாக மக்களின் ஈடுபாட்டினையும் பகுத்தறிவினையும் உருவாக்குகின்றன. சமகால அரசியல் களங்களில் அவர்கள் ஊடாட்டம் கொள்வதால் புதிய சமூக விழுமியங்கள் உருவாகின்றன. அடுத்த காலகட்டத்துக்கு அறைகூவல் விடுக்கும் அரசியல் மாற்றத்துக்கான அரசியல் முடிவுகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். அவர்களது அரசியல் முடிவுகள் அநேக மக்களின் அன்றாட வாழ்வில் நீண்டகால மாற்றங்களை உருவாக்குகின்றன.

நவீன அரசியல் கருத்தாக்கங்களின் படி தேசிய அரசியல் சிந்தனையாளர்கள், பொதுவுடைமைவாத் அரசியல் சிந்தனையாளர்கள், திராவிடப் பண்பாட்டு

திருவள்ளுவர் தம் நூலின் முதல் பகுதியாகிய அறத்துப் பாலில் அறத்தின் சிறப்பைத் திடமாக எடுத்துரைத்துக் கற்பவரின் நெஞ்சில் பதியுமாறு செய்கிறார். இங்கே நெறி தவறாத ஓர் அறவோராக விளங்கி, உணர்ச்சி வயப்படாமல், கற்பனைக்கு இடம் தராமல், நடுநிலையில் நின்று தாம் உணர்ந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குகிறார். இரண்டாம் பகுதியாகிய பொருட்பாலில் உலக வாழ்க்கையின் இயல்புகளையும் நடைமுறைகளையும் அலசி ஆராயும் ஓர் அனுபவம் நிறைந்த அறிஞராகத் திகழ்கிறார் பல காலத்தும் பல துறைகளிலும் கண்டும் கேட்டும் அறிந்தவற்றை எல்லாம் தம் சிந்தனைத் திறத்தால் தெளிவாக உணர்ந்து வகைப்படுத்திக் கூறுகிறார். மூன்றாம் பகுதியாகிய காமத்துப் பாலில் படைப்புத் திறன் மிக்க ஒரு கவிஞராக நின்று குறள் மணிகளை இயற்றியுள்ளார். தாம் மறைந்திருந்து, நாடகப் போக்கில் காதலனையும் காதலியையும் பேசச் செய்துள்ளார்.

**பொருட்பாலின் ஏழு பகுதிகள்:**

”அரசியல் ஐந்து: அமைச்சியல் ஈரைந்து;
உருவவல் இரண்டு; ஒன்று ஒண்கூழ் - இருவியல்
திண்படை; நட்புப் பழனேழ்; குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை”.

என்பது போக்கியார் என்னும் புலவர் பெயரால் அமைந்த பழைய வெண்பா. இதன் படி, பொருட்பால் ஏழு பகுதிகளை உடையது அரசியல் 25, அமைச்சியல் 10, அரண் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 ஆக பொருட்பாலின் எழுபது அதிகாரங்கள் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

”படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு” (குறள் : 381)

என வரும் பொருட்பாலின் முதல் குறட்பாவிலேயே இந்த வேறுபாட்டிற்கான அடிப்படையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக்குறட்பாவில் உள்ளவாறு அரசாங்கம் (அரசின் அங்கம்) என்பதன் அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என்னும் ஆறு அங்கங்களையும் தனித்தனியே வகுத்து, இந்த ஆறு அங்கங்களையும் உடைய ஆட்சித் தலைவனைப் பற்றித் தனியே சில அதிகாரங்களில் கூறி ஏழு வகையாக வேறுபாடு செய்வது திருக்குறளின் அமைப்பு முறைக்கு ஏற்றதாக உள்ளது.

**அரசனது இயல்பு கூறும் இருபத்தைந்து அதிகாரங்கள்:**
பொருட்பாலின் முதலில் அரசனது இயல்பு கூறும் அரசியலை மிக விரிவாக இருபத்தைந்து அதிகாரங்களில் கூறியுள்ளார் திருவள்ளுவர். “இறைமாட்சி“ (அதிகாரம் 39) தொடங்கி “இடுக்கண் அழியாமை“ (அதிகாரம்ட 63) வரையிலான இருபத்தைந்து அதிகாரங்களில் “அரசர்“, “வேந்தர்“, “நிலன் ஆண்டவர்“, “மன்னவர்” முதலான பெயர்களால் நாற்பத்தாறு முறை அவர் ஆட்சித் தலைவனைச் சுட்டிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. கல்வி வேண்டும் (40), கேள்வி வேண்டும் (42), அறிவு வேண்டும் (43), குற்றம் கடிந்த வாழ்வு வேண்டும் (44), பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும் (45), சிற்றினம் சேராமல் வாழ வேண்டும் (46), தெரிந்து (அராய்ந்து) செய்யும் இயல்பு வேண்டும் (47), வலியும் காலமும் இடமும் அறிந்து வினை செய்யும் திறம் வேண்டும் (48 – 50),தெரிந்து தெளியும் ஆற்றல் வேண்டும் (51), தெரிந்து வினையை ஆளும் வன்மை வேண்டும் (52), சுற்றம் தழுவ வேண்டும் (53), மறதி (சோர்வு) இல்லாமல் கடமைகளைச் செய்ய வேண்டும் (54), செங்கோன்மை (நேர்மை) வேண்டும் (55), கொடுங்கோன்மையை வெறுக்க வேண்டும் (56), வெருவந்த (பிறர் அஞ்சி நடுங்கும் செயல்கள்) செய்யாமை வேண்டும் (57), கண்ணோட்டம் (இரக்கம்) வேண்டும் (58), ஒற்று (உளவு) ஆளும் முறை வேண்டும் (59), ஊக்கம் வேண்டும் (60), சோம்பலை ஒழிக்க வேண்டும் (61), முயற்சி வேண்டும் (62), இருக்கண்ப் (துன்பத்தைப்) பொருட்படுத்தாத உறுதி வேண்டும் (63), இவைகளே அரசியலில் ஆட்சித் தலைவர்களுக்குத் திருவள்ளுவர் வலியுறுத்தும் இயல்புகள். இவை யாவும் நன்மக்கள் எல்லோருக்கும் வேண்டும் பண்புகளே என்பது நெற்றித் திலகம்.

குடியாட்சிக் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரைகள்:
அரசனைப் பற்றியும், அரசியல் அமைப்பினைப் பற்றியும் திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் பொன் போல் போற்றத்தக்கனவாக விளங்குகின்றன. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக்காலம். எனினும் அந்தக் காலத்தில் அவர் அரசனுக்குச் சொன்னவைகளாக அமைந்த அறிவுரைகள், இன்று குடியாட்சி முறையில் உள்ள தலைவர்களுக்கும் பொருந்தும் நன்மொழிகளாக உள்ளன. திருவள்ளுவர், அரசு எப்படி இருக்க வேண்டும் என்று முடியாட்சி எங்கும் பரவியிருந்த காலத்திலேயே அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

திருவள்ளுவர் காட்டுகின்ற அரசு எந்தக் காலத்திற்கும், எந்த அமைப்பிற்கும் பொருத்தமாகக் காணப்படுகிற நிலையினை நாம் காண்கின்றோம். அவருடைய அரசியல் கருத்துக்கள் எந்தக் காலத்திற்கும் எந்த அமைப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறப்பினைப் பெற்று விளக்குகின்றன.

**மக்கள் நல அரசு:**
சுருங்கக் கூறின், திருவள்ளுவருடைய அரசியல் அமைப்பு ஒரு “மக்கள் நல அரசு“ (Welfare State) அடிப்படையில் அமைந்தது எனலாம் (திருக்குறளில் அறிவுத் துறைகள், பக்கம் 114 : 118)

என்ற குறப்பாவில், அரசு குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, அரசனாகப் பொறுப்பு ஏற்றால் மட்டுமே ஒருவன் அரசனாகச் சிறக்க முடியாது“ என்னும் கருத்தியலைத் தெள்ளத் தெளிவாகப் பறைசாற்றியுள்ளார் திருவள்ளுவர். ஒரு மன்னன் நீதி நெறி வழுவாமல் தன் கடமையைச் சரிவரச் செய்தால் - குடிமக்களைக் காப்பாற்றினான் என்றால் - அவன், “இறை என்று வைக்கப்படும்“ - “முறை செய்து காப்பாற்றும்” அவனை மக்கள் காணும் கடவுளாகவே கருதுவார்கள் என்கிறார் அவர். மன்னனைக் கடவுளாக நினைத்த ஒரு காலக்கட்டத்தில், “நீ ஒன்றும் கடவுள் அல்ல, நல்ல வண்ணம் நடந்தால், நீதி நெறி வழுவாமல் காப்பாற்றினால் உன்னை மக்கள் கடவுளாகவே கருதுவார்கள்“ என்று வள்ளுவர் கூறியிருப்பது, ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இக்கருத்து, முடியாட்சிக் காலத்திற்கு மட்டுமின்றி, குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலக்கட்டத்திற்கும் பொருந்தி வருவதே.

திருவள்ளுவரின் கண்ணோட்டத்தில் “அறம் வழுவாது, தீமைகளை நீக்கி, மறம் வழுவாது, மானம் காப்பது அரசு“ ஆகும்.

> ”அறனிழுக்கா தல்லாவை நீக்கி மறனிழுக்கா
> மானம் உடைய தரசு” (குறள் : 384)

என்னும் குறட்பா இவ்வகையில் கருத்தில் கொள்ளத்தக்கது.

"மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி". நாடாளும் மன்னன் தனது குடிமக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவன் ஆவான். அவன் ஒருவன் தீய வழியில் நடந்தால், மற்றவர்களுக்கு அதுவே தூண்டுகோல் ஆகிவிடும். அவன் தலைவனாக இருப்பதால், அவனுடைய ஒழுக்கம் மற்றும் தனிவாழ்வு பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவுதல் எளிது. ஆகவே, அவனுக்கு அறநெறி கட்டாயம் வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். மானம் வேண்டும் என்று கூறும் போதும், தனிவாழ்க்கை பற்றிய மான உணர்ச்சியைக் குறிப்பிடாமல், "மறன் இழுக்கா மானம்" என வீரத்திற்கு ஏற்புடைய மானத்தைக் குறிப்பிட்டு, நாட்டின் மானமே தன் மானமாகக் கொண்டு மன்னன் வாழ்க்கை நடத்த வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

"செங்கோன்மை" அதிகாரத்திலும் நல்லாட்சி பற்றி எக்காலத்திற்கும் பொருந்தி வருகின்ற அடிப்படையான கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருவள்ளுவர். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றன அது போல், குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை – நல்லாட்சியை – எதிர்பார்த்து வாழ்கின்றனர் என்கிறார்.

"வானோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி" (குறள் : 542)

என்ற குறட்பாவில் "மன்னவன் கோல்" என்னும் முடியாட்சிக் காலத்திற்கான தொடரின் இடத்தில், "நல்லாட்சி" என்ற பொதுவான இன்றைய மக்களாட்சிக்கு ஏற்ற தொடரைப் பொருத்திக் கொள்ளும் வகையில் பாடியிருப்பது திருவள்ளுவரின் தனிச்சிறப்பாகும்.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (குறள் : 544)

என்னும் குறட்பாவும் திருவள்ளுவரின் காலம் கடந்து நிற்கும் பொதுமை நோக்கினைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது. "குடிமக்களை அன்போடு அணைத்துக் கொண்டு ஆட்சி புரியும் அரசனுடைய அடிகளைப் பொருந்தி நிற்குமாம் உலகம்".

இக்கருத்தினையே "கொடுங்கோன்மை" அதிகாரத்தில் வரும் குறட்பா ஒன்றில் எதிர்மறை வாய்பாட்டால் தெளிவுபடுத்தியுள்ளார் திருவள்ளுவர். கொடுமையைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல் துன்புற்றுக் குடிமக்கள் அழும் கண்ணீருக்கு மிகுந்த ஆற்றல் உண்டு அதுவே ஆற்றல் மிக்க படையாகி முறை செய்யாத மன்னனுடைய அரசையே அடியோடு அழித்துவிடும்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள் : 555)

இங்கே அல்லற்பட்டு ஆற்றாது குடிமக்கள் அழும் "கண்ணீரை", அழித்துவிடும் "படையாக" உருவகம் செய்திருக்கும் திருவள்ளுவரின் சிந்தனை புதுவது; இதுவரை யாரும் கூறாதது. ஹிட்லர், முசோலினி, ஜார் முதலான உலகின் கொடுங்கோலர்களுக்கு எதிராகத் திருவள்ளுவர் இக்குறட்பாவில் அடித்திருக்கும் சாவுமணி வலிமையானது.

**வருவாயைப் பெருக்குவதற்கான நான்கு வழிவகைகள்:**

ஒரு மன்னன் தனது அரசின் வருவாயைப் பெருக்கும் துறையிலும் வரவு – செலவுத் திட்டத்திலும் (Budget) வல்லவனாக விளங்க வேண்டும். இவ்வகையில் திருவள்ளுவர் "இறைமாட்சி" அதிகாரத்தில் கூறியுள்ள ஓர் அடிப்படையான அரசியல் சிந்தனை வருமாறு:

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலுமட் வல்ல தரசு" (குறள் : 385)

முதலாவதாக, ஒரு மன்னன் பொருள் வரும் வழிவகைகளைப் பெருக்க வேண்டும்; இதனை "இயற்றல்" என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் வள்ளுவர். அடுத்து, அரசுக்குப் பல வழிகளிலே வந்த வருவாயைத் திரட்டி ஒன்று சேர்க்க வேண்டும்; இதனை "ஈட்டல்" என்கிறார் வள்ளுவர். மூன்றாவதாக

ஒன்று சேர்த்த பொருளை அழிவு நேராமல் காக்க வேண்டும் இது “காத்தல்“ ஆகும். மிக இன்றியமையாத நான்காவது படிநிலை, இயற்றியும் ஈட்டியும் காத்தும் வைத்துள்ளவற்றைச் செலவிடுவதற்கு உரிய துறைகள் இவை இவை, அவற்றிற்கான தொகைகள் இவ்வளவு இவ்வளவு என்று வகுத்துச் செலவு செய்தல் ஆகும். இதுவே “வகுத்தல்“ எனப்படும். இங்ஙனம் இயற்றல்,ஈட்டல், காத்தல், வகுத்தல் என்னும் நான்கு வழிமுறைகளில் அரசின் வருவாயைச் சேர்த்து, பகிர்ந்து, திட்டமிட்டு, பயன்படுத்திக் கொள்வது ஒரு சேர்ந்த மன்னனின் தலையாய கடமை ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

இக்கருத்து இன்று அரசியல் மற்றும் பொருளியல் சார்ந்த அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமதர்மம் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும். ஓர் அரசு தனது வருவாயை எவ்வாறு எல்லாம் சிறந்த முறையில் திட்டமிட்டுக் கையாள வேண்டும் என்ற முற்போக்கான கருத்தினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நறுக்குத் தறித்தாற் போல் ”இயற்றல்,ஈட்டல், காத்தல், வகுத்தல் என நான்கே நான்கு சொற்களில் வடித்துத் தந்துள்ள பாங்கினை இங்கே நம்மால் காண முடிகின்றது.

அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியனவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால்தான் அவர் அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால் தான் அவர் அரசனுக்கு என்று கூறத் தொடங்கிய “கல்வி“ முதலாக ”இடுக்கண் அறியாமை“ வரையிலான பண்பு நலன்களை “வாழும் உயிர்க்கு“ என்றும் “மாந்தர்க்கு” என்றும் பலர்க்கும் பொதுவாக்கிக் கூறியுள்ளார். திருவள்ளுவர் பொருட்பாலில் வலியுறுத்தியுள்ள அரசியல் சிந்தனைகளில் அறநெறியே முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது. அவரது அரசியல் அமைப்பில் மக்கள் நலமே அடிப்படையாக விளங்குகின்றது. வேறு சொற்களில் கூறுவது என்றால், முடியாட்சிக் காலத்தைச் சார்ந்த திருவள்ளுவரின் பெரும்பாலான அரசியல் சிந்தனைகள் இன்றைய குடியாட்சிக்கு காலத்திற்கும் ஏற்புடையனவாகத் திகழ்கின்றன.

திருக்குறள் ஓர் மதச்சார்பற்ற நூல்
திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை நாம் அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்த மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர் தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஒரு அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாக சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடக்கூட இல்லை.

**தேசியவாதம்:**

**சுப்ரமணிய பாரதியார் (1882 – 1921)**

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர் ஜன்மம் இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தின் ராயினும் ஒன்றே
நாம் சாதி மதங்களைப் பார்க்க வேண்டாம். இந்த நிலத்தில் வாழும் அனைத்து மனிதர்களும் ஒன்றே அவர்கள் எந்த சாதியினரை சார்ந்திருந்தாலும் அல்லது எந்த வேதத்தை போதிப்பவராக இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றே அது மனிதகுலம் ஆகும்.
சுப்ரமணிய பாரதியார்

சி. சுப்ரமணிய பாரதியார் தமிழகத்தின் தலைச்சிறந்த கவிஞர், சுதந்திரப் போராளி மற்றும் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் மகாகவி பாரதியார் என்று மிகவும் போற்றப்படுகிறார். மகாகவி என்றால் மிகப்பெரிய கவிஞர் எனப்பொருள்படும் இவர் இந்தியாவின் தலைசிறந்த கவிஞராகக்

கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசிய உணர்வைத் தூண்டி தேச விடுதலைக்காக மக்களைத் திரட்ட உதவியதுடன் தமிழகத்தில் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாகவும் இருந்தன.

| |
|---|
| ”நாம் ஆயிரம் பிரிவுகளாக வேண்டுமானாலும் பிரிந்து இருக்கலாம். ஆனால், எப்படி இருந்தாலும் அந்நிய படையெடுப்பை நியாயப்படுத்த முடியாது”. |

பாரதி: ஓர் பாடலாசிரியர் மற்றும் ஓர் தேசியவாதி

தமிழ் இலக்கியங்களின் ஓர்புதிய சகாப்தமே சுப்ரமணிய பாரதியாரிடமிருந்து தொடங்கியுள்ளது எனலாம். இவருடைய பெரும்பாலான படைப்புகள் தேசபற்று, பக்தி மற்றும் மறைபொருள் பற்றியதாகும். பாரதியார் மிகவும் உணர்ச்சிப் பெருக்குள்ள கவிஞர் ஆவார். ”கண்ணன்பாட்டு” ”நிலவும் வான்மீனும் காற்றும்” ”பாஞ்சாலி சபதம்” போன்றவை பாரதியாரின் மிகச் சிறந்த படைப்புகளின் வெளிப்பாடுகளாகும்.

| |
|---|
| பாரதியாரின் ”பாஞ்சாலி சபதம்” என்பது ஓர் தலைசிறந்த படைப்பாகும். இது இந்தியாவை திரௌபதியாகவும், ஆங்கிலேயரை கௌரவர்களாகவும் சுதந்திர போராட்ட வீரர்களை பாண்டவர்களாகவும், உருவகப் படுத்தியிருந்தார். திரௌபதியின் போராட்டம் மூலமாக அவர் இந்திய தாய் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுள்ளதை மறைமுகமாக வெளிப்படுத்தினார். |

பாரதி ஓர் தேசியக் கவிஞராக கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசப்பற்று மிக்கதாக மக்கள் மத்தியில் போற்றப்பட்டுள்ளன. இதனால் மக்கள் ஈர்க்கப்பட்டு சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஈடுபாடுடன் பங்கேற்று நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டனர். பாரதியார் நாட்டின் பெருமையை மட்டும் கூறாமல் சுதந்திர இந்தியாவைப் பற்றிய தொலைநோக்குப் பார்வையை கோடிட்டுக் காட்டுகிறார். இவர் 1908 ம் ஆண்டு ”சுதேச கீதங்கள்” எனப்படும். உணர்ச்சிமிக்க பாடல் தொகுப்பினை வெளியிட்டார்.

ஓர் இதழாசிரியகராக பாரதியார்:

பாரதியார் (பல வருடங்களைப்) தன்னுடைய வாழ்க்கையில் பத்திரிக்கையாளராக செலவிட்டார். பாரதி இளம் வயதில் தன்னுடைய வாழ்க்கையை ஓர் பத்திரிக்கையாளர் மற்றும் துணை ஆசிரியராக ”சுதேச மித்திரன்” என்ற பத்திரிக்கையில் 1904ஆம் ஆண்டு தொடங்கினர். 1906-ஆம் ஆண்டு மே மாதம் ”இந்தியா” எனப்படும் ஓர் புதிய நாளிதழ் தொடங்கப்பட்டது. இது பிரஞ்சு புரட்சியின் மூன்று முக்கிய முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்றவற்றை தனது குறிக்கோளாக அறிவித்தது. இது தமிழ் பத்திரிக்கை துறையில் ஓர் புதிய பாதையை ஏற்படுத்தியது எனலாம். இது புரட்சிகரமான புதிய முயற்சியாக தோன்றியது. தனது புரட்சிகரமான முனைப்புகளை வெளியிடுவதற்கு பாரதியார் அவர்கள் வார இதழை சிகப்புதாளில் அச்சிட்டு பிரசுரித்தார். அரசியல் கேலிச் சித்திரத்துடன் வெளியிடப்பட்ட தமிழ் நாட்டின் முதல் நாளேடு “இந்தியா“ என்பதாகும். இவர் மேலும் விஜயா என்கிற தமிழ் தினசரியின் அதன் பதிப்பாசிரியராகவும் இருந்து வெளியிட்டார். “பால பாரதா” என்கிற ஆங்கில மாத இதழையும், பாண்டிச்சேரியில் ”சூர்யோதயம்” எனும் உள்நாட்டு வார இதழை வெளியிட்டார்.

| |
|---|
| சுயராஜ்ய தினம்” கொண்டாடுவதற்காக 1908-ஆம் ஆண்டு சென்னையில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்திற்கு இவர் ஏற்பாடு செய்தார். ”வந்தே மாதரம்” ”எந்தையும் தாயும் ஜெய பாரத்” போன்ற பாரதியாரின் கவிதைகள் அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன. |

சுப்ரமணிய பாரதியார் (டிசம்பர்) பதினோராம் நாளில் 1882-ஆம் ஆண்டு எட்டயபுரம் என்னும் கிராமத்தில் பிறந்தார். இந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இவருடைய குழந்தை பருவ பெயர் சுப்பையா ஆகும். இவரது தந்தையார் சின்னசாமி, தாயார் லட்சுமி அம்மாள் ஆவார்.

பாரதியார் ஏழு வயதில் தமிழ்க் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். தன்னுடைய பதினோராம் வயதில் அவருடைய படைப்புகள் மற்றும் திறமைகள் கற்றறிந்த அறிஞர்களால் புகழப்பட்டது.

பதினோராம் வயதில் சுப்பையா அனைத்து பெருமக்கள் மற்றும் அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் ஓர் சவால் விட்டார். யாரேனும் என்னுடன் எந்தவித முன்னறிப்பு மற்றும் பயிற்சி இல்லாமல் எந்த தலைப்பில் வேண்டுமானாலும் பேச தயாரா? என சவால் விட்டார். இந்த போட்டி எட்டையபுர அரசவையில் ஓர் சிறப்பு அமர்வாக எட்டயபுர அரசரின் தலைமையில் நடைபெற்றது. சவாலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு "கல்வி" ஆகும். சப்பையா பேச்சுப் போட்டியில் வென்றார். இது சுப்பையாவின் வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. இந்த மறக்க முடியாத நிகழ்வுக்கு பிறகு "எட்டயபுர சுப்பையா" என்று அழைக்கப்பட்ட அவர் "பாரதி" என்றும் பிற்காலத்தில் பாரதியார் என்றும் மரியாதையுடன் அழைக்கப்பட்டார். "பாரதியார்" என்ற பெயர் அனைவராலும் குறிப்பாக தேசவாதிகளாலும் உலகெங்கிலும் உள்ள கோடான கோடி தமிழப் பற்றாளர்களால் மரியாதையுடனும் நினைவு கூறப்படுகிறது.

ஜீன் 1897- இல் பாரதியாருக்கு பதினைந்து வயது நிரம்பியிருந்த போது செல்லமாளுடன் திருமணம் நடந்தது. இதன்பிறகு பாரதியார் காசிக்கு சென்றார். அங்கு தனது அத்தை குப்பாள் மற்றும் மாமா கிருஷ்ணசிவனுடன் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அங்கிருந்த போது தான் சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழியறிவினை பெற்றார். அகலாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் அவர் வெற்றி பெற்றார். காசியில் தங்கியருந்தது பாரதியின் ஆளுமையில் பெரும் மாற்றங்களை எற்படுத்தியது. முறுக்கு மீசை, சீக்கியர்களின் தலைப்பாகை மற்றும் வீறு கொண்ட நடையினை தனக்கே உரித்தானதாக்கினார். இத்தகைய வெளிப்படையான மாற்றங்களும் பாரதியாரிடம் ஏற்பட்டன.

"இந்தியா" என்கிற இதழின் பதிப்பாசிரியராக இருந்து செயல்பட்டதனால் பாரதியாருக்கு கைது ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. இதனால் நிலைமை மிகவும் மோசமானதால் 1908-ஆம் ஆண்டு பாண்டிச்சேரிக்கு செல்ல முடிவு எடுத்து அவர் அங்கே சென்றார். அந்த கால கட்டத்தில் பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அங்கு பாரதியாரின் வாழ்வில் பல்வேறு சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. இதன் மூலம் பல தலைவர்களை சந்திக்கவும், சுதந்திரப்போராட்டத்தில் ஆயுதமேந்திய இயக்கத்தின் தலைவர்களான அரவிந்தோ, லாலா லஜபதிராய் மற்றும் வி.வி. சுப்ரமணியம் ஆகியோரையும் பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுந்திருக்கும் பொழுது சந்தித்தார். மிகவும் ஆதாயத்திற்குரிய பாரதியாரின் வாழ்க்கை என்பது பாண்டிச்சேரியில் பத்து வருடம் அவர் தங்கியிருந்த காலமாகும். இவர் தமிழ் இளைஞர்களை ஒன்று திரட்டி தேசிய பாதைக்கு இட்டுச் சென்றார். பாரதியாரின் படைப்புகள் ஆங்கிலேய அரசுக்கு மிகவும் எரிச்சலூட்டின, இவரின் எழுத்துக்கள் மூலம் தாய் நாட்டுப்பற்றை தமிழ் இளைஞர்களிடம் விதைத்தார். பாரதியார் 1919-ஆம் ஆண்டு சென்னையில் ராஜாஜி வீட்டில் மகாத்மா காந்தியை சந்தித்தார். பாரதியார் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவிற்கு அருகில் 1918-ஆம் ஆண்டு கடலூரில் நெருங்கினார். அப்பொழுது அவர் கைது செய்யப்பட்டார். இவர் சிறையில் இருக்கும்பொழுது தன்னுடைய நேரத்தை சுதந்திரம், தேசியவாதம் மற்றும் நாட்டின் நலத்தைப் பற்றிய கவிதைகள் எழுதுவதற்கு செலவிட்டார். பாரதியார் தன்னுடைய இளமைக்காலத்தில் தமிழ் தேசியத் தலைவர்களிடம் நல்ல உறவுகளை ஏற்படுத்தினார், குறிப்பாக வ.உ. சிதம்பரம், சுப்ரமணிய சிவா, மண்டயம் திருமலச்சாரியார் மற்றும் சீனுவாச்சாரி போன்றவர்களிடம் நல்லுறவுகளை வளர்த்தார். இந்த தலைவர்களிடம் ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்படும் பிரச்சனைகளை பற்றி விவாதித்தார். பாரதியார் இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்திர மாநாட்டில் கலந்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் தேசிய பிரச்சனைகளை தீவிரமான இந்திய தேசியவாதத் தலைவர்களான பிபின் சந்திரபால், பாலகங்காதரதிலக் மற்றும் வி.வி. சுப்ரமணியம் போன்றோரிடம் விவாதித்தார். பாரதியாரின் பங்கேற்பு மற்றும் செயல்பாடுகளால் 1905-ஆண்டு பனாரஸ் மற்றும் 1907-ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரசு தலைவர்களை இவரது தேசபற்று மிகவும் கவர்ந்து இழுத்ததுடன் பல தாய் நாட்டை நேசிக்கும் சேதத் தலைவர்களால் மதிக்கப்பட்டார். சில தேசத்தலைவர்களுடன் தேசம் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார். அதுமட்டும் இல்லாமல் பல்வேறு முறையில் தேசிய இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு அவர் அறிவுரைகளை வழங்கினார். சந்தேக மில்லாமல் பாரதியாருடைய அறிவுரைகள் மூலமாகப் பல தேசிய தலைவர்கள் புத்துணர்வு பெற்று தேசியவாதத்திற்கு பங்காற்றினார். இவ்வாறு பாரதியார் இந்திய சுதந்திரத்திற்காக முக்கிய பங்காற்றினார் என்பதை நாம் அறிவோம்.

**ஓர் சமூக சீர்திருத்தவாதியாக பாரதியார்:**
பாரதியார் சாதிய அமைப்புக்கு எதிராக செயல்பட்டவர். இவர் உலகில் இரண்டு சாதிகள் உள்ளன. ஒன்று ஆண்சாதி மற்றொன்று பெண்சாதி என்பதைத் தாண்டி வேறு ஒன்றுமில்லை என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார். இவற்றிற்கெல்லாம் இவர் தனது பூநூலை அகற்றினார். மேலும்

அட்டவணை சாதியினரையும் பூநூல் அணியச் செய்து வேதம் ஓதச் செய்தார். இவர் முஸ்லிம்கள் நடத்தும் கடையில் தேநீர் பருகினார். இவர் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களுடன் தேவாலாயத்திற்கு அனைத்து விழாக்களிலும் பங்கேற்றார். இவர் பட்டியல் இனத்தவரை கோயிலுக்கு அனுமதிப்பதை ஆதரித்தார். இவருடைய அனைத்து சீர்திருத்தங்களுக்கும் இவருடைய அக்கம் பக்கத்தினரிடையே பெரிய எதிர்ப்பு இருந்தது. பாரதியார் மிகவும் திறமையானவர். இந்தியர், தெளிவாக அனைவரும் பாரதத்தாயின் குழந்தைகள் என ஒன்றுபட்டு செயல்பட்டால் அன்றி இந்திய விடுதலை சாத்தியமாகாது என்று கூறினார். இவர் பெண்களின் உரிமைகள், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களின் ஆற்றலாதல் ஆகியவற்றை மிகவும் நம்பினார். இவர் குழந்தை திருமணம், வரதட்சணை முறையைத் தீவிரமாக எதிர்த்தார். ஆனால் விதவை திருமணத்தை அவர் ஆதரித்தார்.

ஆணும் பெணும் சமமாகக் கருதப்பட்டால் மட்டுமே இவ்வுலகம் அறிவு மற்றும் புத்திக்கூர்மையில் சிறப்புறும். – சுப்பிரமணிய பாரதியார்

விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதாவுடனான பாரதியாரின் சந்திப்பு பெண்களுக்கான உரிமைகள் பற்றி சிந்தனையைப் பாரதியாரிடம் ஏற்படுத்தின. இது சாதியப் பிரச்சனையிலிருந்து சுதந்திரம் வரைக்கும் மற்றும் ஆன்மீகம் வரை பாடுபட்டவர். இவர் தற்கால பெண்களுக்கு சக்தி என்கிற அடையாளத்தை ஏற்படுத்தியவர். குறிப்பாக நவீன பெண்களின் அதிகாரம், பலமான, சுதந்திரமான மற்றும் ஆண்களுக்கு சமமான பங்குதாரர் என்று பெண்களை குறிப்பிடுகிறார்.

**ஓர் தொலைநோக்குச் சிந்தனையாளராகப் பாரதியார்:**

பாரதி என்பவர் ஒரு கவிஞர், பத்திரிக்கை ஏழுத்தாளர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் தமிழக சமுதாயத்தில் மிகப் பெரியத் தாக்கத்தை ஏற்படுத்தியவர். இவர் சொன்னதைச் செய்துக் காட்டியவர் என்பது இவரின் உயர்வைக் காட்டுகிறது. இவருடைய தொலை நோக்கான முன்கணிப்பு போல அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஓர் மக்கத்தான இந்தியா பற்றிய இவரின் தொலை நோக்கு சிந்தனைகள் சுதந்திர இந்தியாவில்

பாரதியார் செப்டம்பர் பதினோராம் நாள் 1921-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் இவரின் இறுதி சடங்கில் பதினான்கு நபர்கள் மட்டுமே பங்கேற்றனர். இதற்கு சாதியை விட்டு தள்ளி வைக்கப்படுவோம் என்பதுடன் ஆங்கிலேய அரசாங்கத்தின் அடக்கு முறையினால் ஏற்பட்ட பயமே காரணமாகும்.

செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாரதியார் தனக்காக வாழாமல் மக்களுக்காகவும் தேசத்திற்காகவும் வாழ்ந்தவர். ஆகையால்தான் மரியாதையுடன் இவரைப் பாரதியார் எனப் போற்றுகின்றனர். பல ஆண்டுகளுக்குப் பிறகும் சுப்ரமணிய பாதியார் இந்திய சுதந்திரத்தின் சின்னமாகவும் தமிழ் தேசியவாத அதிர்வலையை ஏற்படுத்தியவராகவும் விளங்குகிறார்.

பொதுவுடைமைவாதம்:

ம. சிங்காரவேலர் (1860 – 1946)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுச்சிபெற்ற சுதேசி மற்றும் தன்னாட்சி இயக்கங்களால் நாடு முழுவதும் விடுதலை உணர்வு பரவியது. சமூகரீதியிலும் இந்து மத்திற்குள் சில சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அரசியல் ரீதியாக இந்தியத் தன்மை அல்லது தேசிய உணர்வு உருவாவதில் இந்த இயக்கங்கள் முக்கியப் பங்கு வகித்தன.

இருந்த போதும் இவை மதவாதத் தன்மையை கொண்டிருந்தன. அதேபோல இந்த இயக்கங்களில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் படித்த மேல்தட்டு வர்க்கத்தினராக இருந்தனர். அவர்கள் கோரும் விடுதலை மட்டுமே அரசியல் விடுதலையாக இருந்தது. அடித்தட்டு மக்களான விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. பெரும்பாலான விவசாயிகள் ஏழைகளாக இருந்தனர். மேலும், காங்கிரசு கட்சிக்குள் சாதிப் பாகுபாடுகள் நிலவின. குறிப்பாக, தமிழகத்தில் பிரமாணர், பிராமரல்லாதவர் என்ற பாகுபாடு நிலவியது.

இந்த நிலைமையில் தமிழக அரசியல் இயக்கத்தில் பகுத்தறிவு கருத்துகள், அறிவியல் பார்வை ஆகியன உருவாவதிலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு வட்டாரத் தன்மை அளிப்பதிலும், விடுதலைப் போராட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் நலன்களை இணைப்பதிலும் இந்திய அரசியலில் சமதர்மக் கருத்துகள் பரவியதிலும் ம. சிங்காரவேலரின் அரசியல் சிந்தனைகள் முக்கியப் பங்காற்றின.

**காங்கிரசு அரசியலில் சிங்காரேவேலருடைய சிந்தனைகளின் தாக்கம்:**
தொடக்கத்தில் இந்தியாவில் இருந்து இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து மூலப்பொருட்களாகத் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்த ஆங்கிலேய அரசு, தங்கள் தேவைகள் அதிகரித்ததால் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளைத் தொடங்கியது. ஏற்கனவே இந்தியாவில் பாரம்பரியத் தொழில்களை காலனியாதிக்க அரசு முடக்கிவிட்டதால் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து பசி, பட்டினி, வறுமையில் வாடினர். இதனால் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேலும் மோசமாக்கியது. இதனால் கூலி வேலை கிடைத்தால் போதும் என்ற நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டனர்.

இதனால் பின்னர் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் அனைத்திலும் தொழிலாளர்கள் மிகக் குறைவான கூலிக்கு வேலையில் அமர்த்தப்பட்டனர். அடிமைகளைப் போல் உழைத்தனர். போராடினால் கடுமையான அடக்குமுறையால் ஒடுக்கப்பட்டனர்.

இவ்வாறு பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்காகத் தொழிலாளர் அமைப்புகள் உருவாகத் தொடங்கின. அன்றைய சென்னை மாகாணத்தில் இந்த அமைப்புகளுக்கு திரு.வி. கல்யாணசுந்தரனார், தி. வரதராஜுலு போன்றோர் தலைமை தாங்கினர். இந்த தொழிலாளர் அமைப்புகள் உருவாக முன்முயற்சிகள் எடுத்து பாடுபட்டவர் ம. சிங்காரவேலர் ஆவார் என்பது மிகையில்லை.

இந்த தொழிலாளர்களை அரசியல்மயப்படுத்தி விடுதலை இயக்கத்தோடு இணைக்க வேண்டும் என்று ம. சிங்காரவேலர் விரும்பினார். ஆனால் காங்கிரசு கட்சி இதனை விரும்பவில்லை. ம. சிங்காரவேலர் இதனைக் கடுமையாக விமர்சித்து 1920 ஆம் ஆண்டிலேயே காங்கிரசு தலைமைக்கு தந்தி அனுப்பினார். தொடர்ந்து அண்ணல் காந்திக்குப் பகிரங்கக் கடிதமும் எழுதினார். அத்துடன் ஹிந்து. சுதேசமித்திரன் உள்ளிட்ட முன்னணி நாளிதழ்களிலும் நவசக்தி போன்ற பருவ இதழ்களிலும் ஏராளமான கட்டுரைகள் எழுதினார். காங்கிரசு தொண்டர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்தார். இச்சமயத்தில் 1922-ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டத்தில் தமிழகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அவர் அங்கும் விவாதத்தை உருவாக்கி தமக்கு ஆதரவு திரட்டினார். அவரது கருத்துக்கள் வருமாறு.

- இந்திய விடுதலை என்பது விவசாயிகள். தொழிலாளர்களின் பொருளாதார சுதந்திரத்தை உள்ளடக்கியதாகும்.
- தொழிலாளர்கள், விவசாயிகள் நலன்களுக்காகவும் காங்கிரசு பேரியக்கம் போராட வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளையும் இணைத்துக் கொள்ளவேண்டும். பல்வேறு அமைப்புகளில் உள்ள மக்களை ஒன்று திரட்ட காங்கிரசு தலைவர்கள் உதவ வேண்டும். இதன் விளைவாக 1922-இல் இந்திய தேசிய காங்கிரசு தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக ஒன்று திரட்டத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் இதற்கென ஓர் குழுவினை அமைத்தது. ஆறுபேர்கொண்ட அக்குழுவில் சிங்காரவேலரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் இயற்ற வேண்டும் என்று போராடினார். அதனை வலியுறுத்தி அன்றைய முன்னணி நாளிதழ்களில் தொடர்ந்து எழுதினார். இதுபோன்ற முயற்சிகளின் பலனாக முதல் முறையாக 1926-இல் தொழிலாளர் நலன்களைப் பேணும் சட்டம் இயற்றப்பட்டது.

இதேபோல காங்கிரசு தலைவர்கள் அந்தந்த வட்டார மொழிகளில் பேசினால்தான் விடுதலைக்கருத்துகள் மக்களைச் சென்றடையும் என்பதுடன் மக்களுக்கும் காங்கிரசு

பேரியக்கத்துக்கும் இடையே நெருக்கம் உருவாகும் என்றார். மக்கள் பிரச்சனைகளைப் பொதுமக்களிடம் பேசும்போது தமிழ் மொழியிலேயே பேச வேண்டும் என உறுதியாக இருந்தார். இதையொட்டி 1918-இல் சென்னை மாகாண சங்கத்தின் மாநாட்டில் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் சிங்காரவேலர் மற்றும் ஈ.வெ.ரா. பெரியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுயமரியாதை,பொதுவுடைமைவாதம் இயக்கங்களின் மீதான ம. சிங்காரவேலரின் தாக்கம்:
பிராமணர், பிராமணரல்லாதோர் பாகுபாடு காங்கிரசு கட்சியில் நிலவுவதைக் கண்டித்து பெரியார் விலகியபோது ம. சிங்காரவேலர் அவரை ஆதரித்தார். சோவியத் ஒன்றியம் சென்று வந்து ஈ.வெ.ரா. பெரியார் அதன் தாக்கத்தில் பொதுவுடைமைவாதக் கருத்துகளை ஏற்றுக்கொண்டு சுயமரியாதை இயக்கத்தினை சுயமரியாதை சமூக நீதிக்கட்சி என்று பெயர் மாற்றினார். அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்தளிப்பதில் ம. சிங்காரவேலர் உறுதுணையாக நின்றார். இந்த அமைப்பு தமிழ்நாடு முழுவதும் பரவ ம. சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

பெரியார் நடத்திய “குடியரசு” உள்ளிட்ட இதழ்களில் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஏராளமாக கட்டுரைகளையும் எழுதினார். அவரது கட்டுரைகள் எளிமையான நடையில் புரிந்துகொள்ளும் வகையில் இருந்தன.

ம. சிங்காரவேலர் பொதுவுடைமைவாதத் தத்துவத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டவர். காங்கிரசு பேரியக்கம் தொழிலாளர் அமைப்புகளை ஆதரிக்க வேண்டும் என்று 1920-இல் தலைமைக்குத் தந்தி அனுப்பினார். அது சென்னை சமதர்மவாதிகள் சார்பில் அனுப்பப்படுவதாக அதில் தெரிவித்திருந்தார். அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டங்களிலும். மாநாடுகளிலும் பொதுவுடைமைவாதப் பிரதிநிதியாகவே வாதிட்டார்.

தொழிலாளர்கள் பலமாகத் திகழ்ந்த சென்னை நகரில் இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினத்தை 1923 மே முதல் நாளன்று நடத்திக்காட்டினார். அதே நாளில் தொழிலாளர் விவசாயிகள் கட்சி அமைக்கப்படுவதாகவும் அறிவித்தார்.
அக்கட்சியின் குறிப்பிடத்தக்க கோரிக்கைகள் பின்வருமாறு.

தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள்:

- எட்டுமணிநேர வேலை
- சங்கம் அமைக்கும் உரிமை
- தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க கடைசி ஆயுதமாக வேலைநிறுத்தம் செய்யும் உரிமை
- கோரிக்கைகளை பரிசீலிக்க முத்தரப்பு பேச்சு வார்த்தைக் குழு
- குறைந்தபட்ச ஊதியம்
- அடிப்படை வசதிகளுடன் கூடிய சுகாதாரமான குடியிருப்பு வசதி
- மருத்துவம் மற்றும் ஆயள் காப்பீடு

- வருங்கால வைப்பு நிதி
- சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு
- இலவச மருத்துவ உதவி
- பேறுகால விடுப்பு
- ஒப்பந்த முறை ஒழிப்பு

**விவசாயிகளுக்கு**

- இலவச நீர்ப்பாசனம்
- சமீன்தார முறை ஒழிப்பு

**பொதுமக்களுக்கு:**

- ❖ அனைவருக்கும் வாக்குரிமை
- ❖ அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோர் தேர்தலில் போட்டியிட அனுமதி.

1925 ல் கான்பூர் நகரில் இந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதம் மாநாடு நடந்தபோது அதற்குத் தலைமை ஏற்று நடத்தித் தந்தார். அப்போது "வன்முறையற்ற மார்க்சியப் பாதை" யை வலியுறுத்திப்பேசினார். மேலும், "இந்தியாவுக்கேற்ற மார்ச்சியப் பாதையைத் திட்டமிட வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார். "காங்கிரசு கட்சியில் இருந்துகொண்டே பொதுவுடைமைவாதிகள் தனிப்பிரிவாக இயங்க வேண்டும்" என்றார். இதையொட்டி காங்கிரசு கட்சிக்குள் சமதர்ம பிரிவு உருவானது.

ம. சிங்காரவேலரின் வாழ்வும் சமூக பணியும்
ம சிங்காரவேலர் இளம் வயதிலேயே இந்து மதத்தில் நிலவும் வர்ண அமைப்பிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிருப்தி அடைந்திருந்தார். இதன் விளைவாக 1890 களிலேயே பல இடங்களில் பௌத்த சங்கம் அமைத்து வர்ண அமைப்புக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகப் பரப்புரை செய்தார்.

வசதி மிக்க குடும்பத்தில் பிறந்து சட்டம் பயின்ற சிங்கார வேலர் சென்னை மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினராகவும் அதன் சுகாதாரக் குழுவிலும் பணியாற்றினார். அப்போது குடிசைப் பகுதிகளில் கொள்ளை நோய் தாக்கம் அதிகமாக இருந்ததால் சுகாதாரம், கல்வி ஆகிய பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளித்தார்.

தொடர்ந்து குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடினார். இதன் அடிப்படையிலேயே காங்கிரசு இயக்கத்தில் செயலாற்றினார். பின்னர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார்.

தனது ஐம்பது வயதைக் கடந்தபின்பே அரசியலில் இறங்கினாலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக முதுமையையும் பொருட்படுத்தாமல் பகுத்தறிவு மற்றும் பொதுவுடைமைவாதக் கருத்துக்களையும் விடாது பிரசாரம் செய்தார்.

தனது ஐம்பது வயதைக் கடந்தபின்பே அரசியலில் இறங்கினாலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக முதுமையையும் பொருட்பாடுத்தமால் பகுத்தறிவு மற்றும் பொதுவுடைமைவாதக் கருத்துகளையும் விடாது பிரசாரம் செய்தார்.

ம. சிங்காரவேலர் தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி என்று நேசத்துடன் நினைவு கூறப்படுகிறார்.

திராவிடக் கொள்கைவாதம்

அறிமுகம்:
தமிழக அரசியல் சிந்தனையாளர்களில் இ.வெ.ரா. பெரியார் மிகச்சிறந்த சிந்தனையாளராக கருதப்படுகிறார். ஏனெனில் இவர்க தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதி ஆவார். இவரைப்பற்றி விரிவாக இப்பாடத்தில் காணலாம்.

பன்னெடுங்காலமாக தமிழகத்தைப் பீடித்திருந்த மூடப்பழக்க வழக்கங்கள், பெண்ணடிமை, சமூகப் பின்னடைவுகளுக்கு அறிவையும், சுய மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டு தனது நெடிய

வாழ்நாள் முழுவதும் போராடியவர். இதற்காகத் தந்தை பெரியார் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். பண்பாட்டு ரீதியாக அவர் வகுத்துத் தந்த திராவிடக் கருத்துக்கள் இன்று இந்தியா முழுவதும் ஒளி வீசுகிறது என்று புகழ்பெற்ற சமூக நீதி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஈ.வெ. ராமசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட தந்தை பெரியார் ஈரோட்டில் செல்வச் செழிப்புள்ள வணிகக் குடும்பத்தில் 1879-இல் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தனது

குடும்பத்திலும், சுற்றியுள்ள சமுதாயத்திலும் நிலவிய மூட நம்பிக்கையை எள்ளி நகையாடிய பெரியார், தொடக்கத்தில் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை. ஆனாலும்,ஈரோடு நகர்மன்றத்தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தார்.

காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினார். (காங்கிரசு இயக்கத்தில் மேட்டுக்குடியினரின் செல்வாக்கு கோலோச்சிய 1920-களில் அடித்தட்டு மக்களிடம் காங்கிரசு பேரியக்கத்தைக் கொண்டு சென்றதிலும், ஆலய நுழைவு போராட்டங்கள் வெற்றி பெற்றதிலும் பெரியார் பெரும் பங்காற்றினார். ஆனால், காங்கிரசு கட்சியில் வர்ணாசிரம கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் அதிலிருந்து விலகி நீதிக்கட்சியில் இணைந்து சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதற்குப் பின்னர் தந்தை பெரியாரின் பங்களிப்புகள் மற்றும் செயல்பாடுகள் இந்திய மற்றும் தமிழக அரசியலில் பிரிக்க முடியாத வரலாறாயின.

தேசத்தின் பெயரால் ஓர் குழு மக்களைச் சுரண்ட நினைத்தால் அத்தேசம் போராடிப்பெற்ற உண்மையான சுதந்திரம் அதுவல்ல என்றார் ஈ.வெ.ரா. பெரியார் பல்வேறு நிலைகளில் தேசம், இனம் மற்றும் தேசியவாதம் ஆகியவற்றை பெரியார் கடுமையாக விமர்சித்தார். தேசம்,தேசியவாதம், மற்றும் தேசிவாதம் ஆகியவை ஒரே மாதிரியான கருத்தாக்கங்களே என அவர் கருதினார். இவ்வேறுபாடுகளே அந்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த குடிமக்களின் சுயமரியாதையைக் குறிப்பதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுகையில் தமிழகத்தில் தேசியவாதத்தைப் பற்றி யாரேனும் பேசுகையில் அசர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்களா? என தாம் வியப்பதாகப் பெரியார் வினவுகிறார்.

**தேசியவாதம் என்பது சுருண்டலாகும்**:
இந்தியர்கள் மற்றும் தமிழர்களை மட்டுமல்லாமல் மக்களின் சுயமரியாதையைப் பற்றியும் கவலைப்படாத மனிதர்களும் உள்ளனர். அவர்கள் தங்களின் சுயநலன் மற்றும் மேம்பாட்டிற்காக மக்களை தேசம் மற்றும் தேசியவாதத்தினை நம்பவைத்து ஏமாற்றுவர், தேசம் மற்றும் தேசியவாதத்திற்காக சுயமரியாதை மறைக்கப்படுமானால் அது தேசத்திற்கு எதிரான குற்றமாகும் என்றார் பெரியார்.

தேசிய வாதம் என்பது ஓர் கற்பனையான உணர்வாகும். ஆகவே தேசிய உணர்வு என்பது வசதிமிக்க மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் மக்களை ஏமாற்றி அவர்களின் எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சதியாகும். அது ஓர் தவறான அனுமானமாகும். இதனை வசதிபடைத்த உயர் குடியினர் ஏழை சமுதாயத்தின் உரிமைகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

தேசியவாதம் என்பது மக்களுக்கு ஓர் மயக்கத்தையும் உணர்வுப்பூர்வமான வெறியையும் குறிக்கும் சொல்லாகி விட்டது எனக் கூறுகிறார்.

உலகளாவிய தேசியவாதத்திற்கு மறுப்பு

பெரியார் தனது இலங்கைப் பேருரையில்,

பெரியார் ஓர் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்த
பொரியாரின் படைப்புகள் மற்றும் மரபு:
சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக

தேசம், தேசியவாதம் என்பதைக் கடுமையாக எதிர்த்துள்ளார். “இந்திய தேசியவாதம்“ என்ற கருத்தை சிலர் தங்கள் ஆயுதமாகக் கையிலெடுத்த காலத்தில் தேசியவாதத்தைப் பற்றி பெரியார் எதிர்த்துப் பேசியுள்ளார். இந்திய தேசியவாதத்தை மட்டுமின்றி, உலகில் உள்ள மற்ற நாடுகளின் தேசியங்களையும் சான்றாகக் காட்டி, தேசியவாதத்தை மறுக்கிறார் பெரியார்.

”தேசியவாதம் என்பது முதலாளித்துவவாதிகள் தங்கள் தங்கள் மூலதனத்தை பெருக்கிக் கொள்ள ஏழை மக்களை பலி கடாவாக்குவதற்காகக் கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக, "இங்கிலாந்து நாட்டின் பணக்கார சமூகத்திற்கு அமெரிக்கா நாட்டின் பணக்கார சமூகத்துடன் மோதல் வந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள் அந்நாட்டின் ஏழைமக்களைப் பார்த்து "ஓ இங்கிலாந்து மக்களே! தேசபக்கதர்களே! தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது, என்று கூறி ஏழை சமுதாயத்தை தூண்டுகின்றனர்.

இவ்வகைப் பொய்யுரைகள் மூலம் மக்களைச் சுரண்டி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கிறார்கள் என்று கூறுகிறார்.

பல்வேறு தேசிய இனங்களையும் - தேசங்களையும் உள்ளடக்கிய நாடு ரஷ்யா, அந்த ஒன்றுபட்ட ரஷ்யாவில் எந்த வகையான ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்று கூறி, அந்த வகையான புரட்சிக்கு ஆதரவாக நின்றவர் பெரியார்.

"கடவுள், மதம், மற்றும் தேசியவாதம் ஆகியவை அடியோடு அழிக்கப்பட்ட நாடுகளில் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும். உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை. அது போன்ற நாடுகளில் கடவுள், மதம் மற்றும் தேசப்பற்று ஆகியவை இல்லை. ஆனால் மனித சமூக சமத்துவ சமுதாயமே அந்நாடுகளில் முக்கியமாக்க கருதப்பட்டது. அங்கு பணக்காரன் - ஏழை. முதலாளி – தொழிலாளி, அதிகாரி – குடிமக்கள் என்கின்ற பாகுபாடு காணப்படவில்லை. மேன்மக்களுக்கு சமத்துவ விரும்பிகளும் கடவுள் மற்றும் தேசியவிவாதத்திற்கு முன்னுரிமை தரும் தேசத்திற்கு சமமானவர்கள் அல்ல.

உலகில் உள்ள அனைத்து தேசங்களையும், தேசியங்களையும் கடுமையாக எதிர்த்தது போல "இந்திய தேசம்" என்பது, பல்வேறு தேசிய இனங்களை – பல்வேறு தேசங்களை இணைத்து உருவாக்கப்பட்ட ஒன்று – அந்த இணைப்பு ஒரு சிலரின் ஆதிக்கத்திற்குக் கருவியாக இருந்தால் அதையும் பெரியார் எதிர்க்கிறார்.

இந்தியாவில் வேறுபாடுகளின் தேசம்
"தேசம் என்ற கருத்தியல் இந்தியாவுக்குப் பொருந்துமா? என்ற கேள்விக்கு அவரே சிறப்பான பதில் அளித்துள்ளார்.

"மதராஸ்" என்பது ஒரு தனித் தேசம் அல்லவென்றும் அது தனித்து செயல்பட முடியாது என்றும் தோழர்கள் சிலர் சொல்கிறார்கள். மதராஸ் ஒரு தனி தேசமாக இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் "திராவிடம்". அதனுடைய நாகரிகம், பண்பாடு பழக்கவழக்கங்கள் ஆகியவை வங்காளம், பம்பாயிடம் இருந்து வேறுபட்டது. ஆங்கிலேயர் ஆட்சியால் ஆங்கில மொழி அறிமுகம் ஆகி இருக்கிறது. ஆங்கிலமும் ஆங்கிலேயர் ஆட்சியும் ஒழிந்து ஹிந்தி மொழி வந்தால் அன்றே மதராசானது ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு முதலிய ஏதோ ஒரு நாட்டுடன் சேர்ந்துவிடும்.

"இந்தியா ஒரு "தேசம்" என்று சொல்வதைவிட, "திராவிட நாடு" ஒரு "தேசம்", ஆந்திராநாடு ஒரு "தேசம் வங்காள நாடு ஒரு "தேசம்" என்று சொன்னாலும் பொருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக்கொண்டால் திராவிடநாடு என்று தனிப்பட்ட பண்பாடு கலை, மொழி, நாகரிகம், மற்றும் ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான வருடங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் கூறுவதை யாராலும் மறைக்க முடியாது.

மாறுபட்ட ஆட்சிகளின் கீழ் இருந்துவரும் ஒரு நாட்டை ஒரு "தேசம்" என்று சொல்லி எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தி அன்னியனிடமிருந்து விடுதலையடைந்த பின்னர் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை ஆளலாம் என்றால், இதை யார் ஒப்புகொள்வார்கள் என்று கேட்கிறார். பெரியார் முன்மொழிந்த "திராவிட தேசியவாதம்" முற்றிலும்ட பெருவாரியாக மத ஆதிக்கங்களுக்கு எதிராக இருந்தது.

**மொழிக் கொள்கை:**

”அவர்வர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சமதர்மக் குடியாட்சியில் பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடாது. பிரிவினை வாதத்திற்கான ஆயுதமாக மொழி பயன்படுத்தப்படக்கூடாது. மக்களின் அனைத்து தேவைகளுக்கும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்திருப்பது எதனையும் வெளிப்படுத்தாது. ஒருவேளை மொழியானது தேசியமயமாக்கப்பட்டால் மக்களுக்கு அதனால் பட்டினியில் இருந்து விடுதலை கிடைக்குமா? தெளிவாகக் கூறுவதெனில் தமிழ் உழைப்பாள்கள் தமிழ் பேசும் முதலாளிகளாலேயே சுரண்டப்படுகின்றனர்.

**சாதியற்ற சமுதாயம்:**

பெரியார் “தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே“ என்று தொடர்ச்சியான பரப்புரைகள், போராட்டங்களை நடத்தினார். பொதுச்செயல்திட்டம், பொதுவேலைத்திட்டம், இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை போன்றவற்றில் பல்வேறு வடிவங்களில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடினார்.

ஆனால், ஆதிக்க சக்திகள் மிக எளிதாக, தமிழன், தமிழ்த் தேசியவாதம், தேசிய இனம் போன்ற உணர்வுகளை ஏற்றி, சில தமிழ் தேசியத் தலைவர்கள் மூலமாக மீண்டும் தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்ட போது, ஒருகால கட்டத்தில் பெரியார், இந்தத் திராவிடநாடே கூட வேண்டாம். சாதி ஒழிப்பே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரின் சிந்தனைத் தொகுப்புகள் வழியாக அறியலாம்.

”திராவிடநாடு பெறாவிட்டாலும் சரி சில ஆதிக்க சக்திகளை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி முதலாளித்துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி சாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் போதும் என்கிறார். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது” என்று 1950 களின் தொடக்கத்தில் அவர் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டள்ளார்.